
சுவடி : 40
ஏடு : 12
சூன் 2017
*
ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**
*
ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**தமிழேந்தி**
**வாலாசா வல்லவன்**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி.துரைசித்தார்த்தன்**
*
அலுவலக
நிருவாகப் பொறுப்பு
**ப. வடிவேலு**
94441 05892
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
**'சிந்தனையாளன்'**
2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர்,
எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு,
அம்பத்தூர், சென்னை - 53.
தொடர்புக்கு :
94448 04980
044-2625 2119
மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
**www.keetru.com**
*



# 'இந்தி மட்டுமே இந்தியாவின் அலுவல் மொழி' இந்திய அரசமைப்பின் பின் கட்டளை விதி இது! இந்தி அலுவல் மொழி ஆகாமல் தடுத்திட, இந்தியா முழுவதிலும் கோரிக்கை வைப்போம்!



இந்தியாவிலிருந்து பர்மா 1936இல் பிரிந்தது.

1937இல் இந்தியா 11 மாகாணங்களைக் கொண்டிருந்தது. அவற்றுள் ஒன்று சென்னை மாகாணம்.

சென்னை மாகாணத்தில் முதலாவது தேர்தல் 1920 நவம்பரில் நடந்தது.

17.12.1920 முதல் 1926 வரையிலும், பின்னர் 1930 முதல் 1937 வரையிலும் "தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம்" என்கிற நீதிக்கட்சி - திராவிடர் கட்சி ஆட்சி புரிந்தது.

1937 தேர்தலில் காங்கிரஸ் கட்சி 159 இடங்களில் வென்றது; நீதிக்கட்சி 21 இடங்களில் வென்றது; மற்ற கட்சிகள் 35 இடங்களை வென்றன.

மொத்தம் 215 சட்டமன்ற உறுப்பினர்கள்.

சட்டமன்ற மேலவையில் 46 உறுப்பினர்கள்.

10 பேர்கள் கொண்ட காங்கிரசு அமைச்சரவை அமைக்கப்பட்டது.

சென்னைப் பல்கலைக் கழகப் பட்டதாரிகள் தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்டு உறுப்பினராக வந்த சி. இராச கோபாலாச்சாரியார் மாகாணப் பிரதமர் (Premier) ஆனார்.

1938-1939ஆம் கல்வி ஆண்டில் 9ஆம் வகுப்பில் (IV Form) தாய் மொழி வழியில் கல்வி தரப்பட அவர் ஆணையிட்டார். அடுத்தடுத்த ஆண்டுகளில் X-ஆம் வகுப்பிலும், XI-ஆம் வகுப்பிலும் தாய்மொழிவழியில் கல்வி தரப்படும் என்று அதே ஆணையில் குறிப்பிட்டார்.

**அத்துடன் Form I என்கிற 6ஆம் வகுப்பு முதல் Form III என்கிற 8ஆம் வகுப்பு வரையில் 'இந்துஸ்தானி' ஒரு மொழிப்பாடமாக-தேர்வுக்குரிய கட்டாயப் பாடமாகக் கற்பிக்கப்படும் என்றும் 21-4-1938இல் ஆணையிட்டார்.**

இந்தியாவில் 1937இல் நிலவிய 11 மாகாணங்களில், சென்னை மாகாணப் பள்ளிகளில் மட்டுமே - 125 பள்ளிகளில் மட்டும் - இந்தி கட்டாயப் பாடமாக அறிவிக்கப்பட்டது.

அந்த கட்டாயப் பாடமாகத் திணிக்கப்பட்ட இந்துஸ்தானியை சென்னை மாகாணத் திராவிட மக்கள் எதிர்த்தனர். தமிழகம் தவிர்த்த மற்ற மொழி மாநிலங்களில் போராட்டம் எதுவும் நடைபெறவில்லை. அதற்கான எந்த ஏற்பாட்டையும் நீதிக்கட்சி செய்யவில்லை.

3.9.1939இல் இரண்டாம் உலகப் போர் மூண்டது.

“தங்கள் கட்சியைக் கலக்காமல் இந்தியாவை இரண்டாம் உலகப் போரில் ஈடுபடுத்தியதாகக் கூறி” எல்லா மாகாணக் காங்கிரசு அரசுகளும் பதவியி லிருந்து விலகின.

சென்னையில் இந்தி எதிர்ப்புப் போரில் சிறைப்படுத் தப்பட்ட 1300க்கும் மேற்பட்ட ஆண், பெண், குழந்தை களை விடுதலை செய்யாமலே, சென்னை மாகாண அரசு பதவி விலகியது.

இந்துஸ்தானி கற்பிக்கப்படும் ஆணையையும் காங்கிரசு அரசு இரத்துச் செய்யவில்லை.

தமிழ் அறிஞர்களும் புலவர்களும் தொடங்கிய இந்தி எதிர்ப்புப் போருக்கு ஈ.வெ.ரா. தலைவரானார்.

**ஈரோட்டிலிருந்து தொண்டர்களை வரச்செய்து போராட்டத்தை நீட்டித்தார். இதை, பெரியார் எனக்குச் சொன்னார்.**

அப்போதும் கட்டாய இந்தி நீக்கப்படவில்லை.

1940இல்தான், அப்போதைய ஆங்கிலேய ஆளுநர் கட்டாய இந்தியை நீக்கினார்.

“திராவிட நாடு திராவிடருக்கே!” என 1939இல் பிரி வினை முழக்கம் எழுப்பிய நீதிக்கட்சி, 1940இல் திருவாரூரில் திராவிட நாடு பிரிவினை மாநாடு நடத்திய நீதிக்கட்சி-அதன் பிறகும்கூட, ஆந்திரம், கருநாடகம், மலையாளம், ஒரிசா பகுதிகளில் பிரிவினை பற்றிய பரப்புரையும் செய்யவில்லை; கட்சிக் கிளைகளையும் அமைக்கவில்லை; போராட்டங்களையும் நடத்தவில்லை. நிற்க.

இந்தியாவுக்கு விடுதலை தரப்போவதாக 1946 சூலையில் ஆங்கிலேயர் அறிவித்தனர்.

ஆங்கிலேயர் காலத்தில் 1946இல் தேர்தல் நடந்தது. 33 கோடி மக்கள் இருந்த இந்தியாவில், மத்திய சட்ட சபைக்கு வாக்களிக்க 4 விழுக்காட்டுப் பேருக்கே வாக்குரிமை இருந்தது; மாகாணச் சட்டசபைகளுக்கு வாக்களிக்க 12 விழுக்காட்டுப் பேருக்கு மட்டுமே வாக்குரிமை இருந்தது.

இதை வைத்து மத்திய சட்டசபைக்கும், மாகாணச் சட்டசபைகளுக்கும் 1946இல் தேர்தல் நடத்தினான், வெள்ளையன்.

**காங்கிரசு, 1935இல் வாக்குக்கொடுத்தபடி, சுதந்தரம் வந்த பிறகு, வயது வந்த எல்லோ ருக்கும் வாக்குரிமை கொடுத்து அதன் பிறகு சுதந்தர இந்தியாவில் தேர்தலை நடத்தி இருக்க வேண்டும்.**

எப்போது அதிகாரம் வரும் வரும் என்று ஆவலோடு காத்திருந்த காங்கிரசுத் தலைவர்கள், 15.8.1947இல் சுதந்தரம் வருவதற்கு முன்னரே, 9.12.1946இலேயே, சுதந்தர இந்தியாவுக்கான அரசியல் சட்டத்தை எழுதத் தொடங்கிவிட்டனர்.

இதை அப்போதே கண்டித்தவர் ஈ.வெ.ரா.; மட்டுமே கண்டனம் செய்தது திராவிடர் கழகம் மட்டுமே.

இந்த எதிர்ப்பை இவர்கள் இந்திய அளவில் செய் திருக்க வேண்டும். ஏன்?

1935ஆம் ஆண்டைய இந்திய அரசுச் சட்டம், மாகா ணங்களுக்குத் தன்னுரிமை (Autonomy) வழங்கி யிருந்தது.

**கல்வி, வேளாண்மை, சாலை, சுகாதாரம், பொதுப்பணி இப்படிப்பட்ட எல்லாத்துறைகளிலும் மாகாணங்களுக்குத் தன்னுரிமை அதிகாரம் இருந்தது.**

அப்படித் தன்னுரிமை இருந்த காலத்திலேயே சென்னை மாகாணத்திலே மட்டும், இந்தியைத் திணிக்கவும், மீண்டும் 1948இல் சென்னைப் பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப் பாடமாகத் திணித்ததற்கும் என்ன கார ணங்கள் என்று இவர்கள் சிந்தித்திருக்க வேண்டும்.

ஏன்? என்ன காரணங்கள்?

**இந்தியத் துணைக்கண்டத்திலேயே சென்னை மாகாணத்தில்தான் பார்ப்பனரின் சமூக - கல்வி - உத்தியோக-நிலப்பிரபுத்துவ ஏகபோக ஆதிக்கத்தை எதிர்க்கும் இயக்கம் 1912இல் நிறுவப்பட்டது. கெட்டியான அடித்தளத்தோடு அமைக்கப்பட்டது. 26-12-1926இல், பார்ப்பனர் அல்லாதார் சுய மரியாதை இயக்கம் ஈ.வெ.ரா.வின் முயற்சியால் வீறுகொண்டு எழுந்தது!**

**அது பார்ப்பனப் புரோகிதத்தை எதிர்த்தது; பார்ப்பனிய மதச் சடங்குகளை எதிர்த்தது; சமற்கிருதம் தேவபாஷை என்பதை எதிர்த்தது. மனித சமத்துவ உரிமையை மறுக்கும் எல்லா வற்றையும் எதிர்த்தது.**

இவ்வளவையும் ஆந்திரம், கருநாடகம், கேரளம், மகாராட்டிரம், உத்தரப்பிரதேசம், பீகார், பஞ்சாப் முதலான எல்லா மாகாணங்களுக்கும் 1940 முதல் 1967க்குள் நாம் கொண்டு சென்றிருக்க வேண்டும்.

மீண்டும் கட்டாய இந்தியை ஒழிக்க வேண்டி இந்திய தேசியக் கொடியை எரிக்கும் போராட்டத்தைத் தந்தை பெரியார் அறிவித்தார். அது, காமராசர் ஆட்சிக்காலம்; 1955 சூலை 1 அன்று எரிக்கத் திட்டம்.

1955 சூன் 29 மாலை காமராசர் பெரியாரைக் கண்டு பேசினார். "இந்தி கட்டாயப் பாடம் என்பது விருப்பப் பாடம் ஆக்கப்பட்டது". அதன் விளைவாக சூன் 30 மாலை தேசியக் கொடி எரிக்கும் போராட்டத் தைத் தள்ளி வைத்தார், பெரியார்.

ஆந்திர மாநிலம் 1953இல் சென்னையிலிருந்து பிரிந்தது. அப்போது ஏற்படுத்தப்பட்ட மொழிவழி மாநிலக் குழுவின் பரிந்துரைப்படி, 1.11.1956இல் தமிழகம், கேரளம், கர்நாடகம் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டன.

அப்போது உயர்நிலைப் பள்ளிகளில் 1) தாய்மொழிப் பாடம், 2) ஆங்கிலமொழிப் பாடம், 3) இந்திமொழிப் பாடம் ஆகிய மூன்று மொழிகளைக் கற்கும் கட்டாயத் திட்டம் அறிவிக்கப்பட்டது.

**தென்மாநிலங்களில் மூன்றும், மற்ற இந்தி பேசாத மாநிலங்களும் மும்மொழித் திட்டத்தை 1956இலேயே ஏற்றுக்கொண்டன. தமிழகப் பள்ளி களில் தேர்வுக்குரிய விருப்பப் பாடமாக இந்தி கற்பிக்கப்பட்டது. ஆனால் பள்ளியிறுதித் தேர்வுக்கு, இந்தி மொழியில் மதிப்பெண் சேர்க்கப்படாது என்று விலக்கு இருந்தது.**

2.10.1963இல் கு. காமராசர் பதவி விலகினார். எம். பக்தவத்சலம் தமிழக முதல்வரானார்.

அவர் 6ஆம் வகுப்பு முதல், ஒரு பிரிவு ஆங்கில வழியில் நடத்தப்படும் திட்டத்தை அறிவித்தார்.

அதுமுதல் அரசு உயர்நிலைப் பள்ளிகளில் 6, 7, 8, 9, 10, 11 வரை ஆங்கிலத்தில் ஒரு பிரிவு தொடங்கப் பட்டது. இந்தி விருப்பப் பாடமாகவே நீடித்தது. இவை உயர்நிலைப் பள்ளிக் கல்வியில் தமிழகத்தில் இந்தி பெற்றிருந்த நிலை.

**"இந்தி மட்டுமே இந்தியாவின் அலுவல் மொழி என்பதை 26.1.1965இல் வரும்" என்கிற கட்டளை விதி 343 என்பது, அரசமைப்புச் சட்டத்தில் அப்படியே 26-1-1950 முதல் நீடிக்கிறது.**

அந்த-இந்தி அலுவல் மொழி என்பதை எதிர்த்துத் தான் மாணவர்கள், தன்னிச்சையாக, 25.1.1965இல் முதலமைச்சரை நேரில் பார்த்துக் கோரிக்கை விண்ணப்பம் தர, கோட்டையை நோக்கி ஊர்வலமாகச் சென்றனர்.

மக்கள் நாயக நாட்டில் மக்களின் கோரிக்கை விண் ணப்பங்களை அமைச்சர்கள் வரவேற்று ஏற்பதும், பேச்சுவார்த்தை நடத்துவதும் மக்களின் உரிமை; அரசின் கடமை.

ஆனால் தமிழக முதல்வர் மாணவர் குழுவைச் சந்திக்க மறுத்ததுடன், மாணவர்கள் காவல் துறையால் தாக்கப்பட்டனர்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர் இராசேந்திரன் காவல்துறையின் துப்பாக்கிச் சூட்டுக்கு இரையானார்.

அண்ணாமலை நகர் போர்க்களம் ஆனது. திருச்சி, சேலம், கரூர், கோவை போன்ற நகரங்களிலும் "இந்தி அலுவல் மொழி எதிர்ப்புக் கிளர்ச்சி" பரவியது.

அதை அகில இந்திய மாணவர் கிளர்ச்சியாக மாண வர்கள் அன்று வடிவமைக்கவில்லை.

இடையில் தமிழக மாணவர் கிளர்ச்சியில் நுழைந்த திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரசு ஆட்சியை ஒழிக்க ஏற்ற வடிவில் அக்கிளர்ச்சியை அமைத்தது; வன்முறை வெடித்தது.

மாணவர்கள், பொதுமக்கள், சில காவலர்கள் உயிரி ழந்தனர்.

இந்தி பற்றி தி.மு.க. சார்பில், ஈ.வெ.கி. சம்பத் எடுத்த முயற்சியால், "இந்தி பேசாத மக்கள் விரும்புகிற வரையில் ஆங்கிலம் இணை அலுவல் மொழியாக (Associate Official Language) நீடிக்கும்" என்கிற ஆட்சிமொழிச் சட்டம் ஒன்றைச் செய்தார்கள். இதனை ஒரு தீர்வாகத் தமிழகமும், மற்ற இந்தி பேசாத மாநிலங் களும் தமிழகக் கட்சிகளும் ஏற்றுக்கொண்டது மாபெரும் தவறு.

ஏன் எனில், அது, முதலில் அரசமைப்புச் சட்ட விதி 343க்குத் துணைவிதி அல்ல.

**இப்போது உள்ள "இந்தி மட்டுமே அலுவல் மொழி" என்பதை-அந்தச் சட்டத்தை அரசமைப்பி லிருந்து நீக்கிவிடவில்லை.**

6.3.1967இல் ஆட்சிக்கு வந்த திராவிட முன்னேற்றக் கழகம், விதிகள் 343 முதல் 351 வரை நீக்கப்பட வேண்டுமென ஒருதடவைகூட முயற்சிக்கவில்லை.

தமிழக உயர்நிலைப் பள்ளிகளிலிருந்த - "இந்தி ஒரு விருப்பப் பாடம் என்பதை மட்டும்" 1967இல் நீக்கினார்கள். அதிலேயே மக்கள் மனம் குளிர்ந்தார்கள்.

திராவிட இயக்கம் தவிர்த்த எவருக்கும் இவ்வளவும் விளங்காது. மகாத்மா புலேவும், வடலூர் வள்ளலாரும், ஒரே காலத்தவர்கள்.

இருவரும் பார்ப்பன மத எதிர்ப்பாளர்கள்.

இங்கே தமிழகத்தில், 1926 முதல் 1973ஆம் ஆண்டு வரை 47 ஆண்டுக்காலம் முழுமூச்சாக இப்பணியைச் செய்தார், தந்தை பெரியார்.

அவருடைய பிறங்கடைகளான தி.மு.க.வினர், 26.1.1965இல் எடுத்த இந்தி ஆதிக்க எதிர்ப்பைக் காட்டித் தூக்கிப் பிடித்தவர்கள் - ''எப்போதும் ஆங்கிலமே - ஒருபோதும் இந்தி வேண்டாம்'' (English ever; Hindi never) என்பதை அடியோடு கைவிட்டுவிட்டு, ''**எல்லா இந்திய மொழிகளும் இந்திய அரசு அலுவல் மொழிகள்-கல்வி மொழிகள்-தேர்வு மொழிகள் - வழிபாட்டு மொழிகள் - வழக்குரை மொழிகள் என ஆக்கியே தீருவோம்'' என முழங்கியிருக்க வேண்டும்.**

தந்தை பெரியார் தமிழில் அறிவியல்பாட வளர்ச்சி இல்லையே - நேரிடையாக அறிவியலை நன்கு வளர்ந்த ஆங்கில மொழி வழியில் கற்றால் போதும் என்று அறிவித்தது முற்றிலும் தவறு; நானும் அவருடைய நிலைபாட்டை 1965இல் ஆதரித்து, திருச்சி மாவட்ட ஊர்தோறும் பயிற்சி வகுப்பு நடத்தியது மிகத் தவறானது. நிற்க.

1978 முதல் பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடுக்காக 40 ஆண்டுகளாக இந்தியக் களத்தில் நிற்கும் நானும் எங்கள் தோழர்களும்-சட்டம், இந்துச் சட்டம் அரசியல் சட்டம், தீர்ப்புகள், மொழிகள் என்கிற எது பற்றியும் நாம் நன்றாகத் தெரிந்துகொண்டு, பிறமொழியாளர்களிடம் எடுத்துச் சொன்னால், அப்போதுதான் அவர்கள் புரிந்துகொள்ளுகிறார்கள் என்பதைக் கண்டோம்.

இன்று நாம் 70 அகவை உள்ள பெரியாரை 52 ஆண்டுகள் பார்த்தோம்; கேட்டோம்; பலவற்றைப் புரிந்துகொண்டோம்; போராடினோம்.

புலே மறைந்த பிறகு - சாகு மகாராஜா மறைந்த பிறகு - அம்பேத்கர் மறைந்த பிறகு, பல ஆண்டுகள் பெரியார் நம்மிடையே இருந்தார்.

17.10.1991
18.10.1991
19.10.1991

ஆகிய மூன்று நாள்களிலும், புதுதில்லியில், மவ்லங்கர் மன்றத்தில் - "Angrezi Hatao!" "Hindi Down! Down" ''ஆங்கிலம் ஒழிக'', இந்தி ஒழிக!''என்று 500 தமிழர்கள் முழங்கினோம்.

பெரியாருடைய-அம்பேத்கருடைய கொள்கையை, அப்படியே - முழுமையாக 2020 வரை இந்திய நாடெங்கும் நாம் பரப்பினாலொழிய :

1. இந்தி மட்டுமே இந்திய அரசின் அலுவல் மொழி என்பதையும்;
2. இந்தியா முழுவதிலும் சமற்கிருதம், இந்துஸ்தானி, சோதிடம், வாஸ்து, கல்யாணமந்திரம், கருமாதி மந்திரம், பேயோட்டும் மந்திரம் இவற்றைப் பள்ளிகள் முதல் பல்கலைக்கழகம் வரையும் 2019க்குள் மோடி அரசினால் திணிக்கப்படுவதிலிருந்தும் நாம் மீள முடியாது; முடியாது. அதை நாளது வரையில் எவரும் எதிர்க்கவோ, மீட்கவோ இல்லை.

ஏன்? ஏன்?

I. 1935ஆம் ஆண்டைய இந்திய அரசுச் சட்டம் (The Government of India Act, 1935) மாகாணங்களுக்கு வழங்கியிருந்த தன்னுரிமை அதிகாரங்களை (autonomous powers) 3.1.1977 முதல் அடியோடு மத்திய அரசு பறித்துக் கொண்டது.

II. 1975-1977 அவசர கால ஆட்சிக்குப் பிறகு மானிட உரிமைகள் பறிப்பும், மாகாண உரிமைகள் பறிப்பும் கேட்பாரின்றி நடக்கின்றன.

III. இவற்றைவிடவும் கொடுமையானது, இந்திய அரசமைப்பின் Part XVII - 17ஆம் பகுதி ஆகும்.

அது என்ன கூறுகிறது?

அலுவல் மொழி (Official Language) :

Chapter I - Language of Union

பகுதி I - ஒன்றியத்துக்கான மொழி

Articles

343 - Official Language of Union (ஒன்றியத்தின் அலுவல் மொழி)

344 - Commission and Committee of Parliament on Official Language (அலுவல் மொழி பற்றி நாடாளுமன்ற ஆணையமும், குழுவும்)

**விதி 343 - Official Language of the Union (ஒன்றியத்துக்கு உரிய அலுவல் மொழி) :**

**''இந்திய ஒன்றியத்துக்கான அலுவல் மொழியாக தேவநகரி வரி வடிவிலான இந்தி இருக்கும்'' என்றே உள்ளது.**

இப்படி, 343 முதல் 351 வரை உள்ள விதிகள் இந்தப் பகுதியின்கீழ் உள்ளன.

**இந்த ஒன்பது விதிகளிலும் சொல்லப்படுவது, ''அலுவல் மொழி என்கிற அன்றாட அலுவலகப் பணிகளைச் செய்யப் பயன்படுத்துவதற்கு உரிய மொழி'' என்பது மட்டுமே ஆகும்.**

அதாவது இந்திய அரசின் நேரடி நிருவாகத்திலுள்ள அஞ்சல், தொடர் வண்டி, ஆயுள் காப்பீடு, வருமான வரி, சுங்கம், தொலைப்பேசி மற்றும் உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றங்களை மட்டுமே குறிப்பதாகும்.

தொடக்கப் பள்ளியிலோ, நடுநிலைப் பள்ளியிலோ, உயர்நிலைப் பள்ளியிலோ, கல்லூரியிலோ, ஒரு பாட மொழியாகவோ, சிறப்பு மொழிப் பாடமாகவோ இந்தி அல்லது சமஸ்கிருதமோ அல்லது இரண்டு மொழிகளுமோ கற்பிக்கப்படலாம், அல்லது கற்பிக்கப்பட வேண்டும் என்று எந்த விதியிலும் காணப்படவில்லை.

**இதுபற்றி இந்தியாவிலுள்ள ஒவ்வொரு குடி மகனும் மிகவும் கவலைப்பட வேண்டும். ஏன்?**

**இந்தியாவில், 12ஆம் வகுப்புக்கு மேற்பட்ட உயர்படிப்பு முழுவதையும் அவனவன் தாய்மொழி யில்தான் கற்கவேண்டும். ஆனால் ஆங்கில மொழி வழியில் கற்கிறான். ஆங்கில வழியில் படிப்பது மூடத்தனம்; மடத்தனம்; சுயமரியாதை அற்றத்தனம்.**

**இவற்றுக்கு மாறாக, தமிழ்நாட்டு எல்லைக்குள் இருக்கிற அஞ்சல் துறை, தொடர் வண்டித்துறை, வருமான வரி, சுங்கம், உயர்நீதிமன்றம் எல்லா இடங்களிலும் ஆங்கிலமோ, இந்தியோ, சமற்கிருத மொழியோ அன்றாட அலுவல் செய்யும் மொழி யாக இருக்கக் கூடாது. இங்கெல்லாம் தமிழ் நாட்டில் தமிழ், ஆந்திரத்தில் தெலுங்கு, கருநாட கத்தில் கன்னடம், பீகாரில் இந்தி, ஒடிசாவில் ஓரியா என-அந்தந்த மாநிலப் பேச்சு மொழியே இங்கெல்லாம் அலுவல் மொழியாக இருக்க வேண்டும்.**

**இந்தியாவிலுள்ள பல கட்சிகளின் தலைவர் கள், மொழி அறிஞர்கள், ஆசிரியர் கழகங்கள், பேராசிரியர்கள், மாணவர் சங்கங்கள், ஊடக வியலாளர்கள் எல்லோரையும் உள்ளிட்ட 8 பேர் (அ) 10 பேர் கொண்ட 4 அல்லது 5 தமிழர் குழுக்கள் இந்தியா முழுவதிலும் பயணிக்க வேண்டும். இது, மொழிக் கொள்கை பற்றிய கருத்து மாற்றத்துக்கு வழிவகுக்கும்.**

**இவற்றைத் தமிழ்நாட்டில் மட்டும் முழங்குவ தும், பேரணி நடத்துவதும், அறைகூவல் விட்டுப் பேசுவதும் பயன்படுமா என்று சிந்தியுங்கள்!**

**1-6-2017** **வே.ஆனைமுத்து**

திருச்சியில்

## தொடர் முழக்கப் போராட்டம்

தமிழக மக்கள் முன்னணியினர் திருச்சி தொடர் வண்டி நிலையம் அருகில் 29.4.2017 சனிக்கிழமை காலை 10 மணிமுதல் மதியம் 2 மணிவரை தொடர் முழக்கம் செய்தனர்.

1. இந்திய தேசிய இனம் என்று ஒன்றில்லை! தமிழர்களை இந்தியத் தேசிய இனத்தினர் என்று பதியக்கூடாது! தமிழர்கள் தமிழ்த்தேசிய இனத்தினரே! பறைசாற்று வோம்.
2. தமிழ்நாட்டுக் கனிம வளங்களைக் கொள்ளையடிக்க வரும் இந்திய-பன்னாட்டு நிறுவனங்களை விரட்டி யடிப்போம்!
3. தண்ணீரை வணிகப் பொருளாகியிருக்கும் நிறுவனங் களை எதிர்ப்போம். தண்ணீரை இயற்கைப் பொருளாகப் பாதுகாப்போம்!

ஆகிய மூன்று அறிவிப்புகளை முன்வைத்து தொடர் முழக்கப் போராட்டம் நடைபெற்றது.

தமிழக மக்கள் முன்னணி தலைவர் தோழர் அரங்க. குணசேகரன் தலைமையில், தமிழக மக்கள் முன்னணி பொதுச் செயலர் தோழர் பொழிலன் மூன்று முழக்கங்கள் குறித்து அறிமுக உரை நிகழ்த்தினார்.

தோழர்கள் நிலவழகன், தமிழ்வாணன், கண.குறிஞ்சி, வழக்கறிஞர் கென்னடி, இரா. கலியபெருமாள், வழக்கறிஞர் அங்கயற்கண்ணி, காஞ்சி அமுதன், பாவலர் கடவூர் மணிமாறன், பாவலர் எழில்வாணன், திருக்குறள் பாவலர்-நாவை-சிவம், தோழர் செந்தமிழ் வேந்தன், தோழியர் இறை.பொற்கொடி, தோழர் பழனிவேலு, பச்சைத் தமிழகம் தலைவன் சுப. உதயகுமார், முதுபெரும் பெரியார் பெருந் தொண்டரும், மா.பெ.பொ.க. பொதுச் செயலாளருமான தோழர் வே. ஆனைமுத்து கலந்துகொண்டு நீண்ட உரை நிகழ்த்தினார்.

திராவிடர் விடுதலைக் கழகம், தமிழ்த் தேச நடுவம், தமிழ் உரிமைக் கூட்டமைப்பு, பாவாணர் தமிழியக்கம், உலகத் தமிழ்க் கழகம், தமிழக மக்கள் முன்னணி, மே 17, தமிழ்நாடு பொதுவுடைமைக் கட்சி, விடுதலைத் தமிழ்ப்புலிகள் கட்சி, விடுதலை சிறுத்தைகள் கட்சி, தந்தை பெரியார் திராவிடர் கழகம், காவிரி ஆறு பாதுகாப்பு இயக்கம், தமிழர் விடியல் கட்சி, தமிழ் தமிழர் இயக்கம், தமிழர் கழகம், பாலாறு பாதுகாப்புக் கூட்டியக்கம் ஆகிய இயக்கத் தோழர்களும் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினர். திருச்சி. ந. கருணாகரன், துரை. சித்தார்த்தன், வன. கோவிந்தசாமி, வி.கே. மணிமாறன் உள்ளிட்ட தோழர்கள் தொடர் முழக்கப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

தோழர்கள் சமர்பா குமரன், குழந்தை ஈகவரசன் - எழுச்சி இசை முழக்கம் செய்தனர். விழாவில் தமிழ் உணர்வாளர்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.

**- மங்கலம் அரசன்**

# 93ஆம் அகவையில், நான்! கைகுலுக்கி வரவேற்பேன், வாருங்கள்!



**த**மிழர்களுக்குத் தன்மான உணர்வை ஊட்டிய தந்தை பெரியார் அவர்கள் 94 ஆண்டுகள் 98 நாள் கள் நம்மிடையே வாழ்ந்தார். அவருடைய குடும்ப உறவில், தம் அண்ணன் மருமகன் தாதம்பட்டி ம. இராசு அவர்கள் 95 வயது 6 மாதங்கள் வாழ்ந்து மறைந்தார்.

மானிட வாழ்வு 120 ஆண்டுகள் வரை என்று ஒரு கணக்கை மானுட இயலாளர்கள் சொல்கிறார்கள்.

அதற்கு ஏற்ப, வடக்கு இத்தாலியில் வெர்பனியா என்னும் 2000 மக்கள் வாழும் ஊரில் **எம்மா மொரானோ** (Emmamorano) என்ற அம்மையார், 29.11.1899இல் பிறந்தவர், 117 ஆண்டுகள் 137 நாள் கள் நல்ல உணர்வோடு வாழ்ந்து, 15.4.2017 சனிக் கிழமை மறைவுற்றார். ("The Hindu", 17.4.2017).

திராவிட இயக்கத்தினர் 90 - 95 - 100 அகவை உள்ளவர்கள் நம்மிடையே நலமாகச் சிலர் இருக் கிறார்கள்.

எடுத்துக்காட்டாக, கடலூர் சூரப்பநாய்க்கன் சாவடி யில், திருமேனி என்பவருக்கு வாழ்க்கைப்பட்ட அலமேலு அம்மாள் அவர்கள் தம் இளைய மகன் செங்குட்டுவன் இல்லத்தில், கடலூர் மாவட்டம் குள்ளஞ் சாவடி அடுத்த ஆயிக்குப்பத்தில் 106 அகவையில் கட்டிலில் உட்கார்ந்து, 26.6.2015 அன்று என்னுட னும் தம் மூத்த மகன் பெங்களூரில் வாழும் அன்புக் குரிய தி.மு.க. தோழர் - தன்மான மறவர் தி. கிள்ளி வளவனுடனும் கணீர் கணீர் என்று பேசினார்.

தம் அன்னையார் 108 அகவையில் நலமாக இருப்பதாக, மகிழ்ச்சி பொங்கிட, சென்னையில், நேரில் 13.5.2017 இரவில் அதே தி. கிள்ளிவளவன் என்னிடம் கூறினார். 17.5.2017 பகலில், தி. செங்குட்டுவனின் தொலைப்பேசி வழியாக அம்மையாரின் நலம் உசாவி னேன்.

திராவிட இயக்க மூத்தவர் பேராசிரியர் க. அன்பழகன் 95 முடிந்து 96 அகவையிலும், மூத்த அரசியல் அறிஞர் கலைஞர் மு. கருணாநிதி 93 முடிந்து 94 அகவையி லும் நலமாக உள்ளனர்.

நான், 21.6.2017 அன்று 92 முடிந்து 93 அகவை யில் நுழைகிறேன்.

நீரிழிவு நோயால் துன்புறும் நான் ஒருநாளில் 8 மணிநேரம் படிக்கிறேன். இரவு 9 முதல் 11 மணி வரை (அல்லது) காலை 4 முதல் 7 மணிவரை கட்டுரை கள் எழுதுகிறேன். **இப்படியே 94, 95 அகவை வரை வாழ்ந்து, தந்தை பெரியாரின் விரிவான வர லாற்றை எழுதி முடித்திட வாய்ப்பாக - நீண்ட பயணங்கள் போவதை 21.6.2017 முதல் நிறுத்தி விட்டேன்.**

**என் பயணப் பணிகளை என் கட்சித் தோழர் கள் மேற்கொள்வார்கள் என மனமார நம்புகிறேன்; அதை நிறைவேற்றிட முன்வரக் கோருகிறேன்.**

என் அன்புத் துணைவியார் 81ஆம் அகவையில், உடல் நலிவுடன் நடமாடுகிறார். என் மக்களும் மருமக் களும் எனக்குத் தோன்றத் துணையாக இருக்கின்றனர்.

தத்துவத்தில் தெளிவும், தத்துவ வெற்றிக்கு என் உழைப்பைத் தருவதும் என் கடன் என்பதில் உறுதி யுடன் உள்ளேன். அவை என் உடலையும் உயிரை யும் காப்பாற்றும் எனத் திடமாக நம்புகிறேன்.

மார்க்சியப் பெரியாரிய அம்பேத்கரிய நெறி நின்று, உண்மையான மதச் சார்பற்ற ஒப்புரவுக் குடிஅரசாக - சமதர்மக் கூட்டாட்சியாக இந்தியாவை அமைத்திட நாம் பாடுபடுவோம்.

**கைகூப்பி வணங்கி வரவேற்பதையும், வழியனுப்பு வதையும் கைவிடுவோம். அவ்வழக்கம் உயர்வை நிலை நாட்டுகிறது.**

**ஆணாயினும், பெண்ணாயினும், அகவை வேறு பாடு இன்றிக் கைகுலுக்கி வரவேற்போம்; கை குலுக்கி வழியனுப்புவோம்! மானிட சமத்துவம் நிலை பெற இவை உதவும்.**

இருந்த இடத்திலிருந்தே உங்கள் ஒவ்வொருவரு டனும் கைகுலுக்கி, நீங்கள் அனைவரும் நலமுடன் வாழ மனமார விழைகிறேன்,

அம்பத்தூர் — அன்பன்
21.6.2017 — **வே. ஆனைமுத்து**

# இந்தியா ஒரே நாடாக - ஒரே ஆட்சியின்கீழ் இருந்திடத் துணைநிற்கும் கூறுகள் எவையெவை?

இந்தியா ஒரு துணைக் கண்டம். இது பல மொழி களைப் பேசுகிற மக்களைக் கொண்டுள்ளது; பல மதங்களை யும், பல்வேறு பழக்கவழக்கங்களையும், பல்வேறு பண்பாடு களையும் கொண்டுள்ளது.

ஒரு கட்டத்தில் 56 தேசங்கள் அல்லது 56 தனிநாடுகள் இந்தியாவில் இருந்தன.

கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் புஷ்யமித்திர சுங்கன் என்கிற பார்ப்பன அரசன் வடநாட்டில் பௌத்தத்தை அழித்தான்.

கி.பி. எட்டாம் நூற்றாண்டில் கேரளாவில் பிறந்த ஆதிசங்கரர் இந்தியா முழுவதையும் சுற்றி வந்தார். மீதம் இருந்த பௌத்தச் சுவடுகளை, ஆங்காங்கு இருந்த அரசர்களின் துணையைக் கொண்டு, கி.பி.830க்குள் ஆதிசங்கரர் அழித்தார். அவருடைய கொள்கைகளைப் பரப்ப 4 மடங்களை நிறுவினார். அம்மடங்கள் அரசு ஆதரவைப் பெற்றன.

அம்மடங்களின் மூலம் வேத பாடசாலைகள் நிறுவப் பட்டன; அரசர்களும் நிறுவினர். பார்ப்பன வகுப்பு மாணவர் களுக்கு மட்டும் சமற்கிருதமும், வேதங்களும், திருமண மந்திரங்களும், இறுதிக் கடன் மந்திரங்களும் கற்றுத் தரப்பட்டன.

பார்ப்பனர் வீடுதோறும் சென்று புரோகிதம் செய்வதை மேற்கொண்டனர். திருமணம், இறுதிக்கடன் ஆகிய வீட்டு நிகழ்ச்சிகளை அவர்களே நடத்தினார்கள்.

**அதாவது, பார்ப்பனரே இந்து மதத்திலுள்ள எல்லாச் சாதி, எல்லா வகுப்புகளுக்கும் மதகுரு என்கிற நிலையை அடைந்தனர்.**

பார்ப்பனப் புரோகிதம் இந்தியா முழுவதிலும் பரவி நிற்கிறது. இந்த ஏற்பாட்டுக்கு இந்துச் சட்டத்திலும், அரசியல் அமைப்புச் சட்டத்திலும் வழக்கம் என்கிற பேரால் பாதுகாப்பு இருக்கிறது.

இது முதலாவது கூறு.

அடுத்து இராமாயணம், மகாபாரதக் கதைகள் செவிவழிக் கதைகளாகவும், தெருக்கூத்துகள், நாடகங்கள், பொம்மலாட் டங்கள் வழியாகவும் பொது மக்களிடையே பரப்பப்பட்டன. இப்போது தொலைக்காட்சிகள் மூலம் இவை பரப்பப்படுகின்றன.

**இராமனைக் கடவுளாக நம்பி வணங்கும் வழக்கம் இந்தியா முழுவதிலும் கி.பி. பத்தாம் நூற்றாண்டுக்குப் பிறகு பரவியது. இது ஒற்றை இந்தியாவை உருவாக்கிய இரண்டாவது கூறு.**

பகவத்கீதை, பாகவதம், மகாபாரதம் முதலானவை இந்தியா முழுவதிலும் உள்ள பார்ப்பனராலும், பார்ப்பனரல்லாத மற்ற பார்ப்பன மத மக்களாலும் மதிக்கப்படவும், பரப்பப் படவும் படுகின்றன.

இது மூன்றாவது கூறு.

கி.பி.1640இல் தொடங்கி கி.பி.1757க்குள் இந்தியாவின் பல பகுதிகளை வெள்ளைக்காரன் கைப்பற்றினான். கி.பி. 1801க்குள் தெற்கே உள்ள குமரி முதல் வடக்கே உள்ள இமயம் வரை உள்ள நாடுகளையும், கிழக்கே பர்மா, மேற்கே ஆப்கானிஸ்தான் வரையில் உள்ள நாடுகளையும் கைப்பற்றி ஒரே எல்லையைக் கொண்ட - ஒற்றை ஆட்சியைக் கொண்ட ஓர் அரசை-“இந்தியா”வை நிறுவினான்.

வடக்கே முகமதியர்களும், மராட்டியர்களும், தெற்கே இருந்த தெலுங்கர்களும் சிற்றரசர்களாகவும், பாளையக்காரர் களாகவும் மாறினர். 1947 வரை இந்நிலை நீடித்தது.

1919இல் ஆப்கானிஸ்தான் தனி நாடு ஆயிற்று, அதன் பிறகும் எஞ்சிய பகுதி “இந்தியா” என்று அழைக்கப்பட்டது.

1936இல் பர்மா (மியான்மர்) பிரிந்தது. அதன்பிறகும் எஞ்சிய பகுதி “இந்தியா” என்றே அழைக்கப்பட்டது.

1947இல் இந்தியா, பாக்கிஸ்தான் இரண்டு நாடுகளாக இந்தியா பிரிக்கப்பட்டது. அதன் பிறகும், “இந்தியா” என்றே அழைக்கப்பட்டது.

இது ஒரு தவறான பெயர். நிற்க.

1947இல் சுதந்தர இந்தியா அமைந்தது.

ஆனால், வயது வந்தோருக்கு வாக்குரிமை வராத காலத்தில் - 1946இல் வெள்ளைக்காரன் காலத்தில் நடந்த தேர்தலில், மத்திய சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களையும், மாகாணச் சட்டமன்றங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப் பினர்களையும் கொண்டு இயற்றப்பட்ட அரச மைப்புச் சட்டம் - சுதந்தர இந்தியாவின் அரசியல் சட்டமாக 26.1.1950இல் அறிவிக்கப்பட்டது.

இந்தியாவில் நடந்த முதலாவது அரசியல் மோசடி இதுவாகும். இதை அன்றே கண்டனம் செய்தவர், பெரியார் ஒருவரே!

ஏன், அது மோசடி?

1. ஏன் எனில், வேத காலந்தொட்டுப் பின்பற்றப்பட்டுவரும் பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் எனப்படும் பிறவி உயர்வு தாழ்வையும்;
2. மனுநீதி, இராமாயணம், பாகவதம் இவற்றிலும் ஆகமத் திலும் சொல்லப்பட்ட பழக்கவழக்கங்கள் இன்றும் இனியும் செல்லும் என்பதையும்;
3. நூற்றுக்கணக்கான தாய்மொழிகளும், தேசிய இனங் களும், பல்வகைப் பண்பாடுகளும் உள்ளதைப் புறந்தள்ளி விட்டு-**ஒற்றை இந்தியா,** ஒரே மொழி **இந்தி,** ஒரே கலாச்சாரம் இந்து இவற்றை நிலைநாட்டுவதையும் - நம்மை ஆளும் இந்திய அரசமைப்புச் சட்டம் 2017லும் பாதுகாக்கிறது.

இவ்வகைகளால் - இக்காரணங்களால் - இந்திய அரச மைப்புச் சட்டம் மோசடியானது; முழுமோசடியானது என் பதைத் தமிழ்நாட்டிலுள்ள ஏழரைக் கோடிப் பேர்களுக்கும் எடுத்துச் சொல்லுவது நம் தலையாய கடமை.

இதைக் குன்றின்மேல் நின்று கூவுவோம், வாருங்கள்!


**- வே. ஆனைமுத்து**

# புத்துயிரூட்டப்பட்ட பாபர் மசூதி-இராமஜென்மபூமி வழக்குகளும்

## சங்பரிவாரங்களின் நிலைப்பாடும்

க. முகிலன்

1992 திசம்பர் 6 அன்று அயோத்தியில் பாபர் மசூதி தகர்க்கப்பட்டது தொடர்பான வழக்கு முடிந்து போன ஒன்றுதான் என்று எல்லோரும் எண்ணிக் கொண்டிருந்த நிலையில், 19.4.2017 அன்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பி.சி. கோஷ், ரோகின்டன் எஃப். நாரிமன் ஆகியோரைக் கொண்ட அமர்வு அந்த வழக்குக்குப் புத்துயிரூட்டியுள்ளது.



*1990இல் இந்துத்துவ வெறியைக் கொழுந்துவிட்டு எரியச் செய்த அத்வானியின் இரத யாத்திரை*

நீதிபதிகள் பி.சி. கோஷ், நாரிமன் ஆகியோர் அளித்த நாற்பது பக்கங்கள் கொண்ட தீர்ப்பில், "25 ஆண்டுகளுக்குமுன் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடித்தளமாக விளங்கும் மதச்சார்பின்மையை அழிக்கும் தன்மையில் நடந்த இக்குற்றத்திற்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும். வானமே இடிந்து வீழ்வதாயினும் நீதி நிலைநாட்டப்படும்" என்று கூறியுள்ளனர்.

இத்தீர்ப்பின் மூலம் 2001 மே 4 அன்று ரேபரேலி சிறப்பு நீதிமன்றம் (வாஜ்பாய் பிரதமராக இருந்த போது) எல்.கே. அத்வானி, அசோக் சிங்கால், கிரிராஜ் கிஷோர், முரளி மனோகர் ஜோஷி, கல்யாண் சிங், வி.எச். டால்மியா, உமாபாரதி, வினய் கட்டியார், சாத்வி ரிதம்பரா உள்ளிட்ட 21 பேரை பாபர் மசூதி இடிப்பு சதிக்குற்ற வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டது செல்லாததாகிவிட்டது. இவர்கள் மீதான சதிக்குற்ற வழக்கை இரண்டு ஆண்டுகளுக்குள் விசாரித்து முடிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் இப்போது ஆணையிட்டுள்ளது.

25 ஆண்டுகளாக இந்த வழக்கு இழுத்தடிக்கப்பட்டு வருவதைக் கருத்தில் கொண்டு, உச்சநீதிமன்றம் தனக்குள்ள சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி, அரசமைப்புச் சட்ட விதி 142இன்கீழ் இத்தீர்ப்பை வழங்கியுள்ளது. தேசிய, மாநில நெடுஞ்சாலைகளில் உள்ள மதுக்கடைகளை உடனடியாக அகற்றுமாறு இந்த 142ஆவது விதியின் அடிப்படையில்தான் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.

பாபர் மசூதி தகர்க்கப்பட்ட 1992 திசம்பர் 6 அன்று இரண்டு முதல் தகவல் அறிக்கைகள் பதிவு செய்யப்பட்டன. வழக்கு எண்.197 என்பது எண்ணிலடங்காத - பெயர் தெரியாத கரசேவகர்கள் மீதானது. வழக்கு எண்.198 அத்வானி உள்ளிட்ட பா.ச.க., விசுவ இந்து பரிஷத், சிவசேனை, பஜ்ரங்தள் ஆகிய அமைப்புகளின் தலைவர்கள், கரசேவகர்களை வெறிகொள்ளும் படியாகப் பேசினார்கள் என்பதாகும். மத்தியப் புலனாய்வுத் துறை (சி.பி.ஐ.) 1993 அக்டோபரில் இந்த இரண்டு வழக்குகளையும் ஒரே வழக்காக ஆக்கியதுடன், அத்வானி உள்ளிட்ட தலைவர்கள் மீது சதிக்குற்றம் (Conspiracy) செய்ததாக வழக்கைப் பதிவு செய்தது.

ஆனால் 1997இல் அலகாபாத் உயர்நீதிமன்றம் இந்த வழக்கை இரண்டாகப் பிரித்தது. தலைவர்கள் மீதான சதிக்குற்றவழக்கு ரேபரேலி நீதிமன்றத்திலும் பெயர் தெரியாத கரசேவகர்கள் மீதான வழக்கு லக்னோ நீதிமன்றத்திலும் விசாரிக்கப்பட வேண்டும் என்று ஆணையிட்டது.


19.4.2017 அன்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் பி.சி. கோஷ், நாரிமன் அளித்த தீர்ப்பில், இவ்விரு வழக்குகளும் ஒன்றாக இணைக்கப்பட்டு லக்னோ நீதிமன்றத்தில் ஒரே வழக்காக விசாரிக்கப்பட வேண்டும்; நாள்தோறும் விசாரணை நடத்தி இரண்டு ஆண்டுகளுக்குள் தீர்ப்பு வழங்க வேண்டும்; வழக்கு விசாரணையை நடத்தும் நீதிபதிகளை எக்காரணம் கொண்டும் பணியிட மாற்றம் செய்யக்கூடாது; புதிய வழக்காகப் பதிவு செய்யாமல் ஏற்கெனவே நடந்த விசாரணையின் தொடர்ச்சியாக இவ்வழக்கு விசாரணை நடைபெற வேண்டும் என்று திட்டவட்டமாகக் கூறியுள்ளனர்.

மேலோட்டமாகப் பார்த்தால் உச்சநீதிமன்றம், பாபர் மசூதி இடிப்பு வழக்கை விரைந்து முடிக்க வேண்டும்

என்று கூறியிருப்பது பா.ச.க.வுக்கு ஒரு பின்னடைவு போல் தோன்றும். சதிக்குற்ற வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்ட சங்பரிவாரங்களின் தலைவர்கள் மீண்டும் குற்றவாளிக் கூண்டில் நிற்கவைக்கப்பட்டிருப்பது இந்துத்துவ ஆதிக்கத்துக்கு ஒரு தலைக்குனிவு அல்லவா என்று நினைக்கலாம். ஆனால் எல்.கே. அத்வானிக்குத் தவிர வேறு எவருக்கும் இழப்பு இல்லை. 1989 முதல் 1992இல் பாபர் மசூதி இடிக்கப்படும் வரை, பாபர் மசூதியை இடித்து இராமஜென்ம பூமியை மீட்பது என்கிற போராட்டத்தின் தன்னிகரற்றத் தலைவராக அத்வானி திகழ்ந்தார். இந்துத்துவக் கோட்பாட்டின்கீழ் இந்துக்களின் வாக்குகளை ஒன்றுதிரட்டிய பெருமை அத்வானிக்கே உரியதாகும் என்று கருதப்பட்டது. ஆனால் கூட்டணி கட்சிகளின் ஆதரவுடன் 1998 மற்றும் 1999 ஆம் ஆண்டுகளில் தில்லியில் பா.ச.க. ஆட்சி அமைத்த போது, அத்வானி ‘‘வில்லனாக’’க் கருதப்பட்டு, ‘‘எல்லோருக்கும் நல்லவர்-இனியவர்’’ என்று கூறப்பட்ட ஏ.பி. வாஜ்பாய் பிரதமர் பதவியை அத்வானியிட மிருந்து பறித்துக்கொண்டார்.

2014ஆம் ஆண்டிலேனும் பிரதமராகலாம் என்ற கனவில் இருந்தார் அத்வானி. ஆனால் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பே, நரேந்திர மோடி தன்னைப் பிரதமர் வேட்பாளராக அறிவித்துக் கொண்டதன் மூலம் அத்வானியின் பிரதமர் கனவைத் தகர்த்தார். நரேந்திர மோடி பிரதமரானதும் ஆட்சியிலும் கட்சியிலும் மூத்த தலைவர்களை முற்றிலுமாக ஓரங்கட்டினார். 2017 சூலையில் பிரணாப் முகர்ஜியின் குடியரசுத் தலைவர் பதவிக் காலம் முடிந்ததும், தான் குடியரசுத் தலைவராகலாம் என்ற கனவில் மிதந்து கொண்டிருந்தார் அத்வானி. ஆனால் உச்சநீதிமன்றத்தின் ஏப்பிரல் மாதத் தீர்ப்பு அத்வானி மீதான சதிக்குற்றவழக்கிற்குப் புத்துயிரூட்டியிருப்பதால், அத்வானியின் இறுதிக்காலக் கனவும் சுக்குநூறாகத் தகர்ந்துவிட்டது.

இத்தீர்ப்பின்படி நடுவண் அமைச்சராக உள்ள உமாபாரதியும், பாபர் மசூதி தகர்க்கப்பட்ட போது உத்தரப் பிரதேசத்தின் முதலமைச்சராக இருந்தவரும், இப்போது இராஜஸ்தான் மாநிலத்தின் ஆளுநராக இருப்பவருமான கல்யாண் சிங்கும் சதிக்குற்ற வழக்கில் இருக்கின்றனர். நெறிசார்ந்த அரசியல் மரபின்படி, இவர்கள் இருவரும் தாமாகவே முன்வந்து தங்கள் பதவிகளிலிருந்து விலக வேண்டும். ஆ. இராசா, லாலுபிரசாத் ஆகியோர் மீது குற்ற வழக்குப் பதிவு செய்யப்பட்ட போது, அவர்கள் பதவி விலக வேண்டும் என்று வாய்கிழிய கூச்சலிட்டு நாடாளுமன்றத்தில் கலவரம் செய்த பா.ச.க. உமாபாரதி அமைச்சர் பதவியில் நீடிக்கலாம் என்று வெட்க உணர்ச்சி இல்லாமல் இப்போது கூறுகிறது. பல குற்ற வழக்குகளில் சிக்கியுள்ள யோகி ஆதித்தியநாத்தை உ.பி.யின் முதலமைச்சராக்கியுள்ளது பா.ச.க. இதுதான் பா.ச.க.வின் ‘‘அரசியல் தர்மம்’’.



*உ.பி. முதல்வராக ஆதித்தியநாத் 19-3-2017 அன்று பதவி ஏற்ற விழாவில் முரளி மனோகர் ஜோஷி, உமாபாரதி, அத்வானி*

பாபர் மசூதி இடிப்பு தொடர்பான சதிக்குற்ற வழக்கில் இரண்டு ஆண்டுகளுக்குள் தீர்ப்பு வழங்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் ஆணையிட்டிருப்பது பற்றி பா.ச.க. எள்ளளவும் கவலைப்படவில்லை. ஏனெனில் 25 ஆண்டுகளாக இந்த வழக்கை இழுத்தடித்து அதை ஒன்றுமில்லாமல் ஆக்கிவிட்ட பா.ச.க.வால் இன்னும் பல ஆண்டுகளுக்கு இழுத்தடித்துக் காலவெள்ளத்தில் கரைந்து போகும்படி செய்துவிட முடியும். சொத்துக் குவிப்பு வழக்கை செயலலிதாவால் இருபது ஆண்டுகள் இழுத்தடிக்க முடிந்தபோது, பா.ச.க.வுக்குப் பல தலைமுறைகளுக்குத் தள்ளிப்போடும் ஆற்றல் இருக்கிறது என்பதை மறுக்க முடியுமா?

எந்தவொரு சூழ்நிலையையும் தனக்குச் சார்பாக மாற்றிக்கொள்ளும் சூழ்ச்சித்திறன் சங்பரிவாரங்களுக்கு உண்டு என்பதை 1925ஆம் ஆண்டு முதற்கொண்ட அதன் வரலாறு காட்டுகிறது. உச்சநீதிமன்றத்தின் அறிவுறுத்தலின்படி, இரண்டு ஆண்டுகளுக்குள் இந்த வழக்கின் தீர்ப்பில் அத்வானி உள்ளிட்டோர் குற்றவாளிகள் என்று தண்டிக்கப்பட்டாலும் அய்ந்து ஆண்டுகள் வரைதான் சிறைத்தண்டனை விதிக்க முடியும். அவ்வாறான தீர்ப்பு வந்தாலும் இந்துத்துவத் தலைவர்கள் உடனே சிறையில் அடைக்கப்படமாட்டார்கள். ஏனெனில் இத்தீர்ப்பின் மீது பல அடுக்கு மேல்முறையீடு வாய்ப்புகள் உள்ளன. அந்த மேல்முறையீடுகளின் வழக்குகளின் விசாரணை பல ஆண்டுகள் நீடிக்கும். சதிக்குற்றம் சாட்டப்பட்ட 21 பேரில் 8 பேர் இறந்துவிட்டனர். எஞ்சியுள்ள 13 பேரும் வழக்கு விசாரணையின் நெடியகாலத்திற்குள் இறந்து போவார்கள். இவர்கள் அனைவரும் இந்து மதத்தின் பெருமையை நிலைநாட்டுவதற்கான போரில் தங்கள் இன்னுயிரை ஈந்த மாபெரும் ஈகியர்களாகப் போற்றப் படுவார்கள். வி.டி. சாவர்கர், தீன்தயாள் உபாத்தியாயா



*இராஜஸ்தான் ஆளுநராக உள்ள கல்யாண்சிங் 23-2-2017 அன்று சட்டப்பேரவையில் ஆளுநர் உரையைப் படிக்கிறார்*

போன்றவர்கள் இப்போது இத்தன்மையில்தான் மாபெரும் தலைவர்களாக சங்பரிவாரங்களால் போற்றப்படு கின்றனர்.

பாபர் மசூதி இடிப்பு தொடர்பான சதிக்குற்ற வழக்கின் தீர்ப்பு 2019 நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன் வந்து விட வேண்டும் என்று பா.ச.க. விரும்புகிறது. அத்தீர்ப் பின் முடிவு எப்படியிருந்தாலும்-அத்வானி உள்ளிட்டோர் விடுதலை செய்யப்பட்டால் அது இராமஜென்மபூமியின் வெற்றி என்றும், தண்டிக்கப்பட்டால் இராமஜென்மபூமி யில் இராமனுக்குக் கோயில் கட்டாமல், பாக்கித்தானிலா கட்டமுடியும் என்றும், இந்துக்களின் உணர்ச்சியைத் தூண்டி, வெறியூட்டி அணிதிரட்டி தேர்தலில் வாக்கு களாக மாற்றி வெற்றி பெற பா.ச.க. முனையும்.

வாஜ்பாய் தலைமையில் பா.ச.க. நடுவண் அரசில் ஆட்சிக்கு வந்தது முதல் அயோத்தியில் இராமனுக்குக் கோயில் கட்டும் கோரிக்கையை ஓரங்கட்டி வைத்திருந்தது. 2014 நாடாளுமன்றத் தேர்தலில் நாட்டின் வளர்ச்சி, ஊழல் ஒழிப்பு, முழக்கத்தை முன்வைத்து மோடி தலைமையில் பா.ச.க. வெற்றி பெற்றது. இப்போதே இம்முழக்கங்களின் சாயம் வெளுத்துவிட்டது. 2019இல் இம்முழக்கங்கள் வெற்றிக்குக் கைகொடுக்காது. எனவே சங்பரிவாரங்கள் அயோத்தியில் இராமனுக்குக் கோயில் கட்டுதல் என்ற முழக்கத்தை முன்னெடுத்திட லக்னோ நீதிமன்றத்தின் தீர்ப்பைப் பயன்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பு இருப்பதாக மதச்சார்பின்மையில் நம்பிக்கைக் கொண்டிருப்போர் அஞ்சுகின்றனர்.

**பாபர் மசூதி இடிப்பு வழக்கின் வரலாறும் - வஞ்சகமான காலத்தாழ்வும்**

பாபர் மசூதியைத் தகர்த்த, பெயர் தெரியாத - எண்ணற்ற கரசேவகர்கள் மீதான வழக்கு லக்னோ நீதிமன்றத்திலும், கரசேவகர்களின் உணர்வுகளைத் தூண்டும் வகையில் பேசியதாகக் குற்றம் சாட்டப்பட்ட தலைவர்கள் மீதான வழக்கு ரேபரேலி நீதிமன்றத் திலும் நடந்துவந்தன. கரசேவகர்கள் மீதான வழக்கில் இதுவரை 195 பேர் சாட்சியங்களாக விசாரிக்கப்பட் டுள்ளனர். மேலும் 800க்கும் மேற்பட்டோர் விசாரிக் கப்பட வேண்டியுள்ளனர். தலைவர்கள் மீதான ரேபரேலி வழக்கில் 57 பேர் சாட்சியங்களாக விசாரிக்கப்பட்டுள்ள னர். இன்னும் 105 பேர் விசாரிக்கப்பட வேண்டும்.

இவ்விரு வழக்குகளையும் ஒரே வழக்காக விசாரிக்க வேண்டும் என்று சி.பி.ஐ. வலியுறுத்தியதன் பேரில், உத்தரப்பிரதேச அரசு 2001 பிப்பிரவரியில் ரேபரேலி வழக்கை லக்னோ நீதிமன்றத்துக்கு மாற்றியது. ஆனால் அலகாபாத் உயர்நீதிமன்றம் தன்னிடம் இதற்கான முன் அனுமதியைப் பெறாமல் அரசு மாற்றியது தவறு என்று கூறி இவ்வாறு மாற்றப்பட்டது செல்லாது என்று அறிவித்தது. ஆயினும் மூன்று மாதங்களுக்குள் உ.பி. அரசு உயர்நீதிமன்றத்திடம் அனுமதி பெற்று ரேபரேலி வழக்கை லக்னோ நீதிமன்றத்துக்கு மாற்றிக் கொள்ள லாம் என்றும் கூறியது. அதனால் தலைவர்கள் மீதான வழக்கு ரேபரேலி நீதிமன்றத்திற்கே திரும்பியது.

2001 மே 4 அன்று ரேபரேலி நீதிமன்றத்தின் நீதிபதி எஸ்.கே. சின்ஹா, அத்வானி உள்ளிட்ட 21 தலை வர்களை இக்குற்ற வழக்கிலிருந்து விடுதலை செய்தார். அப்போது அத்வானி துணைப் பிரதமராக இருந்தார் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

அலகாபாத் உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டிய குறை பாட்டைக் களையுமாறு சி.பி.ஐ., 2001 சூன் 16 அன்று உ.பி. அரசுக்கு மடல் எழுதியது. சி.பி.ஐ.யின் கோரிக் கையை 2002 செப்டம்பர் 28 அன்று உ.பி. அரசு நிராகரித்தது. இக்கால இடைவெளியில் உ.பி. முதல்வ ராக இராஜ்நாத் சிங் இருந்தார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

ரேபரேலி நீதிமன்றம் அத்வானி உள்ளிட்ட 21 பேரைச் சதிக் குற்றவழக்கிலிருந்து விடுவித்த மூன்று ஆண்டுகள் கழித்து - நடுவண் அரசில் வாஜ்பாய் தலை மையிலான பா.ச.க.வின் ஆட்சி முடிந்த பிறகு, 2004 நவம்பர் 2 அன்று சி.பி.ஐ., 21 பேர்விடுதலை செய்யப் பட்டதற்கு எதிராக அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தது. அதன்பின் ஆறு ஆண்டுகள் இந்த மேல் முறையீடு அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் தூங்கிக் கொண்டிருந்தது.

பாபர் மசூதி இடிக்கப்பட்ட அன்றே நடுவண் அரசு, நீதிபதி லிப்ரான் தலைமையில் அதைப் பற்றி ஆராய ஒரு குழுவை அமைத்தது. லிப்ரான் குழு 48 தடவை

கள் நீட்டிப்பு வாங்கி 17 ஆண்டுகள் கழித்து, 2009இல் அதன் அறிக்கையை நடுவண் அரசிடம் அளித்தது. அந்த அறிக்கையில், "பாபர் மசூதி வளாகத்தில் திரண்டிருந்த கரசேவகர்களின் உணர்ச்சிகளைத் தூண்டும் வகையில் எல்.கே. அத்வானி, முரளிமனோகர் ஜோஷி, உமாபாரதி, சந்நியாசினி ரிதம்பரா முதலானோர் உரையாற்றியதால்தான் கரசேவகர்கள் வெகுண்டெழுந்து பாபர் மசூதியை இடித்தனர்" என்று திட்டவட்டமாகக் கூறப்பட்டுள்ளது.

ஆனால், 2010 செப்டம்பர் 24 அன்று அலகாபாத் உயர்நீதிமன்றம் லிப்ரான் குழுவின் அறிக்கையைக் கருத்தில் கொள்ளாமல், இந்துத்துவ உணர்ச்சிக்கு ஆட்பட்டு மிகவும் கேடான ஒரு தீர்ப்பை வழங்கியது.

ரேபரேலி நீதிமன்றம் 21 பேரை விடுவித்து வழங்கிய தீர்ப்பை மறுஆய்வு செய்ய முடியாது என்று கூறிவிட்டது. மேலும் பாபர் மசூதியின் நடுவில் இருந்த கவிகை (Dome)யின் கீழ் உள்ள இடத்தில்தான் இராமர் பிறந்தார் என்று திட்டவட்டமாகக் கூறியது. பாபர் மசூதி இடிக்கப்பட்டதும் அந்த இடத்தில் மீண்டும் இராம்லாலா (குழந்தை இராமன்) சிலை நிறுவப்பட்டு தற்காலிகக் கோயில் 7.12.1992 அன்று அமைக்கப்பட்டு பூசை நடந்து வருகிறது.

1994 திசம்பர் 22-23 நள்ளிரவில் அய்ம்பது அறுபது பேர் கொண்ட இந்துமத வெறியர்கள் பாபர் மசூதியின் பூட்டை உடைத்து மசூதியில் குழந்தை இராமன் சிலையை நாட்டினர். அதற்கு அலகாபாத் உயர்நீதிமன்றம் 2010இல் சட்ட அங்கீகாரம் வழங்கி விட்டது. பாபர் மசூதி உள்ள இடத்தில்தான் இராமன் பிறந்தான் என்று நெடுங்காலமாக இந்துக்கள் நம்புகிறார்கள் என்பதன் அடிப்படையில் இத்தீர்ப்பை வழங்கியதாக அலகாபாத் உயர்நீதிமன்றம் கூறியது.

மேலும் பாபர் மசூதி இருந்த 2.77 ஏக்கர் நிலத்தை மனுதாரர்களான குழந்தை இராமனுக்கும், நிர்மோகி அக்ஹாராவுக்கும் (Nirmohi Akhara) சன்னி வக்ஃபு வாரியத்துக்கும் பிரித்தளிக்க வேண்டும் என்றும் தீர்ப்பு கூறியது. இம்மூன்று தரப்பினருள் எவரும் இவ்வாறு 2.77 ஏக்கர் நிலத்தைப் பிரித்தளிக்க வேண்டும் என்று கேட்காத நிலையில், நீதித்துறையின் நெறிமுறைக்கு எதிரான வகையில் இத்தீர்ப்பு வழங்கப்பட்டது. இத்தீர்ப்பை வழங்கிய நீதிபதிகளின் உள்நோக்கம், மசூதியின் கவிகைகள் உள்ள இடத்தில்தான் இராமன் பிறந்தான்; அந்த இடத்தை இராமனிடம் ஒப்படைத்துவிட வேண்டும் என்பதாகவே இருந்தது. மதச்சார்பின்மைக்கும் சனநாயகத்துக்கும் எதிரான இழிவான தீர்ப்பு இது.

2010ஆம் ஆண்டிலேயே அலகாபாத் உயர்நீதிமன்றம் பாபர் மசூதி இருந்த இடம்தான் இராமஜென்ம பூமி (இராமன் பிறந்த இடம்) என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டதால் அங்கே இராமனுக்கு மாபெரும் கோயில் கட்டப்பட வேண்டும் என்று பா.ச.க. உள்ளிட்ட இந்துத்துவவாதிகள் தொலைக்காட்சி விவாதங்களில் ஊளையிட்டுக் கொண்டிருக்கின்றனர்.

2010 செப்டம்பர் 24 அன்று அலகாபாத் உயர்நீதிமன்றம் அளித்த இக்கேடான தீர்ப்பை எதிர்த்து சி.பி.ஐ. 2011 பிப்பிரவரியில் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. இந்த மேல்முறையீடு ஆறு ஆண்டுகளுக்குமேல் உச்சநீதிமன்றத்தில் உறங்கிக் கொண்டிருந்தது. மொத்தம் 16 ஆண்டுகள் மேல்முறையீட்டுப் படிநிலைகளிலேயே இந்த வழக்கு இழுத்தடிக்கப்பட்டமைக்கு உ.பி. அரசும், நடுவண் அரசும், நீதித்துறையும், சி.பி.ஐ.யும் இதில் பொறுப்புணர்வுடன் செயல்படவில்லை என்று சொல்வதைவிட அத்வானி உள்ளிட்ட தலைவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்துடனேயே செயல்பட்டுள்ளன என்பதே உண்மையாகும்.

இக்கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிட்டுள்ளது போல் 2011 பிப்பிரவரியில் உச்சநீதிமன்றத்தில் சி.பி.ஐ. செய்த மேல்முறையீட்டின் மீதான விசாரணை 6.4.2017 அன்று நீதிபதிகள் பினாகி சந்திரகோஷ், ரோகின்டன் எஃப். நாரிமன் ஆகியோரைக் கொண்ட அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. 19.4.17 அன்று இவ்விரு நீதிபதிகள், அத்வானி உள்ளிட்ட 13 பேர் மீதான சதிக்குற்ற வழக்கை இரண்டு ஆண்டுகளுக்குள் விசாரித்து முடிக்க வேண்டும் என்று தீர்ப்பு கூறினர்.

**பாபர் மசூதி இருந்த இடம் யாருக்குச் சொந்தம்!**

உச்சநீதிமன்ற நீதிபதிகள் பி.சி. கோஷ், நாரிமன் ஆகியோர் 19.4.2017 அன்று அளித்த தீர்ப்பு, பாபர் மசூதி இடிக்கப்பட்டது தொடர்பான குற்றவழக்காகும். ஆனால் பாபர் மசூதி இருந்த இடம் யாருக்குச் சொந்தம் என்பது குறித்த உரிமைஇயல் வழக்கு 1950 முதல் உச்ச நீதிமன்றத்தில் இருந்து வருகிறது. பாபர் மசூதி உள்ள இடம் 2016இல் மறைந்த ஹாசிம் அன்சாரியின் பெயரில் பட்டா உரிமை இருக்கிறது. உ.பி. சன்னி வக்ஃபு வாரியத்தின் சார்பில் ஹாசிம் அன்சாரி பாபர் மசூதி இடத்தின் உரிமையைக் கோரி 1961இல் வழக்குத் தொடுத்தார்.

2010 செப்டம்பர் 24 அன்று அலகாபாத் உயர்நீதிமன்றம் பாபர் மசூதி இருந்த 2.77 ஏக்கர் இடத்தை மூன்று தரப்பினருக்கும் பிரித்து அளிக்க வேண்டும் என்று அளித்த தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில்

மேல் முறையீடுகள் செய்யப்பட்டன. இந்த மேல்முறையீட்டு விண்ணப்பங்கள் மீதான விசாரணை 21.3.2017 அன்று உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி ஜே.எஸ். கேஹர், நீதிபதிகள் டி.ஒய். சந்திரசூட், எஸ்.கே. கவுல் ஆகியோரைக் கொண்ட அமர்வு முன்வந்தது.

அப்போது வஞ்சகமே வடிவாய்க் கொண்ட சுப்பிரமணியசாமி, ''அயோத்தியில் இராமர் கோயில் கட்டும் பிரச்சனை குறித்த வழக்கு கடந்த ஆறு ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது; இப்பிரச்சனைக்கு விரைவில் தீர்வு காணவேண்டும்'' என்று நீதிபதிகளிடம் சொன்னார். அப்போது தலைமை நீதிபதி ஜே.எஸ். கேஹர், ''மக்களின் உணர்வுபூர்வமான விவகாரம் என்பதால் அயோத்தி பிரச்சனைக்கு நீதிமன்றத்துக்கு வெளியே பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண முயற்சிக்க வேண்டும்; தேவைப்பட்டால் நானே நடுவராக இருக்கிறேன்'' என்று கூறினார்.

தலைமை நீதிபதியின் இக்கருத்து சங்பரிவாரங்களுக்குப் பழம் நழுவிப் பாலில் விழுந்தது போன்றதாகும். 1984இல் பாபர் மசூதி - இராமஜென்மபூமி சிக்கல் சங்பரிவாரங்களால் உருவாக்கப்பட்டது முதலே நீதிமன்றத்துக்கு வெளியில்தான் இதைத் தீர்க்க முடியும் என்று கூறி வருகின்றனர். வாஜ்பாய், அத்வானி உள்ளிட்ட அனைவரும், ''பாபர் மசூதியின் இடத்தில்தான் இராமன் பிறந்தான் என்று இந்துக்கள் அனைவரும் நம்புகின்றனர்; இந்த நம்பிக்கை என்பது நீதிமன்றத்தின் சட்டவரம்புக்கு அப்பாற்பட்டது'' என்று கூறிவருகின்றனர்.

இந்நிலைப்பாட்டை பா.ச.க. 1989ஆம் ஆண்டிலேயே திட்டவட்டமாக அறிவித்துவிட்டது. 1989 நாடாளுமன்றத் தேர்தலுக்குமுன் சூன் 11 அன்று நடைபெற்ற பா.ச.க. தேசிய செயற்குழுவில், ''பாபர் மசூதி உள்ள இடத்தில் இராமர் பிறந்தார் என்பது தொடர்பான பிரச்சனையை நீதிமன்றத்தில் சட்டத்தின் மூலம் தீர்க்க முடியாது. இந்துக்களின் நம்பிக்கை உணர்வை மதித்து, இராமஜென்மபூமியை இந்துக்களிடம் ஒப்படைக்க வேண்டும். இது பேச்சுவார்த்தை மூலமோ, புதியதாகச் சட்டம் இயற்றுவதன் மூலமோ நிறைவேற்றப்பட வேண்டும். நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் இது முடியாது'' என்று தீர்மானம் நிறைவேற்றியது.

பிரதமர்களாக இருந்த சந்திரசேகரும், பி.வி. நரசிம்மராவும், காஞ்சி சங்கராச்சாரி ஜெயந்திர சரசுவதியும் மேற்கொண்ட சமரச முயற்சிகள் தோல்வியில் முடிந்தன.

பாபர் மசூதி சங்பரிவாரங்களால் தகர்க்கப்பட்டபின் 1992 திசம்பர்-1993 சனவரியில் மும்பையில் இசுலாமியர்கள் மீது கொடிய தாக்குதல் நடத்தப்பட்டது. நரேந்திர மோடி குசராத்தின் முதலமைச்சராக இருந்தபோது 2002 பிப்பிரவரி - மார்ச்சு மாதங்களில் இந்தியா - பாக்கித்தான் பிரிவினையின் போது நடந்ததைவிட மிகக்கொடிய முறையில் முசுலீம்கள் தாக்கப்பட்டனர்; கொல்லப்பட்டனர். 2014இல் நரேந்திர மோடி பிரதமரான பிறகு முசுலீம்கள் அச்சுறுத்தல்களுக்கும், தாக்குதல்களுக்கும், ஒடுக்குமுறைகளுக்கும் உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். அண்மையில் உ.பி. சட்டமன்றத்தில் 403 இடங்களுக்கு நடைபெற்ற தேர்தலில் பா.ச.க. ஒரு முசுலீமையும் வேட்பாளராக நிறுத்தவில்லை. இந்தியாவில் 17 கோடி மக்களாக இருக்கும் இசுலாமியரின் வாக்குகள் எங்களுக்குத் தேவையில்லை என்று கூறி பா.ச.க. இசுலாமியர்களைப் புறக்கணிக்கிறது. மாட்டிறைச்சி உண்பவர்கள் என்று கூறி அவர்களைத் தாக்குகிறது. மொத்தத்தில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தத்துவத் தந்தை எம்.எஸ். கோல்வால்கர், ''இசுலாமியர்கள் இந்தியாவில் இரண்டாந்தரக் குடிமக்களாக வாழ்வதற்கு மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்'' என்று கூறியதை நரேந்திர மோடி ஆட்சி தீவிரமாகச் செயல்படுத்தி வருகிறது.

எனவே சமஉரிமையோ, சமத்துவமோ இல்லாத நிலையில் இருக்கும் இசுலாமியர், பாபர் மசூதி - இராமஜென்மபூமி வழக்கில் நீதிமன்றத்துக்கு வெளியில் நடைபெறக்கூடிய சமரசப் பேச்சுவார்த்தையில் இந்துத்துவ ஆதிக்கச் சக்திகளால் மிரட்டப்பட்டு, பாபர் மசூதி இடத்தைப் பறிகொடுக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. எனவே உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ஜே.எஸ். கேஹர் முன்மொழிந்துள்ள சமரசப் பேச்சுவார்த்தை என்பது இசுலாமியருக்கு முற்றிலும் எதிரானதாகவே இருக்கும். தலைமை நீதிபதி ஜெ.எஸ். கேஹரும் உச்சநீதிமன்றமும் தங்கள் பொறுப்பைத் தட்டிக்கழித்து, கட்டப்பஞ்சாயத்திடம் ஒப்படைப்பது மிகவும் கேடானதாகும். இந்தியாவில் நடப்பது சட்டத்தின் ஆட்சியா? மதநம்பிக்கையின் ஆட்சியா?

காங்கிரசுக் கட்சி தொடர்ந்து பல ஆண்டுகளாகச் செய்துவந்த தவறுகளால் இன்று கலகலத்துக் கிடக்கிறது. இந்நிலையைப் பா.ச.க. நன்கு திட்டமிட்டுப் பயன்படுத்தி இந்தியா முழுவதும் தன் ஆதிக்கத்தை நிலைநாட்டி, தேர்தலில் வெற்றிகளைக் குவித்து வருகிறது. தமிழ்நாடு, கேரளம், மேற்குவங்காளம் ஆகிய மூன்று மாநிலங்களைத் தவிர, வேறு மாநிலங்களில் பா.ச.க.வுக்கோ, இந்துத்துவத்துக்கோ பெரிய அளவில் எதிர்ப்பு இல்லை. இம்மூன்று மாநிலங்களையும் தன் ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவர அட்டூழியமான வழிமுறைகளில் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது.

இத்தகைய அரசியல், சமூக, மதச்சார்புப் பின்னணியில் 2019இல் நாடாளுமன்றத்திற்கு நடைபெறவுள்ள தேர்தலில், நரேந்திர மோடியின் ஒப்பற்ற ஆளுமையின்கீழ், மேலும் கூடுதலான இடங்களுடன் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றி, பாபர் மசூதி இருந்த இடம் இராமஜென்மபூமி தான் என்று நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றுவதன் மூலம் இராமனுக்கு மாபெரும் கோயிலைக் கட்டும் திட்டத்தைச் சங்பரிவாரங்கள் வைத்துள்ளன.

அயோத்தி நிலம் யாருடையதாக இருந்தாலும் அது இராமருக்குப் பரிசாக அளிக்கப்பட வேண்டும் என்று நடுவண் அமைச்சர் உமாபாரதி, உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி ஜெ.எஸ். கேஹர் சமரசப் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காணலாம் என்ற கருத்தை அறிவித்தபின் கூறியிருக்கிறார்.

எனவே சங்பரிவாரங்கள் பாபர் மசூதி-இராமஜென்ம பூமி பிரச்சனையில் நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்க முடியாது என்று தொடர்ந்து கூறிவருகின்றன. நாட்டின் நலன் கருதி, இராமன் இந்துக்களுக்கான கடவுள் மட்டும் அல்ல; இந்தியர் அனைவருக்குமான தலைவர்; இந்தியக் கலாச்சாரப் பெருமிதத்தின் அடையாளம் என்பதை இசுலாமியர்கள் உணர்ந்து, ஏற்று, பாபர் மசூதி இடத்தை இராமர் கோயில் கட்டுவதற்கு ஒப்படைக்க வேண்டும் என்று கூறிவருகின்றனர். இது இசுலாமியர் மீது தொடுக்கப்படும் பாசிசம் ஆகும்.

பாபர் மசூதி-இராமஜென்ம பூமி சிக்கல் மட்டுமின்றி, ஆர்.எஸ்.எஸ். தலைமையின்கீழ் இயங்கும் நரேந்திர மோடியின் பாசிச ஆட்சி, எஞ்சியிருக்கின்ற சனநாயக நெறிகளையும், சகிப்புத்தன்மையையும், மதச்சார்பற்ற தன்மையையும், பல்வேறு தேசிய இனங்களின் - மொழிகளின் உரிமைகளையும், கருத்துச் சுதந்தரத்தையும் ஒழித்து, ஒரே இந்தியா, ஒரே மொழி, ஒரே கலாச்சாரம், ஒற்றை அதிகார மய்யம் என்கிற சர்வாதிகார ஆட்சியை நிலைநாட்டிட தீவிரமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. எந்தவொரு நாட்டிலும் பாசிச ஆட்சி நீண்டகாலம் நிலைத்ததில்லை என்பது வரலாறு. மக்களின் பேரெதிர்ப்பால் மோடியின் ஆட்சியும், இந்துத்துவ ஆதிக்கமும் வீழும் என்பது உறுதி.

அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் மீண்டும் மசூதி கட்டப்படக்கூடாது. அதேபோன்று இராமன் கோயிலும் கட்டப்படக்கூடாது. சகிப்புத்தன்மையும் மதச்சார்பற்ற உணர்வும் நாட்டின் இன்றியமையாத் தேவைகள் என்பதை உணர்த்தும் குறியீட்டு இடமாக அது திகழவேண்டும். அந்த இடம் தொல்லியல் துறையின் பொறுப்பில் பாதுகாக்கப்பட வேண்டும்.

# 1934 இந்தியச் சட்டசபைத் தேர்தல் சென்னை மாகாணம் 10இல் 5 பார்ப்பனர் வகுப்புவாதம் கூடாது.

## ஆனால் 100க்கு 50 நமக்கே வேண்டும்

சென்னை மாகாண சார்பாய் இந்தியச் சட்டசபை பொதுத் தொகுதிக்கு 10 தானங்களுக்கும் தேர்தல் நடந்துவிட்டது. அவற்றின் முடிவு :

**சென்னை நகரத்திற்கு**
தோழர். சத்தியமூர்த்தி அய்யர் (பார்ப்பனர்)

**தஞ்சை - திருச்சி**
தோழர் டாக்டர் டி.எ. ராஜன் அய்யங்கார் (பார்ப்பனர்)

**கிருஷ்ணா - கோதாவரி**
தோழர் நாகேசுவரராவ் பந்துலு (பார்ப்பனர்)

**சித்தூர்**
தோழர் எம். அனந்தசயன அய்யங்கார் (பார்ப்பனர்)

**கஞ்சம் விசாகப்பட்டணம்**
தோழர் வி.வி. கிரி பந்துலு (பார்ப்பனர்)

**குண்டூர் - நெல்லூர்**
தோழர் என். ஜீ. ரங்கா (தெரியாது)

**மலையாளம்**
தோழர் சாமுவேல் ஆரன் (கிறிஸ்தவர்)

**கோவை, சேலம், வடஆர்க்காடு**
தோழர் டி.எ. அவினாசிலிங்கம் செட்டியார் (பார்ப்பனரல்லாதார்)

**செங்கல்பட்டு தென்ஆற்காடு**
தோழர் சி.என். முத்துரங்க முதலியார் (பார்ப்பனரல்லாதார்)

**மதுரை - இராமநாதபுரம்**
தோழர் பி.எ. குமாரசாமி ராஜா (பார்ப்பனரல்லாதார்)

ஆகவே மேற்படி பத்து தானங்களில் 5 - பார்ப்பனர்ளும், 1 - கிறித்தவரும், 1 - நமக்கு விபரம் தெரியாதவரும், 3 - பார்ப்பனரல்லாதாரும் வெற்றி பெற்றிருக்கிறார்கள். எனவே பார்ப்பனர்களே பார்ப்பனரல்லாதார்களைவிட மெஜாரிட்டியாய் வெற்றி பெற்றிருக்கிறார்கள். வகுப்புவாதம் கூடாது; வகுப்புப் பிரதிநிதித்துவம் கூடாது என்று பார்ப்பனர்கள் கூப்பாடு போட்டுத் தங்கள் வகுப்பை உயர்த்திக் கொள்ளும் வகுப்புவாதமும் தங்கள் வகுப்பு அதிக தானம் பெற்றுக் கொள்ளும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும் அடைவதை இப்போதாவது வகுப்புவாதம் கூடாது என்று சொல்லும் பார்ப்பனரல்லாதார் வீரர்கள் (துரோகிகள்) உணர்வார்களாக.

(- பகுத்தறிவு - செய்திக்குறிப்பு - 02.12.1934)

# தொடரும் ஊழல்களும் சுரண்டல்களும்

**- குட்டுவன்**

2004ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி பிரதமர் மன்மோகன்சிங் தலைமையில் அமைந்தது. இந்த ஆட்சி பத்தாண்டுகள் தொடர்ந்தது. ஆனால் காங்கிரசுத் தலைமையிலான இந்த ஆட்சியில் ஒன்றிய அரசில் பெரும் ஊழல்கள் வெடித்துச் சிதறின. அலைக்கற்றை, நிலக்கரி, காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் எனப் பல ஊழல்கள் தொடர் வரிசையில் நின்றன. 2004ஆம் ஆண்டுத் தேர்தலில் வாஜ்பாய் தலைமையில் பாஜக படுதோல்வியுற்ற பிறகு மீண்டும் பாஜக 2014இல் தனித்து ஆட்சியமைக்கும் அளவிற்குச் செல்வாக்குப் பெற்றதற்கு இந்த ஊழல்களே காரணங்களாக அமைந்தன.

நோபல் பரிசு பெற்ற அமெரிக்கப் பொருளாதார அறிஞர் ஜோசப் ஸ்டிக்லிசு ஆங்கில நாளேடு ஒன்றுக்கு அளித்த பேட்டியில் பொதுத்துறை சார்ந்த நிறுவனங்களைத் தனியார் மயமாக்குவதிலும் பொதுத் துறை பங்குகளை விற்பதிலும் அலைக்கற்றை போன்ற தகவல் தொழில் நுட்பச் சேவைகளை விற்பதிலும் ஒன்றிய அரசு உரிய கவனம் செலுத்தவில்லை. இவைகளைப் பொதுத் துறையிலேயே வைத்துக் கொண்டு அதன் இலாபத்தைப் பெருக்கிக் கல்வி சுகாதாரம் மற்றும் சமுதாய நலத் திட்டங்களைச் சிறப்பான முறையில் நிறைவேற்றி யிருக்கலாம் என்றார். சான்றாக நிலக்கரி ஊழலில் பல லட்சம் கோடி அளவிற்கு ஊழல்கள் நடைபெற்று, தற்போது ஒன்றிய அரசின் உயர் அலுவலர்க்குச் சிறைதண்டனை அளிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒன்றிய அரசின் அமைச்சர், பிரதமர் அலுவலகத்தில் உள்ளவர்கள் மீது பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. மும்பை யில் இருந்து வெளி வரும் அரசியல் பொருளாதார ஏட்டில் பல புள்ளிவிவரங்களோடு ஆய்வுக்கட்டுரை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

இந்தியாவில் பல மாநிலங்கள் மின் பற்றாக்குறையால் வேளாண் தொழில் கட்டமைப்புத் துறைகளில் பெரும் தேக்கநிலை ஏற்பட்டது. இந்த நிலக்கரிச் சுரங்கங்களை ஏலம் எடுத்த தனியார் நிறுவனங்கள் ஊக வணிக நோக்குடன் அதிக விலை கிடைக்கும் என்ற நோக்கில் நிலக்கரியை எடுக்காமலேயே வைத்திருந்தனர். இதனால் மாநிலங்களில் இயங்கி வரும் மின் உற்பத்தி நிறுவனங்கள் அதிக விலைக்கு நிலக்கரியை வாங்கி உற்பத்தியில் ஈடுபட்டன. இதன் காரணமாக சராசரியாக ஒவ்வொரு இந்தியருக்கும் மின்கட்டணம் ரூ.1 முதல் 2 வரை வரை உயர்ந்தது என்று இவ்வேடு சுட்டியுள்ளது.

இதே போன்று காங்கிரசின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் கல்மாடி காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியின் தலைவராக இருந்த போது பல விளையாட்டுகளுக்குத் தேவையான கட்டமைப்புகளை உருவாக்கியபோது பல கோடி ஊழல்கள் நடைபெற்றன என்பதை நீதிமன்றம் வழியாக மெய்ப்பிக்கப்பட்டது. தரமற்ற விளையாட்டு அரங்குகளைக் கட்டியதையும் பல வெளிநாட்டு விளை யாட்டு வீரர்களுக்கு உரிய தேவையான வசதிகளைச் செய்யவில்லை என்றும் பல நாடுகள் இந்தியாவின் மீது வெளிப்படையாகக் குற்றம் சாட்டின. இதுபோல்தான் பல ஊழல்கள் தலைவிரித்தாடின. தற்போது ப.சிதம்பரத்தின் மீதும் அவரது மகன் கார்த்தி சிதம்பரத்தின் மீதும் வருமானவரித்துறையும் அமலாக்கத்துறையும் பல வழக்குகளைப் போட்டுள்ளன. இவர்கள் மீது ஹவாலா மோசடி வழக்கும் தற்போது விசாரணையில் உள்ளது. அலைக்கற்றை ஊழலில் குற்றம்சாட்டப்பட்ட ஆ.ராசா அண்மையில் புலனாய்வு விசாரணை மன்றத்தில் மத்திய புலனாய்வுத் துறைக்குத் தெரிந்த பல தகவல் களை வழக்கில் மறைத்துவிட்டது என்று வெளிப்படை யாகக் குற்றம் சாட்டினார்.

சான்றாக அன்றைய பிரதமர் மன்மோகன் சிங் நிதியமைச்சர்களாக இருந்த பிரணாப் முகர்ஜி, ப.சிதம்பரம் ஆகியோரின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு ஒன்றிய அரசின் ஒப்புதலோடுதான் அலைக்கற்றை ஏலம் விடப்பட்டது என்று வாதிட்டார். பொதுவாக நேரு காலத்தில் இருந்து, பல ஊழல்கள். நேரு சாஸ்திரி இந்திரா காந்தி போன்ற தலைவர்கள், பிரதமர்களாக இருந்த நேரத்தில் நடைபெற்ற பல ஊழல்களில் பிரதமர் அலுவலகம் எந்த நிலையிலும் குற்றச்சாட்டிற்கு உள்ளானது இல்லை. ஊழல்கள் பெருகுவதற்கு முதன்மையான காரணம் 1991இல் பிரதமர் நரசிம்மராவும் நிதியமைச்சர் மன்மோகன்சிங்கும் தாராளமய-தனியார்மய-உலகமய திட்டங்களை விரைந்து நடைமுறைப்படுத்திய காரணத் தினால், ஒன்றிய அரசில் உள்ள அமைச்சரவை ஒவ் வொன்றிலும் தங்களுக்குச் சாதகமான முடிவுகளை எதிர்நோக்கிப் பல உள்நாட்டு-பன்னாட்டு நிறுவனங்கள் செயல்படத் தொடங்கின. இவர்கள் பல தரகர்களையும் உருவாக்கினார்கள். சான்றாக டாடா நிறுவனம் வெளிப் படையாகவே நீரா ராடியா என்பவரைப் பணியமர்த்தி அரசின் கொள்கை முடிவுகளை மாற்ற முயன்றார் என்பதைப் பல ஆதாரங்களுடன் பல ஊடகங்கள் வெளி யிட்டன. ரிபப்ளிக் என்ற ஆங்கிலத் தொலைக்காட்சியைத் தற்போது நிறுவி செய்திகளை வெளியிட்டு வரும் அர்னாப் கோஸ்வாமி உயர் பதவிகளில் இருப்பவர்களின் பல ஊழல்களைச் செய்தி ஒளி ஊடகங்கள் நடுநிலையோடு வெளிப்படுத்தவில்லை பெரும் முதலாளித்துவ நிறுவனங்

களுடனும் அரசியல் தலைவர்களுடனும் இந்த ஊடகங்கள் பணத்திற்காகத் தங்கள் செய்திகளையே நடுநிலையோடு வெளியிடவில்லை என்று குற்றம் சாட்டி, புதிதாக ஒளி ஊடகத்தை நிறுவியுள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. எண்ணற்ற தனியார் நிறுவனங்களும் பன்னாட்டு நிறுவனங்களும் ஒன்றிய அரசின் வரிச் சலுகைகளைப் பெறுவதற்கும் மற்ற அடிப்படை வசதி களைக் குறைந்த விலையில் பெறுவதற்கும் தாராள மாகப் பெரும் பணத்தைச் செலவிட்டன என்பதை அமெரிக்காவின் என்ரான் நிறுவனம் 1990களில் வெளிப்படையாக கூறியது. அரசியல்வாதிகளை-உயர் அலுவலர்களைச் சரிபடுத்துவதற்காகவும் தங்களுக்குச் சாதகமான முடிவுகளை எடுப்பதற்காகவும் ரூ.1000 கோடியை ஒதுக்கியதை இந்நிறுவனம் வெளிப்படை யாகவே செய்தியாக வெளியிட்டது. ஒன்றிய அரசு ஊழலில் ஊறித் திளைக்கும்போது, மாநில அரசுகளும் தங்கள் தங்கள் பங்கிற்கு ஊழல் நிறைந்த நிர்வாக அமைப்பை உருவாக்கின. இன்றைக்கு எந்த நிர்வாகத் திலும் உழல் இல்லை என்று வெளிப்படையாகவே எந்த மாநிலமும் முன்வந்து சொல்ல இயலாத நிலைக்கு இந்த உலகமயமாதல் தனியார்மயமாதல் தாராளமயமாதல் கொள்கை அரசியல் தலைவர்களை ஊழல்வாதிகளாக மாற்றிவிட்டது.

சான்றாக ஐக்கிய நாடுகள் மன்றத்தின் 1999ஆம் ஆண்டு மனித மேம்பாட்டு அறிக்கையில் பெருகி வரும் உலக ஊழலைக் கடுமையான முறையில் சுட்டிக்காட்டி உலக அளவில் இதற்கான உரிய நடவடிக்கைகள் எடுக்கும்படி வேண்டுகோள் விடுத்தது. குற்றவாளிகள் தான் உலகமயமாதலில் பயன்களைப் பெருமளவில் அனுபவித்து வருகின்றனர். கட்டுப்படுத்தப்படாத மூலதனச் சந்தை, தகவல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட பெரும் மாற்றங்கள் குறைந்த செலவில் போக்குவரத்து வசதிகள் கிடைப்பதால் தடையற்ற முறையில் வேகமாக வளர்ந்து வரும் போதைப் பொருள் சந்தை வணிகம் பெருகி வருகிறது. ஆக்கப்பூர்வமான வளர்ச்சிக்குத் தேவையான புத்தகங்களுக்கும் வேளாண் வளர்ச்சிக்குத் தேவையான விதைகளுக்கும் மாற்றாக கருப்புப் பணமும் ஆயுதங்களும்தான் எளிதாகப் பரிமாற்றம் செய்யப்படு கின்றன. உலக ஒட்டு மொத்த வருமானத்தில் 2.5 விழுக்காட்டிற்குச் சமமான அளவிற்குப் பன்னாட்டு அளவில் கருப்புப் பண நடமாட்டம் இருப்பதாகப் பன்னாட்டு நிதியம் கணக்கிட்டுக் குறிப்பிட்டுள்ளது. இவ்விதக் குற்றவியல் நடவடிக்கைகள் கணினி விசைப் பலகை யின் பொறியைத் தொட்டு இயக்குவதன் வழியாக ஒருசில நொடிகளிலேயே நடந்தேறி வருகின்றன.

இதனடிப்படையை ஆய்ந்து பார்த்தால் பன்னாட்டு நிறுவனங்களுக்குப் போட்டியாக இவ்வகை குற்ற நடவடிக்கைகள் வழியாக வரும் வருமானம் ஆண்டிற்கு ரூ.67 இலட்சம் கோடியைக் கடந்து குற்றவாளிகளின் ஆதிக்கம் ஒரு சக்திவாய்ந்த மையமாக வளர்ந்து வருகிறது. பன்னாட்டளவில் குற்றங்களை நடத்திவரும் இத்தகைய கும்பல்கள் அரசியலை வணிகத்தைக்-காவல்துறையை-இணையதளத்தைத் திறன்மிக்க வகையில் குற்ற அமைப்புகளாக மாற்றித் தங்களின் குற்ற நடவடிக்கைகளின் எல்லையை மிக ஆழமான முறையில் விரிவுப்படுத்தி வருகின்றன.

மேற்குறிப்பிட்ட கருத்தின் அடிப்படையில்தான் இன்றைக்கு உலகில் மூன்று விதமான பொருளாதார அமைப்புகள் இயங்கி வருகின்றன. ஒன்று அரசு சார்ந்த வேளாண் தொழில் சேவையில் ஈடுபட்டு நாட்டு வருமானத்தை உற்பத்தி செய்யும் பிரிவினர் உருவாக்கும் பொருளாதார அமைப்பு, உற்பத்திக் காரணிகளைத் தங்கள் வசப்படுத்திக் கொள்ளப் போட்டியிடும் உள்நாட்டுப் பன்னாட்டு நிறுவனங்கள், தொழில் சட்டத்தில் இருந்து வரிச்சட்டம் வரை தங்களுக்கு அரசு ஆதரவாக இருப் பதற்காக கொடுப்படும் கையூட்டுகளை வைத்துப் பணத்தை மென்மேலும் பெருக்கி கருப்புப் பண பொருளாதாரத்தை உருவாக்கும் இரண்டாம் அமைப்பு. கணக்கில் வராத பணத்தையும் மற்ற விலைமிக்க தங்கம் வைரம் போன்ற பொருள்களைக் கடத்துவதும் இறக்குமதி செய்வதும் இத்தகைய நாட்டு விரோத, பொருளாதார விரோத நடவடிக்கைகளை உலக அளவில் அந்தந்த நாடுகளில் உள்ள வங்கிகளில் மற்ற பொருளாதார போலி அமைப்புகளில் இந்தப் பணத்தை எடுத்துச் சென்று கருப்புப் பணப் பேரரசை உருவாக்கும் படித்த தொழில் நுட்பம் அடங்கிய மூன்றாவது அமைப்பாகும். இந்த மூன்று அமைப்புகளில் இரண்டு மற்றும் மூன்றாவது அமைப்புகள்தான் உலகமயமாதல் கொள்கையைப் பயன்படுத்தி இந்தியாவிலும் உலக அளவிலும் ஊழல்களைச் செய்து வருகின்றன.

2014ஆம் நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைகளில் பிரதமர் மோடி தனது கருப்புப் பணத்தைக் கைப்பற்றி எழைகள் ஒவ்வொருவர் வங்கிக் கணக்கிலும் ரூ.15 இலட்சம் செலுத்துவேன் என்றும், ஆண்டுக்கு ஒரு கோடி வேலை வாய்ப்புகளை உருவாக்குவேன் என்றும் குறிப்பிட்டார். ஆனால் இந்தக் கருப்புப் பண ஒழிப்பு நடவடிக்கைகளில் ரூ.500, 1000 ரூபாய் நோட்டுகள் செல்லாது என்று அறிவிப்பால் ஏழை நடுத்தர வர்க்கத் தினர்தான் அலைகழிக்கப்பட்டனர். வங்கிகளின் வாசல் களிலேயே 134 பேர் இறந்தனர். தமிழ்நாட்டில் அண்மை யில் கைது செய்யப்பட்ட சேகர் ரெட்டி போன்றவர்கள் பழைய ரூ.500 ரூ.1000 நோட்டுகளுக்குப் பதிலாகப் புதிய நோட்டுகளை எளிதாக மாற்றி வெற்றி கண்டனர். இது ஒரு பெரு வெள்ளத்தின் சிறு துளியாகும்.

இதனால் இன்றுவரை ஒன்றிய அரசு வெளிப்படையாகக் கருப்புப் பண நடவடிக்கையால் அரசிற்கு வந்த மொத்தக் கருப்புப் பணத்தொகையின் அளவை வெளியிட மறுக்கிறது. காரணம் பிரதமருக்கு நெருங்கிய குஜராத் நண்பர்களான அம்பானி, அதானி போன்றவர்களே பொதுத்துறை வங்கிகளில் இலட்சங் கோடி அளவில் கடன் பெற்றுத் திரும்ப அளிக்காமல் வெளிப்படையாகவே இயங்கி வருகின்றனர். கோதாவரி ஆற்றுப்படுகையில் அம்பானி நிறுவனம் எரிவாயுவைத் திருடிய வழக்கு, அதானிக் குழுமம் 300 கோடி முதலீட்டைப் போலியாகச் செய்து ரூ.3000 கோடி அளவிற்கு வரிச்சலுகைகளைப் பெற்றது போன்ற பல ஊழல் குற்றச்சாட்டுகளை மும்பையில் இருந்துவரும் அரசியல் பொருளதார ஏடு வெளியிட்டது. ஒன்றிய அரசு இதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமா என்ற அறைகூவலையும் விடுத்தது. ஊழல் நடவடிக்கைகளில் கூட நீதிமன்றங்கள் சரிவர இயங்கவில்லை என்பது ஊழல் வழக்குகள் விசாரணையின் போதும் தீர்ப்பின்போதும் கீழமை நீதிமன்றங்களில் இருந்து உயர்-உச்ச நீதிமன்றங்கள் வரை பல முரண்பாடுகளும் முரண்பட்ட தீர்ப்புகளும் வெளி வந்துள்ளன.

சான்றாக கீழமை நீதிமன்ற நீதிபதி குன்கா அன்றைய தமிழக முதல்வர் ஜெயலலிதா மற்றும் சசிகலா ஆகியோர் மீது வருமானத்திற்கு மீறிய சொத்துக் குவிப்பு வழக்கில் நான்காண்டு தண்டனை மற்றும் 100 கோடி ரூபாய் அபராதமும் ஊழல் பணத்தில் வாங்கிய சொத்துகளைக் கைப்பற்றவும் நடவடிக்கைகள் எடுக்கவும் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பினை வழங்கினார். 2014 செப்டம்பர் மாதம் உடனடியாக உச்ச நீதிமன்றம் வரை சென்ற ஜெயலலிதா 22 நாட்களிலேயே பிணையில் வெளிவந்தார். அன்றைய தலைமை நீதிபதி தத்து இந்தப் பிணை விசாரணையை வெளிப்படையாகவும் மேற்கொள்ளவில்லை வெளிப்படையாகவும் தீர்ப்பை வழங்கவில்லை. உச்ச நீதிமன்ற நீதிபதிகள் அமர்வு ஜெயலலிதாவின் மேல் முறையீட்டு மனுவினை கர்நாடக உயர்நீதிமன்றம் 3 மாதத்திற்குள் முடிக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்தது. கர்நாடக உயர்நீதி மன்ற நீதிபதி குமாரசாமி நீதிபதி குன்காவின் தீர்ப்பினை அடியோடு மாற்றி, ஜெயலலிதா சசிகலா உள்ளிட்ட அனைவரையும் விடுதலை செய்தார். கர்நாடக அரசு 2015 ஜூன் திங்களில் நீதிபதி குமாரசாமி வழங்கிய தீர்ப்புக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. இந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும் போதே ஜெயலலிதாவிற்கு எதிராக வாதாடிய பின்பு பாஜகவின் வலியுறுத்தியதால் மாற்றப்பட்ட பி.வி.ஆச்சார்யா எல்லாம் நினைவிலிருந்து (All From Memory) என்ற தனது நூலை வெளியிட்டார். அந்நூலில் கர்நாடக பாஜக அரசும் ஜெயலலிதாவின் ஆள்களும் எவ்வாறு தன்னை மிரட்டினார்கள் என்பதை வெளிப்படையாகக் குறிப்பட்டுள்ளார். இந்நூலைப் புதுதில்லியில் வெளியிட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. உச்சநீதிமன்றத்தில் குறிப்பிட்ட கால வரையறைக்குள் ஆச்சார்யா தனது வாதுரையை எழுத்துவடிவில் அளித்தோடு வாதங்களை முன்வைத்தார். இந்த வழக்கு 2016 ஜூன் 7 அன்று நிறைவு செய்யப்பட்டு விரைவில் தீர்ப்பு அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. மூன்று மாதங்கள் இந்த வழக்கின் தீர்ப்பை உச்சநீதிமன்றம் வெளியிடவில்லை. ஜெயலலிதா செப்டம்பர் 2016 உடல் நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். 75 நாட்களுக்குப் பிறகு டிசம்பர் 5 2016 அன்று மறைந்தார். வழக்கின் இறுதித் தீர்ப்பு 21 ஆண்டுகளுக்குப் பிறகு 14 பிப்ரவரி 2017 அன்று, சசிகலா இளவரசி சுதாகரன் ஆகிய மூவருக்கும் தலா நான்காண்டு சிறைத்தண்டனையும் தலா 10 கோடி அபராதமும் விதிக்கப்பட்டு நீதிபதி குன்காவின் தீர்ப்பை உச்ச நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது. இந்த வழக்கில் உச்ச நீதிமன்றத்தில் வாதாடிய ஆச்சார்யா அண்மையில் ஆங்கில இந்து இதழில் ஒரு கட்டுரையை எழுதியிருந்தார்.

அக்கட்டுரையில் சட்டப்படி உச்சநீதிமன்றம் ஜெயலலிதா இறந்துவிட்டார் என்ற காரணத்திற்காக அவரது குற்றச் செயலுக்குத் தணிப்பை (abatement) அளித்தது தவறு. இந்திய உரிமையியல் சட்டத்தில் இது போன்று தணிப்பு அளிப்பதை அனுமதிக்கவில்லை இந்த அவசர தீர்ப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்ட இயல் நெறிகளில் இல்லவே இல்லை (Order XXII Rule 6 of the Code of Civil Procedure in unambiguous terms states that there will be no abatement of an appeal if the death is after judgment is reserved. It further clarifies that such judgment pronounced shall have the same force and effect as if the judgment was delivered on the date on which the arguments were concluded.... The abrupt conclusion of the Supreme Court that the appeal against Jayalalithaa has abated ignores the above said principle of law. It is also relevant to note that the case was never posted for further hearing after the death of the accused. *the Hindu, April, 18, 2017*) என்று குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறாக 21 ஆண்டுகள் இழுத்தடிக்கப்பட்ட சொத்துக் குவிப்பு வழக்கில் தீர்ப்பு வழங்குவதில் காலம் கடத்தி, ஜெயலலிதா மரணத்திற்கு பிறகு தீர்ப்பு வழங்கியதால், சசிகலா அவரது உறவினர்கள் மட்டும் சிறைத்தண்டனைக்கு உள்ளானதும் பல ஐயங்களைச் சட்ட வல்லுநர்கள் மத்தியிலே ஏற்படுத்தியுள்ளது. சாதிக்கு ஒரு நீதியா? என்ற வினாவும் எழுகிறது.

எனவே ஊழல் எப்படியெல்லாம் புரையோடியிருக்கிறது என்பதை நிர்வாக-நீதிமன்ற-சட்டமன்ற நடவடிக்கைகள் உறுதி செய்கின்றன. 2013இல் உருவாக்கப்பட்ட லோக்பால் சட்டம் பிரதமர் மோடி அரசை உச்ச நீதிமன்றம் கண்டிக்

கின்ற அளவிற்கு சாக்குப் போக்குக் காட்டி இன்றுவரை நடைமுறைபடுத்தாமல் இருப்பது யாருக்காக? என்ற கேள்வியும் எழுகிறது. **ஊழலின் உறைவிடம் எதிர்கட்சிகள்தான் என்பதைப் போன்ற தோற்றத்தை அளிப்பதற்கு மோடி வருமானவரித் துறையினரையும் அமலாக்கத் துறையினரையும் மத்தியப் புலனாய்வு துறையினரையும் பயன்படுத்துகிறார் என்ற குற்றச்சாட்டுகள் உண்மையோ என்று ஐயங்கொள்கிற அளவிற்கு, லோக்பால் சட்டம் நடைமுறைக்கு வராமல் காலம் தாழ்த்தப்படுகிறது. ஊழல் முழு அளவில் ஏழைகளையும் நடுத்தர வர்க்கத்தினரையும்தான் பெருமளவில் பாதித்து வருகிறது.** ஊழல் பொருளாதாரத்தின் அடிப்படை நெறிகளையே சிதைத்து வருகிறது. கள்ளச்சந்தை கருப்புப்பணம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் விலைவாசி உயர்வைப் பற்றிக் கவலை கொள்வதே இல்லை. இதற்கு நேர்மாறாக நடுத்தர வர்க்கம் ஏழைகள் விவசாயிகள் பெருமளவிற்குப் பணவீக்கத்தாலும் புதிய புதிய வரிகளாலும் பாதிக்கப் படுகின்றனர்.

இந்தியாவில் எப்போதும் இல்லாத அளவிற்கு, இந்தியாவின் 53 விழுக்காடு செல்வமும் சொத்துக்களும் 1 விழுக்காடு பெரும் பணக்காரர்களிடம் முடங்கியிருக்கிறது. இத்தகைய நடவடிக்கைகள் பொருளாதாரத்தின் வளர்ச்சியின் சுழற்சியையே முடக்கிப் போட்டுள்ளது. இந்த நிலைகளை எல்லாம் கொஞ்சமாவது மாற்றிட ஒன்றிய அரசிற்கு முற்போக்கான லோக்பால் சட்டமும், மாநிலங்களுக்கு லோக்ஆயுக்தா சட்டங்களும் முழுத் தீர்வாக அமையுமா என்ற வினாவும் எழுகிறது. ஊழல் முதலாளித்துவத்தின் ஒரு தீமை (Corruption is an evil of capitalism) என்றார் மாவோ. வாடி வதங்கி வாழும் பெரும்பான்மையான மக்களின் மீதுதான் இந்த முதலாளித்துவத்தின் தீமையும் சீண்டிப்பார்க்கிறது.

## அறிவிப்பு

சிந்தனையாளன் இதழுக்கான ஆண்டுக் கட்டணம், பத்தாண்டுக் கட்டணம் முடிந்த உறுப்பினர்கள் 2017 ஆகஸ்ட்டு இறுதிக்குள் புதுப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். அவ்வாறு புதுப்பிக்காத உறுப்பினர்களுக்கு 2017 செப்டம்பர் முதல் சிந்தனையாளன் இதழ் அனுப்பப்படுவது நிறுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**- ஆசிரியர் குழு**

## பெரியார் பெருந்தொண்டர் அரங்க. சானகிராமன் பெயர்த்தி கீர்த்தனா 10ஆம் வகுப்புத் தேர்வில் மாநிலத்தில் முதலிடம்



கி. கீர்த்தனா, 10ஆம் வகுப்புத் தேர்வில் 500 மதிப் பெண்களுக்கு 498 மதிப் பெண்கள் பெற்று மாநில அளவில் முதலிடம் பெற்றுள்ளார். இவர் காஞ்சிபுரத்தில் சோழன் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளியில் படித்து வருகிறார்.

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் விவசாயப் பிரிவு செயலாளராக உள்ள அரங்க. சானகிராமன் மகள் அன்புமணியின் மகள் கி. கனிமொழி-கிருஷ்ணமூர்த்தி இணையரின் மகளாவார் கி. கீர்த்தன.

இவர் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.அ. எழிலரசுவின் அத்தை மகள் ஆவார். செய்தியறிந்த சட்டமன்ற உறுப்பினர் கீர்த்தனாவை இல்லத்துக்கு வரவழைத்து மனதாரப் பாராட்டியதுடன், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரிடம் பொன்னையா தகவல் தெரிவித்தார், மாநில அளவில் தேர்ச்சி பெற்று முதலிடம் பெற்று காஞ்சிபுரத்துக்குப் பெருமை சேர்த்த கீர்த்தனாவை மாவட்ட ஆட்சியாளர் மனதாரப் பாராட்டினார்.

மா.பெ.பொ.க. பொதுச் செயலாளர் ஆனைமுத்துவுக்கு அரங்க. சானகிராமன் தகவல் தெரிவித்தார். அவரும் செல்வி. கீர்த்தனாவை மனதாரப் பாராட்டினார்.

மா.பெ.பொ.க. மாவட்டச் செயலாளர் சி. நடராசன், நகரச் செயலாளர் செய்ப்பிரகாசு மற்றும் தோழர்களுடன் சானகிராமன் இல்லம் சென்று, இயக்கத் தோழரின் பெயர்த்தி மாநில அளவில் முதலிடம் பெற்றதற்குப் பாராட்டுத் தெரிவித்தனர். மற்றும் காஞ்சி பல்லவன் நகர அரிமா சங்கம், வர்த்தகக் கழக நிர்வாகிகளும் நேரில் சென்று பாராட்டுத் தெரிவித்தனர்.

**கவிஞர் தமிழேந்தியுடன் தொடர்புகொள்ள அலைபேசி எண்கள்**

**9443432069 / 7010251110**

# தோழர் ஈ.வெ.ரா. ஸ்டேட்மெண்டு சமதர்மப் பிரச்சார உண்மை விளக்கம் கோவை மாவட்ட ஆட்சியர் முன் 1934இல் அறிக்கை

இ.பி.கோ. 124-A செக்ஷன்படி தொடரப்பட்டுள்ள 'பொதுவுடைமை' பிரச்சாரத்திற்காகவும் 'இராஜ நிந்தனை' என்பதற்காகவுமுள்ள வழக்கு கோவையில் 12இல் ஆரம்பிக்கப்பட்டபோது தோழர் ஈ.வெ. இராமசாமி அவர்கள் கோவை ஜில்லா கலெக்டர் G.W. வெல்ஸ், I.C.S. அவர்கள்முன் தாக்கல் செய்த ஸ்டேட்மெண்ட்:

1. என் பேரில் இப்போது கொண்டுவரப்பட்டிருக்கும் வழக்குக்கு ஆதாரமே கிடையாது.
2. வழக்குக்கு அஸ்திவாரமான 29.10.1933 தேதி "குடிஅரசின்" தலையங்கத்தை இப்போது பல தரம் படித்துப் பார்த்தேன். அதை நான் எழுதினேன் என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன்.
3. அதில் எழுதப்பட்டிருக்கும் விஷயங்களுக்காவது வாக்கியங்களுக்காவது ராஜத் துவேஷக் குற்றம் சாட்டப்படுமானால் இன்றைய அரசாங்க முறை, நிர்வாக முறை முதலியவைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்து குறைகளை எடுத்துச் சொல்லவோ, அவற்றால் மக்களுக்கு ஏற்படக்கூடிய கஷ்டங்களை விலக்கப் பரிகாரம் தேட ஏற்பாடு செய்யவோ யாருக்கும் சுதந்தரம் கிடையாது என்றுதான் முடிவு செய்யப்பட்டதாகும்.
4. என்ன காரணத்தைக் கொண்டு என்மேல் ஆதாரமற்ற இந்தப் பிராது தொடரப்பட்டிருக்கிறது என்று யோசித்துப் பார்த்தால், என்னுடைய சமதாமப் பிரச்சாரத்தை நிறுத்திவிடச் செய்வதற்காக முதலாளி வர்க்கமோ, அல்லது மத சம்பிரதாயக்காரர்களோ செய்த சூழ்ச்சியாக இருக்க வேண்டும் என்ற முடிவுக்குத்தான் வரவேண்டியிருக்கிறது. வியாசத்தின் விஷயத்திலாவது, பதங்களிலாவது நோக்கத்திலாவது சாட்டப்பட்ட குற்றத்தின் அமைப்பே கிடையாது.
5. முக்கியமாய் அதில் சொல்லப்பட்ட விஷயம் எல்லாம் கல்வி இலாக்காவின் சம்பளங்கள் அதிகமென்றும், பிள்ளைகளுக்குக் கல்விச் செலவு அதிகமென்றும், அதற்கேற்ற பயன் விளைவதில்லை என்றும், ஏழைகளுக்குக் கல்வி பரவ சவுகரியம் இல்லை என்றும், இப்படிப்பட்ட முறையால் இலாபம் பெரும் பணக்காரர்களும் அதிகார வர்க்கத்தாரும் உத்தியோகஸ்தர்களும் சொல்லுவதைக் கேட்டு ஏமாந்து போகாமல் வரப்போகும் (சீர்திருத்த) எலெக்ஷன்களில் ஜாக்கிரதையாய் நடந்துகொள்ள வேண்டும் என்று ஏழை பொது ஜனங்களுக்கு எடுத்துக்காட்டியதேயாகும்.
6. நான் 7, 8 வருஷ காலமாய் சுயமரியாதை இயக்க சமதர்ம பிரச்சாரம் செய்து வருகிறேன். சமூக வாழ்விலும் பொருளாதாரத்திலும் மக்கள் யாவரும் சமத்துவமாய் வாழவேண்டுமென்பது அப்பிரச்சாரத்தின் முக்கியத் தத்துவமாகும்.
7. நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களை நாட்டு மக்கள் யாவரும் சமமாய் அனுபவிக்க வேண்டும் என்பதும், அவ்வுற்பத்திக்காகச் செய்யப்பட வேண்டிய தொழில்களில் நாட்டு மக்கள் எல்லோரும் சக்திக்குத் தக்கபடி பாடுபட வேண்டும் என்பதும் அத்தத்துவத்தின் கருத்தாகும்.
8. அவ்வியக்க இலட்சியத்திலோ, வேலைத் திட்டத்திலோ, பிரச்சாரத்திலோ, அதற்காக நடைபெறும் 'குடிஅரசுப்' பத்திரிகையிலோ பலாத்காரம், துவேஷம், இம்சை இடம்பெற்றிருக்கவில்லை. எந்தவிதத்திலாவது அவை நமது நாட்டில் இடம்பெறுவது என்பதும் எனக்கு இஷ்டமான காரியம் அன்று.
9. இதற்கு அத்தாட்சி வேண்டுமானால் பல வருஷங்களாக இரகசியப் போலீஸ் இலாக்கா, சுருக்கெழுத்து அறிக்கைக்காரர்கள் எனது பிரசங்கத்தை விடாமல் குறித்து வைத்திருக்கும் அறிக்கைகளையும், சுமார் பத்து வருஷத்திய "குடிஅரசு" பத்திரிகையின் வியாசங்களையும் சர்க்கார் கவனித்து வந்தும் என்மேல் இத்தகைய வழக்கு இதற்குமுன் ஏற்படுத்தியதில்லை என்பதே போதும்.
10. **அரசாங்கமானது முதலாளித்தன்மை கொண்டதாய் இருப்பதால் அது இத்தகைய சமதர்மப் பிரச்சாரம் செய்யும் என்னையும் எப்படியாவது அடக்க வேண்டுமென்று முயற்சி எடுத்துக் கொண்டிருப்பதில் அதிசயமில்லை. தற்கால அரசாங்க ஆட்சியில்பங்குபெற்றுப் போகபோக்கியமும், பதவியும், அதிகாரமும் அடைந்துவரும் பணக்காரர்களும் மற்றும் மதம், சாதி, படிப்பு என்கிற சலுகைகளைக் கொண்டு முதலாளிகளைப் போலவே வாழ்க்கை நடத்துகின்றவர்களும் இப்படிப்பட்ட அரசாங்கத்திற்கு நேர்முகமாகவும், மறைமுகமாகவும் உதவிசெய்து தீரவேண்டியவர்களாய் இருப்பதால் அவர்களும் இம்முயற்சிக்கு அனுகூலமாய் இருப்பதிலும் அதிசயமில்லை.**
11. **பல நூற்றாண்டுகளாக உலக வாழ்க்கையில் கடவுள் செயல் என்றும் இயற்கை என்றும் கருதும்படியாகச் செய்து நிலைநிறுத்தப்பட்டு நடைபெற்றுவரும் சமூக அமைப்பையும் பொருளாதார முறையையும் மாற்றுவது என்பது சிலருக்கு இஷ்டப்படாத காரியமாய்**

**இருந்தாலும், அவற்றை மாற்றி அமைத்தா லொழிய மக்கள் வாழ்க்கைகளில் உள்ள அநேக கஷ்டங்களும் குறைகளும் நிவர்த்தி யாகி சவுக்கியமாகவும் திருப்தியாகவும் வாழ முடியாது என்பது எனது உறுதி.**

**12. இப்படிப்பட்ட ஒரு மாறுதல் உண்டாக ஆசைப் படுவதும் அதற்காக பலாத்காரம், துவேஷம், இம்சை ஆகியவைகள் இல்லாமல் பிரச்சாரம் செய்வதும் குற்றமாகாது.**

**13. ஏதாவது ஒரு கொள்கைக்குப் பிரச்சாரம் பரவ வேண்டுமானால் அக்கொள்கையில் இடையூறு செய்பவர்களால் அடக்குமுறைக்கு ஆளாக வேண்டியதும் அவசியமேயாகும். அதற்காக நாமே வலுவில் போய்க் கஷ்டத்தைக் கோரி எடுத்துக் கொள்ளக்கூடாது என்றாலும், தானாகவே ஏற்பட்ட ஒரு நல்ல சந்தர்ப் பத்தை யாரும் இழந்துவிடக்கூடாது. இந்தப் பிரச்சாரத்தைத் தடுக்க வேண்டுமென்று கருதி இந்த வழக்கைக் கொண்டு வந்திருக்கிறார் கள். ஆதலால் அவர்கள் எப்படியாவது எனது வியாசத்தில் துவேஷம், வெறுப்பு, பலாத்காரம் முதலியவை இருப்பதாகக் கற்பனை செய்து தீரவேண்டியவர்கள் ஆகிவிட்டார்கள். அந்தப் படி செய்யப்படும் கற்பனைகளால் நான் தண்டிக்கப்பட்டாலும் பொதுவாக என் மீது நம்பிக்கையும் நல்ல எண்ணமும் உடையவர் களும் சிறப்பாக எனது கூட்டு வேலைக்காரத் தோழர்களும் தப்பான அபிப்பிராயம் கொள் ளக்கூடுமாதலால் அப்படிப்பட்ட கற்பனை களை மறுத்து உண்மையை விளக்கிவிட வேண்டுமென்றே இந்த ஸ்டேட்மெண்டைக் கொடுக்கக் கடமைப்பட்டவனானேன்.**

**14. இதனால் பொதுஜனங்களுடைய கவனிப்பு இன்னும் அதிகமாவதோடு அவர்களது ஆதர வும் பெற நேர்ந்து கிளர்ச்சிக்கு பலமேற்படக் கூடுமாதலால் என்மீது சுமத்தப்பட்ட இந்த வழக்கில் ஒரு ஸ்டேட்மெண்டை மாத்திரம் கொடுத்துவிட்டு எதிர்வழக்காடாமல் இப்போது கிடைக்கப் போகும் தண்டனையை மகிழ்ச்சி யோடு வரவேற்கின்றேன்.**

**15. இந்நிலையில் சர்க்கார் என்னைத் தண்டித்தா லும் சரி, அல்லது இந்தப் பிராதுக்குப் போதிய ஆதாரமில்லை என்று நியாயத்தையும் சட்டத் தையும் லட்சியம் செய்து வழக்கைத் தள்ளி விட்டாலும் சரி, இப்படிப்பட்ட அடக்குமுறையை வரவேற்குமாறு எனது தோழர்களுக்கு வழி காட்ட எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பற்றி மகிழ்ச்சி அடைகிறேன்.**

**- புரட்சி 21.01.1934**

## ஒற்றைப் பனைமரம்

ஒற்றைப் பனைமரம்நான்
உறுதிமிக்க ஓரிதயம்
சற்றே என்நிழலில்
சாகுமட்டும் வாழ்ந்திடலாம்!

வியர்த்தால் விசிறி
விழிமூடித் தூங்கும்
செயலுக்கு நற்பாய்
சிறுகுடிசைக் கூரை
எல்லாம் பனைஓலை
இத்தோடு சுண்ணாம்பு
இல்லாத கள்ளும்
இளநுங்கும் நான்தருவேன்!

கல்மழைக்குத் தாயான
காற்று இடிமின்னல்
எல்லாம் எனைத்தாக்கும்!
என்றாலும் நான்என்றும்
ஆணிவேர் என்னும்
இதயத்தால் மன்னுயிரைப்
பேணிப் பரவிப்
பெருமரமாய் வாழ்ந்திடுவேன்!

ஒற்றைப் பனைமரம்நான்
ஓய நிழல்தருவேன்!
சற்றே வருமானம்
சாவினிலும் நான்தருவேன்!

**- கலசம்**

## முனைவர் ப. வெங்கடேசன்
### பணிநிறைவு பெற்றார்



மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி முன் எடுக்கும் எல்லா செயல்பாடு களுக்கும் உறுதுணையாக விளங்குபவரான வாலாசப் பேட்டை முனைவர் ப.வெங்க டேசன் அவர்கள் தலைமை யாசிரியர் பணியில் பணி நிறைவு பெற்றார். வேலூர் மாவட்டம் நீலகண்டராயபுரம் அரசு மேனிலைப் பள்ளியில் முனைவர் ப.வெங்க டேசன் தலைமையாசிரியராகப் பணியாற்றி 31.05.2017ல் பணிநிறைவு பெற்றார். அதன் நினை வாக சிந்தனையாளன் வளர்ச்சி நிதிக்காக ரூ.5000 வழங்கினார்.

## சிந்தனையாளன் இதழ் 2017 சூலை முதல் 44 பக்கங்களாக வெளிவரும் :

சிந்தனையாளன் இதழுக்கான தாள், அச்சுக்கூலி முதலானவை விலை உயர்ந்துவிட்டன. எனவே சிந்தனையாளன் இதழின் விலையை அதிகப்படுத்த இயலாத காரணத்தால் 2017 சூலை முதல் சிந்தனை யாளன் தற்போது 52 பக்கங்கள் என்று இருப்பது 44 பக்கங்களாக வெளிவரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். இம்மாற்றத்தை அனைவரும் ஏற்று ஒத்துழைக்குமாறு வேண்டுகின்றோம்.

**- ஆசிரியர் குழு**

# காரல் மார்க்சு 200வது பிறந்த ஆண்டு சில குறிப்புகள்: இளம் தோழர்களுக்கு

**க.முகிலன்**

**கா**ரல் மார்க்சு 1818ஆம் ஆண்டு மே 5ஆம் நாள் செருமனி (பிரஷ்யா) நாட்டில் டிரியர் எனும் சிறிய நகரத்தில் பிறந்தார்.

காரல் மார்க்சு தன் பள்ளிப்படிப்பின் இறுதித் தேர்வில், ''எதிர்காலப் பணியைத் தேர்வு செய்வது குறித்து ஒரு இளைஞனின் சிந்தனைகள்'' எனும் தலைப்பில் எழுதிய கட்டுரையில், ''மனித குலத்தின் பெருமைக்காகப் பாடுபடக்கூடிய ஒரு வேலையைத் தீர்மானித்துக் கொண்டால், எவ்வளவு சுமைகளும் நம்மை வளைத்துவிடாது. ஏனெனில் அவை யெல்லாம் அனைவருக்குமான தியாகங்கள். நமக்குக் கிடைக்கப் போகிற மகிழ்ச்சியோ எல்லையற்றது; கஞ்சத் தனமில்லாதது; அகங்கார மற்றது. நமது மகிழ்ச்சி கோடானுகோடி மக்களுக்குச் சொந்தமானது. நமது சாதனைகள் நீடித்து நிற்கும்; என்றும் செயல்பட்டுக் கொண்டிருக்கும். உன்னதமான மனிதர்கள் வடிக்கும் கண்ணீரால் நமது சாம்பல் கழுவப்படும்'' என்று எழுதினார். ஆழ்ந்த கருத்துகளைக் கவிதை நடையில் எழுதும் ஆற்றல் காரல் மார்க்சுக்குப் பள்ளிப் பருவத்திலேயே அமைந்துவிட்டது. **மார்க்சு எழுதிய இக்கட்டுரையும் மற்றும் ஆறு கட்டுரைகளும் இன்றும் பாதுகாப்பாக வைக்கப் பட்டுள்ளன.**

'டெமாக்ரிடஸ் மற்றும் எபிகூரசு ஆகியோரின் இயற்கை பற்றிய தத்துவத்தில் வேறுபாடு' எனும் தலைப்பில், மார்க்சு தன் முனைவர் பட்டத்துக்கான ஆய்வுக் கட்டுரையை எழுதினார். டெமாக்ரிடஸ், எபிகூரசு இருவருமே நாத்திகர்கள். ஆயினும் டெமாக்ரிடசைவிட எபிகூரசின் ஆய்வும், தத்துவமும் உயர்ந்தவை என்பது மார்க்சின் மதிப்பீடாகும். இக்கட்டுரையில் எபிகூரசை, கீழ்க்குறித்துள்ள லுக்ரிடசின் புகழ் மொழிகளை மேற்கோள் காட்டி மார்க்சு பாராட்டியுள்ளார்.

''பிணம் போல் கனத்த மதத்தின் சுமை தாங்காமல் மனிதக் கண்ணுக்கும் புலப்படாதபடி மனித வாழ்வு முட்டிபோட்டு ஊர்ந்தது. முரண்டு பிடித்த தனது ஊனக் கண்களை கிரேக்கத்தின் ஒரு மனிதன் உயர்த்தினான். முதலில் முதுகெலும்பை நிமிர்த்தினான். துணிவோடு எதிர்கொண்டான். கடவுள்கள் பற்றிய கதைகள் அவனை நொறுக்கவில்லை. வானத்தின் மின்னல் ஒளியும் இடியும் அவனை அசைக்கவில்லை. அவனது காலடியில் மதம் வீழ்ந்து நசுங்கியது. அவனது வெற்றியால் நாமெல்லாம் வானமளவுக்கு உயர்ந்தோம்.''

**1841 ஏப்பிரல் 15 அன்று ஜெனா பல்கலைக் கழகம் காரல் மார்க்சுக்கு முனைவர் பட்டம் வழங்கியது. அப்போது மார்க்சுக்கு அகவை 23.**



ரைன்லாந்து பகுதியின் தலைநகரான கொலோனில் 1842இல் 'ரைனிஷி ஷெய்டுங்' என்ற நாளேடு தொடங்கப்பட்டது. 1842 மே மாதம் அதில் பத்திரிகைச் சுதந்தரம் பற்றி மார்க்சு நீண்ட கட்டுரை எழுதினார். அக்கட்டுரையில், ''வாழ்வதற்கும் எழுதுவதற்கும் மனிதன் சம்பாதிக்க வேண்டும் என்பது உண்மையே. ஆனால் சம்பாதிப்பதற்காகவே அவன் வாழவோ, எழுதவோ கூடாது. எழுத்தாளனுக்கு அவனது எழுத்து ஒரு கருவி அல்ல. அது தன்னளவிலே முடிந்த ஒரு இலக்கு. தேவைப்பட்டால், எழுத்து உயிர்த்திருப்பதற்காகத் தனது உயிரையும் தியாகம் செய்வான்'' என்று எழுதினார். அதன்படியே தன் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்தார்.

1842இல் அந்நாளேட்டின் ஆசிரியரானார். பிரடெரிக் எங்கெல்சு இங்கிலாந்தில் இந்நாளேட்டின் நிருபராக இருந்து செய்திகளையும் கட்டுரைகளையும் அனுப்பி வந்தார். மார்க்சும், எங்கெல்சும் நேரில் சந்திப்பதற்கு முன்பே, இந்த நாளேட்டின் மூலம் இருவரும் அறிமுகமாகியிருந்தனர். ரைனிஷி ஷெய்டுங் நாளேட்டிற்கு நான்கு மாதங்களே மார்க்சு ஆசிரியராக இருந்தார். அரசின் செயல்பாடுகளைக் கடுமையாகத் திறனாய்வு செய்ததால், அரசு இந்நாளேட்டை வெளியிடுவதற்குத் தடை விதித்துவிட்டது.

1843 சூன் 19 அன்று காரல்மார்க்சும் ஜென்னியும் திருமணம் செய்து கொண்டனர். ஏழு ஆண்டுகளுக்கு மேலான இவர்களின் காதல் திருமணத்தில் முடிந்தது. அப்போது மார்க்சின் அகவை 25. ஜென்னியின் அகவை 29.

பிரஷ்யாவில் (செருமனி) இருந்து கொண்டு பத்திரிகை நடத்த முடியாது என்பதால், பாரிசு நகரிலிருந்து அர்னால்டு ரூகே என்பவருடன் இணைந்து புதிய பத்திரிகை நடத்துவதற்காக, மார்க்சும் ஜென்னியும் 1843 அக்டோபரில் பாரிசில் குடியேறினர். 1844 சனவரியில் 'ஜெர்மன்-பிரெஞ்சு வருடாந்திர ஏடு' என்ற பெயரில் இரட்டை இதழாக வெளிவந்தது. இதன் ஆசிரியர்கள் அர்னால்டு ரூகே - காரல் மார்க்சு என அட்டையில் குறிக்கப்பட்டிருந்தது. இம்முதல் இதழே இறுதி இதழாகவும் அமைந்துவிட்டது. பிரஷ்ய அரசு (ஜெர்மன்) தனது நாட்டுக்குள் இப்பத்திரிகை நுழையத் தடை விதித்தது. மேலும் மார்க்சு தன் சொந்த நாடான பிரஷ்யாவுக்குள் நுழைந்தால் கைது செய்ய ஆணை பிறப்பித்தது.

ஜெர்மன்-பிரெஞ்சு வருடாந்திர ஏடு இதழில் மார்க்சு, 'ஹெகலின் உரிமையின் தத்துவம் பற்றிய விமர்சனத்திற்குப் பங்களிப்பு: ஓர் அறிமுகம்' என்ற கட்டுரையை எழுதியிருந்தார். 13 பக்கங்கள் கொண்ட அக்கட்டுரையில் தான் மார்க்சின் புகழ்பெற்ற - 'மதம் மக்களுக்கு அபின்' எனும் சொற்கோவை இடம்பெற்றுள்ளது. அதன் முழுமையான பத்தி கீழே தரப்பட்டுள்ளது.

"மதத்திற்கு எதிரான போராட்டம் என்பது அந்த மதம் எனும் ஆன்மீக வாசனையைக் கொண்டுள்ள உலகத்திற்கு எதிரான மறைமுகப் போராட்டமே! மத ரீதியான துன்பம் என்பது உண்மையான துன்பத்தின் வெளிப்பாடே - உண்மையான துன்பத்துக்கு எதிரான கண்டனமே. மதம் என்பது; ஒடுக்கப்பட்ட சீவனின் பெருமூச்சு; இதயமற்ற உலகின் இதயம்; ஆன்மநேயமற்ற சூழல்களின் ஆன்மநேயம். அது மக்களின் அபின். **மக்களின் கற்பிதமான இன்பம் என்கிற மதத்தை ஒழிக்க உண்மையான இன்பத்தைக் கொண்டுவர வேண்டியுள்ளது.** நடப்புச் சூழல்கள் பற்றிய மாயைகளைக் கைவிடச் செய்ய, அந்த மாயைகளைத் தாங்கி நிற்கும் சூழல்களைக் கைவிடச் செய்ய வேண்டியுள்ளது. ஆகவே மதம் மீதான விமர் சனம் என்பது மதம் எனும் ஒளி வட்டத்தைக் கொண்ட கண்ணீர் வாழ்வு பற்றிய முதல் விமர்சனமாகும்."

**மதம் நீடித்திருப்பதற்கான அடிப்படைச் சூழலை மாற்றாமல், மதத்தை ஒழிக்க முடியாது என்கிற இம் மாபெரும் கருத்தை, மார்க்சு தன் 26ஆம் அகவையில் கண்டறிந்தார் என்பது பெருவியப்புக்குரியதாகும்.**

மேலும், இதே கட்டுரையில் மார்க்சின் மற்றொரு புகழ்பெற்ற மேற்கோளும் இடம்பெற்றுள்ளது: "ஒரு பௌதிக சக்தியானது இன்னொரு பௌதிக சக்தியாலேயே தூக்கி எறியப்படும். ஆனால் சித்தாந்தமும் கூட ஒரு பௌதிகச் சக்தியாக மாறும் - எப்போது எனில், அது மக்கள் திரளைக் கவ்விப் பிடிக்கும் போது". தத்துவத்துக்கும் நடைமுறைக்கும் இடையிலான தொடர்பையும், தத்துவம் மனிதர்களின் வழியாக மாபெரும் பௌதிகச் சக்தியாக மாறும் என்கிற பேருண்மையையும் மார்க்சு இதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மார்க்சைவிட 14 ஆண்டுகள் மூத்தவரான பாயர்பாக் என்பவர், 1841இல் 'கிறிஸ்துவத்தின் சாரம்' என்கிற நூலை வெளியிட்டார். பொருள் முதல்வாத அடிப்படையில் பாயர்பாக் அந்நூலில் மதத்தை விமர்சனம் செய்திருந்தார். இந்நூலை மார்க்சு வரவேற்றார். ஆயினும் பாயர்பாக் தர்க்க அடிப்படையில்-சிந்தனை அடிப்படையில் மட்டுமே மதத்தை விமர்சனம் செய்திருப்பதை மார்க்சு உணர்ந்தார். பாயர்பாக்கின் தத்துவம் நடைமுறையிலிருந்து விலகி கற்பனை உலகில் நிற்பதால் பயன்படாது என்று எண்ணினார். 1844இல் பாரிசில் இருந்தபோது பாயர்பாக்கின் நூல் பற்றிய தன் கருத்துகளைக் குறிப்பேட்டில் இரத்தினச் சுருக்கமாய் எழுதினார். இதுவே பாயர்பாக் பற்றிய சூத்திரங்கள் எனப்படுகிறது. இதன் 11வது சூத்திரத்தில் "**தத்துவ ஞானிகள் பல வகையிலும் உலகை விளக்கி இருக்கிறார்கள். நாம் செய்ய வேண்டியது என்னவோ அதை மாற்றுவதுதான்" என்று எழுதி இருந்தார்.** இக்குறிப்பேட்டை மார்க்சு இறந்தபிறகே எங்கெல்சு கண்டெடுத்தார்; 1888இல் இதை நூலாக வெளியிட்டார். மார்க்சின் கல்லறையில் இந்தச் சொற்றொடர் மட்டும் பொறிக்கப்பட்டுள்ளது.

பிரஷ்ய அரசின் நெருக்குதல் காரணமாக 1845ஆம் ஆண்டு மார்க்சு குடும்பம் பாரிசிலிருந்து வெளியேற வேண்டும் என்று பிரான்சு அரசு ஆணையிட்டது. அதனால் மார்க்சு குடும்பம் பெல்ஜியத்தின் தலைநகரான பிரஸ்ஸெல்ஸ் நகரில் குடியேறியது. நடப்பு அரசியல் பற்றி மார்க்சு எழுத்து வடிவில் ஏதும் வெளியிடக் கூடாது என்கிற நிபந்தனையின் பேரில்தான் அந்நாட்டில் அவர் தங்க அனுமதிக்கப்பட்டார்.

"இவ்வுலகம் கடவுளால் படைக்கப்பட்டது. கடவுளால் படைக்கப்பட்ட பொருள்களும் உயிரினங்களும் அவை தோன்றிய காலம் முதலாக மாறாமல் நிலைபெற்று இருக்கின்றன" என்று மதவாதிகளும் கருத்து முதல் வாதிகளும் கூறிவந்தனர். இதை மறுத்து செருமானிய தத்துவ அறிஞரான ஹெகல் (1770-1830) "**இவ்வுலகிலும் - இப்பேரண்டத்திலும் உள்ள எல்லாப் பொருள்களும் இயங்கிக் கொண்டும் மாறிக்கொண்டும் இருக்கின்றன. பொருள்களின் இயக்கத்திற்கு அப்பொருள்களுக்குள் பொதிந்துள்ள எதிரெதிர் ஆற்றல்களே - முரண்பாடே காரணம். உலகில் எந்தவொரு பொருளும் தனித்து இருப்பதில்லை. எல்லாப் பொருள்களும்**

**ஒன்றையொன்று சார்ந்து நின்று இயங்குகின்றன"** என்று அறிவியல் அடிப்படையில் ஆராய்ந்து அறிவித்தார். இந்தக் கோட்பாடுதான் இயக்கவியல் எனப்படுகிறது. இதுவே மார்க்சியத்தின் அடிப்படையாகும். எனவேதான் ஹெகல் இயக்கவிலின் தந்தை எனப்படுகிறார்.

ஹெகலின் கோட்பாட்டை மார்க்சு, எங்கெல்சு உள்ளிட்ட எண்ணற்ற இளைஞர்கள் தீவிரமாக ஆதரித்தனர். இவர்கள் 'இளம் ஹெகலியர்' என அழைக்கப்பட்டனர். ஆனால் மார்க்சின் ஆய்வுநோக்கு விரிவடைந்த பின், "உயர்ந்த படைப்புகளை உருவாக் குவதற்கு அடிப்படையாக இருப்பது மனிதனின் சிந்தனையே" என்கிற ஹெகலின் முடிவை மார்க்சு எதிர்த்தார். 'ஹெகல் இயக்கவியலைத் தலைகீழாக நிறுத்தியுள்ளார். அதை நேராக மாற்றுவதே நம் வேலை' என்று மார்க்சு கூறினார்.

ஆனால் மற்ற இளம் ஹெகலியர்கள், ஹெகல் கூறியுள்ளதே சரி என்று கூறி, ஹெகலைத் தலைமேல் வைத்துக் கொண்டாடினர். எனவே இளம் ஹெகலியரின் தத்துவ நிலைபாடுகளுக்கு எதிராக 1845 நவம்பரில் மார்க்சும் எங்கெல்சும் இணைந்து, 'ஜெர்மானிய சித்தாந்தம்' என்ற நூலை எழுதினர். ஆனால் எங்கெல்சின் இறப்புக்குப் பின்னரே, இந்நூலின் சில பகுதிகள் வெளிவந்தன. முழுமையான வடிவில் நூலாக 1930களில் சோவியத் கம்யூனிஸ்டு கட்சியால் வெளியிடப்பட்டது. **இந்த நூலில் தான் மார்க்சியத்தின் பிழிவான வரிகளாகத் திகழும் "உணர்வு வாழ்நிலையைத் தீர்மானிப்பதில்லை. வாழ்நிலை தான் உணர்வைத் தீர்மானிக்கிறது" எனும் வரிகள் இடம்பெற்றுள்ளன.**

இந்திய சமூகத்தில் இந்திய மார்க்சியர்களும், மற்றவர்களும் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே கூறப்பட்டிருப்பது போன்ற - நூற்பா (சூத்திரம்) போன்ற - ஒரு கருத்தை மார்க்சும் எங்கெல்சும், 'செருமானிய தத்துவம்' நூலில் எழுதி யுள்ளனர் :

**"ஆளும் வர்க்கத்தின் சிந்தனைகளே ஒரு யுகத்தை ஆளும் சிந்தனைகளாக உள்ளன. ஆளும் வர்க்கம் என்றால் அது சமுதாயத்தின் பொருளியல் சக்தியை மட்டுமல்லாது அறிவுச் சக்தியையும் ஆளுகிறது. பொருள் உற்பத்திக்கான காரணங்களைத் தன் கட்டுக்குள் வைத்திருக்கிற வர்க்கமானது, அதன் காரணமாகவே அறிவு உற்பத்திக்கான காரணங்களையும் தன் கட்டுக்குள் வைத்திருக்கிறது. இந்தச் சாதனங்களைக் கொண்டிராதவர்களின் சிந்தனைகள் இதற்குப் பொதுவாகவே அடங்கிப் போய்விடுகின்றன."**

இந்தியாவில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக அறிவுச் சக்தியை ஆளும் வர்க்கமாகப் பார்ப்பனர்களே இருந்து வந்துள்ளனர். வருணாசிரம-சாதிய அமைப்பின் காரணமாகப் பார்ப்பனர்கள் சமூகத்திலும் மதம் தொடர்பானவற்றிலும் பெற்றிருந்த ஏகபோக உரிமையால் சமூகத்திற்கான கருத்துரு வாக்கம் செய்யும் மூலகர்த்தாக்களாக விளங்கினர். உற்பத்திச் சக்திகளிலும் உற்பத்தி உறவுகளிலும் வரலாற்றில் ஏற்பட்ட மாற்றங்களால் பார்ப்பனர்களின் ஏகபோக உரிமைகளில் - பிறப்பால் அறிவிலும் தகுதியிலும் உயர்ந்தவர் என்ற நிலைமையில் பெரிய அளவில் மாற்றம் ஏற்படவில்லை. முதலாளிய உற்பத்தி முறை மேலோங்கிய பிறகும், இதே நிலைதான் நீடிக்கிறது.

**ஏனெனில் உற்பத்திச் சக்திகளிலும் உற்பத்தி உறவுகளிலும் மாற்றங்கள் ஏற்படுகின்ற அதே வேகத்தில், அச்சமூகத்தின் சித்தாந்தத்தில் மாற்றங்கள் நிகழ்வதில்லை. இதற்கெனத் தனியாக, தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டாலன்றி, பழைய சமூகத்தின் சித்தாந்த ஆதிக்கமே தொடர்ந்து நீடிக்கும்.**

இந்தியாவில் பாரசிகர், ஹூணர், குஷானர், துருக்கியர், ஆங்கிலேயர் முதலான அயல்நாட்டவர்களின் படையெடுப்பும், ஆட்சிகளும் ஏற்பட்ட பிறகும், இந்தியாவில் பார்ப்பனியச் சித்தாந்தமே சமூகத்தை ஆட்டிப் படைக்கிறது. உற்பத்தி உறவுகளில் ஏற்பட்ட மாற்றத்தின் வேகத்திற்கு ஈடான வகையில் சமூகச் சிந்தனையில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும் என்ற குறிக்கோளுடன் சீனாவில் 1965இல் மாசேதுங் 'கலாச்சாரப் புரட்சியை' நடைமுறைப்படுத்தினார்.

செய்தி ஏடுகள், தொலைக்காட்சி, கணினி போன்ற நவீன ஊடகங்கள் வாயிலாக ஆளும்வர்க்கம் தன் இருத்தலுக்கான நியாயத்தை மக்கள் நெஞ்சங்களில் பதியச்செய்து வருகிறது. இந்தியா அரை நிலப்பிரபுத்துவ-அரை முதலாளித்துவ நாடாக இருப்பதால், பார்ப்பனர்கள், ஊடகங்கள் வாயிலாகத் தங்கள் கருத்தியலை, சாதி அமைப்பை, தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்தி வருகின்றனர்.

1847இல் புருதோன் என்பவர் 'வறுமையின் தத்துவம்' என்ற நூலை எழுதினார். முதலாளித்துவம் பற்றிய பொருளாதார விதிகள் என்பவை நிலையானவை; மாற்ற முடியாதவை என்று புருதோன் அந்நூலில் அறுதியிட்டுக் கூறியிருந்தார். அந்நூலின் கருத்தை மறுத்து, மார்க்சு, 'தத்துவத்தின் வறுமை' என்ற நூலைப் பிரெஞ்சு மொழியில் எழுதினார். ஏனெனில் புருதோன் அவருடைய நூலைப் பிரெஞ்சு மொழியில் எழுதியிருந்தார்.

'பொருளாதாரர விதிகள் என்பவை வரலாற்று ரீதியாக உருவானவை. மனிதனின் தேவைகளின் பொருட்டே புதிய கண்டுபிடிப்புகளும் உற்பத்திச் சாதனங்களும் தோன்றிவருகின்றன. இந்த வளர்ச்சியின் நிகழ்வுப் போக்கின் ஊடாகச் சமுதாயம் மாறுகிறது.

உற்பத்திச் சக்திகளையும் உற்பத்தி உறவுகளையும் அடிக்கட்டுமானமாகக் கொண்டுள்ள சமுதாயத்தில், அவற்றுக்கு ஏற்ப, மேல்கட்டுமானமாக உள்ள அரசியல், சட்டம், தத்துவங்கள் முதலானவற்றில் மாறுதல்கள் ஏற்படுகின்றன' என்று மார்க்சு பதில் அளித்தார்.

இலண்டனில் இருந்த 'நீதியாளர் கழகம்' என்பது 1847 முதல் 'கம்யூனிஸ்டுக் கழகம்' என்ற பெயரில் இயங்கியது. கம்யூனிஸ்டுக் கழகத்தின் வேண்டுகோளை ஏற்று மார்க்சும் எங்கெல்சும் இதில் இணைந்தனர். புதிய பெயருக்கு ஏற்ற தன்மையில் கட்சியின் கோட்பாடுகளை வகுக்கும் பொறுப்பு மார்க்சு, எங்கெல்சு இருவரிடமும் ஒப்படைக்கப்பட்டது. இவர்கள் உருவாக்கிய 23 பக்க அறிக்கை 'கம்யூனிஸ்டு கட்சி அறிக்கை' என்ற பெயரில் 1848 பிப்பிரவரியில் இலண்டனில் வெளியிடப்பட்டது. உலகையே உலுக்கிய இந்த அறிக்கையை எழுதிய போது மார்க்சின் அகவை 30; எங்கெல்சுக்கு 28 அகவை.

**"இதுநாள் வரையிலுமான சமுதாயங்களின் வரலாறு அனைத்தும் வர்க்கப் போராட்டங்களின் வரலாறேயாகும்" எனும் வரியுடன் தொடங்கும் கம்யூனிஸ்டு அறிக்கையில், நிலவுடைமை உற்பத்தி முறையிலிருந்து முதலாளிய உற்பத்தி முறைக்கு மாறியுள்ளதால், சமூகத்தில் உற்பத்தி உறவுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், முதலாளித்துவத்தின் இயக்கப் போக்கு மற்றும் அதன் சுரண்டல் வடிவங்கள் குறித்து நெஞ்சைக் கனலாக்கும் நடையில் எழுதப்பட்டுள்ளது.**

**"அஞ்சி நடுங்கட்டும் ஆளும் வர்க்கங்கள் - கம்யூனிசப் புரட்சி வருகிறதென்று; பாட்டாளிகள் இழப்பதற்கு ஏதுமில்லை - தங்கள் அடிமைச் சங்கிலிகளைத் தவிர!**

**ஆனால் அவர்கள் வெல்வதற்கோ அனைத்து உலகும் இருக்கிறது.**

**எனவே உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்" என்ற அறைகூவலுடன் முடியும் கம்யூனிஸ்டு அறிக்கை உலகம் முழுவதும் உழைக்கும் மக்களிடையே புரட்சிக் கனலை மூட்டியது. முதலாளிகளிடையே பெரும் அச்சத்தை ஊட்டியது.**

கம்யூனிஸ்டு அறிக்கையில், தான் புதியதாகக் கூறியுள்ள கோட்பாடு குறித்து மார்க்சு வெய்டெமையருக்கு 1852 மார்க்சு 3ஆம் நாள் எழுதிய மடலில் அவருக்கே உரிய அறிவு நாணயத்துடன் எழுதியுள்ளார்.

"என்னைப் பொறுத்தவரை நவீன சமுதாயத்தில் வார்க்கங்கள் இருக்கின்றன என்பதையோ, அவற்றிற்கு இடையே போராட்டம் நடக்கிறது என்பதையோ கண்டுபிடித்த பெருமை என்னைச் சேராது. எனக்கு வெகுகாலத்திற்கு முன்னரே இந்த வர்க்கப் போராட்டத்தின் வரலாற்று வளர்ச்சியை முதலாளித்துவ வரலாற்றாளர்கள் விரிவாகக் கூறியிருக்கிறார்கள். அதேபோன்று இந்த வர்க்கங்களின் பொருளாதார உள்கட்டமைப்பை முதலாளித்துவப் பொருளாதாரவாதிகள் விவரித்து விட்டார்கள். **நான் செய்துள்ள புதிய பங்களிப்பு 1. இந்த வர்க்கங்களின் இருப்பு என்பது உற்பத்தி வளர்ச்சியின் குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது என்பதாகும். 2. வர்க்கப் போராட்டமானது அவசியமான வகையில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கு இட்டுச் செல்கிறது. 3. அந்தச் சர்வாதிகாரமும் அனைத்து வர்க்கங்களையும் ஒழித்த, ஒரு வர்க்கமற்ற சமுதாயத்திற்கான இடைக் கால ஏற்பாடாகவே இருக்கும்."**

கம்யூனிஸ்டு அறிக்கையை செருமனி, பிரெஞ்சு, ஆங்கிலம், இத்தாலி, பிளமிஷ், டேனிஷ் ஆகிய ஆறு மொழிகளில் ஒரே சமயத்தில் வெளியிடத் திட்டமிட்டனர். 1848 பிப்பிரவரியில் செருமன் மொழியில் மட்டுமே வெளியிடப்பட்டது. நாற்பது ஆண்டுகள் கழித்து - மார்க்சு மறைந்த பிறகு, 1888இல் தான் ஆங்கில மொழியில் வெளிவந்தது.

'சமதர்ம அறிக்கை' என்ற பெயரில் பெரியார் 1931இல் 'குடிஅரசு' ஏட்டில் கம்யூனிஸ்டு அறிக்கையை வெளியிட்டார். அய்ந்து வாரங்கள் ஒரு தொடராக அது வெளிவந்தது. முதலாளிகளும் பட்டாளிகளும் எனும் முதல் அத்தியாயம் மட்டுமே வெளியானது. ப.ஜீவானந்தம் இதை மொழிபெயர்த்தார்.

கம்யூனிஸ்டு அறிக்கையை குடிஅரசில் வெளியிட்ட போது பெரியார் எழுதிய அறிமுக உரையில், "உலகில் சமதர்ம உணர்ச்சிக்கு விரோதமான தன்மையில் எல்லா நாடுகளிலும் பணக்காரன் - ஏழை, முதலாளி-தொழிலாளி என்கிற வேற்றுமை மட்டுமே இருக்கின்றன. ஆனால் இந்தியாவிலோ, இவற்றுடன்கூட உயர்ந்த சாதி-தாழ்ந்த சாதி என்கிற ஏற்றத்தாழ்வு முதன்மையானதாகவும், இந்தத் தத்துவத்துக்குக் கோட்டையாகவும் இருந்து வருகிறது" என்று எழுதினார். சமதர்மம் வருவதற்கு-வர்க்க ஒர்மை ஏற்படுவதற்குத் தடையாக உள்ள வருணாசிரம-சாதி அமைப்பைத் தகர்க்க வேண்டியது முதன்மையான வேலை என்று பெரியார் தன் வாழ்நாள் முழுவதும் வலியுறுத்தி வந்தார்.

1849 ஆகஸ்டு மாதம் மார்க்சு இலண்டனில் குடியேறினார். அதன்பின், இறுதி வரை இலண்டனிலேயே வாழ்ந்தார். 1851 முதல் இலண்டனில் உள்ள பிரிட்டிஷ் மியூசியம் நூலகத்தில் தொடர்ந்து பல ஆண்டுகள் படித்தார். 1853இல் அமெரிக்காவின் 'நியூயார்க் டெய்லி டிரிபியூன்' ஏட்டிற்கு மார்க்சு இந்தியா வைப் பற்றி 11 கட்டுரைகள் எழுதினார். இலண்டனில் படித்தவற்றின் அடிப்படையில் இந்தியாவின் நிலையை மார்க்சு தெளிவாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

இதோ, ஓர் எடுத்துக்காட்டு :

**“இந்துஸ்தானத்தில் கொலையே ஒரு தெய்வச் சடங்காயிற்று. இதை நாம் மறக்கக் கூடாது. இந்தச் சிறு சமூகங்கள் சாதி வேறுபாடுகளாலும் அடிமை முறையாலும் களங்கமடைந்திருந்தன. மனிதனைச் சூழ்நிலைக்கு எஜமானன் ஆக்குவதற்குப் பதிலாக, அவனை அதற்கு அடிமைப்படுத்தின. சமூக நிலையை ஒருபொழுதும் மாறாத இயற்கை விதியாகச் செய்தன. இயற்கையையே மனிதன் கும்பிட்டு வணங்கும் மிருகத்தனமான நிலைமை ஏற்படுத்தப்பட்டது. இயற்கையின் எஜமானனாகிய மனிதன் குரங்காகிய அனுமன் முன்பும், பசுமாட்டின் முன்பும் தெண்டனிட்டு வணங்கியதில் இந்தச் சிறுமை காட்சியளித்தது. இவற்றை நாம் மறக்கக் கூடாது என்பதே அது.**

1857 மற்றும் 1858இல் ‘நியூயார்க் டெய்லி டிரிபியூன்’ ஏட்டிற்கு சிப்பாய்கலகத்தை மய்யப்படுத்தி மார்க்சு 18 கட்டுரைகளும், எங்கெல்சு 10 கட்டுரைகளும் எழுதினர். மார்க்சு எழுதிய முதல் கட்டுரையில், **“ரோமாபுரியின் பிரித்தாளும் கொள்கை எனும் சக்திவாய்ந்த ஆயுதத்தைக் கடைப்பிடித்தே பிரிட்டன் ஏறக்குறைய 150 ஆண்டுகாலமாக இந்திய சாம்ராஜ்ஜியத்தைத் தந்திரமாகத் தனது பிடியில் வைத்திருக்கிறது. பகைமைகள் நிறைந்த பல்வேறு இனங்கள், குலங்கள், சாதிகள், சமயங்கள், அரசுகள் ஆகியவற்றை ஒன்றுசேர்த்து உருவாக்கப்பட்டிருக்கின்ற பூகோள ஒற்றுமையைத்தான் இந்தியா என்று அழைக்கின்றோம்” என்று எழுதியுள்ளார்.**

1858இல் மார்க்சு ‘அரசியல் பொருளாதார விமர்சனத்திற்கு ஒரு பங்களிப்பு’ என்ற நூலை எழுதினார். இந்நூலுக்கு 1859இல் மார்க்சு ஒரு முன்னுரை எழுதினார். இந்நூலைவிட இந்த முன்னுரை புகழ்பெற்றதாகிவிட்டது. அந்த முன்னுரையில் மார்க்சியத்தின் சாறாக உள்ள ஒரு மேற்கோளைப் படியுங்கள்:

**“மனிதர்கள் தங்களது சமூக வாழ்வை நடத்திச் செல்லும் பொழுது சக மனிதர்களுடன் சில திட்டவட்டமான உற்பத்தி உறவுகளை மேற்கொள்கிறார்கள். அந்த உறவுகள் தவிர்க்க முடியாதவை. இவர்களின் ஆணைக்கு அடங்காதவை. அந்த உற்பத்தி உறவுகளின் கூட்டு மொத்தமே சமுதாயத்தின் பொருளாதாரக் கட்டமைப்பாக - உண்மையான அடித்தளமாக அமைகிறது. இந்த அடித்தளத்தின் மீதே ஒரு சட்டபூர்வ மற்றும் அரசியல் மேற்கட்டுமானம் எழுகிறது. அதற்கேற்ற திட்டவட்டமான சமூக உணர்வுகளும் தோன்றுகின்றன. பொருள் உற்பத்தி வாழ்வு முறையே பொதுவாக சமூக, அரசியல், அறிவுபூர்வ வாழ்வு முறையினை நெறிப்படுத்துகிறது. மனிதனின் உணர்வு நிலை மனிதனின் வாழ்நிலையைத் தீர்மானிக்கவில்லை. மனிதனின் வாழ்வு நிலையே மனிதனின் உணர்வு நிலையைத் தீர்மானிக்கிறது.”**

மனிதகுல வரலாற்றைப் பொருள் முதல்வாத அடிப்படையில் விளக்கும் மார்க்சின் இந்நூல் வெளிவந்த 1859ஆம் ஆண்டில், சார்லஸ் டார்வின் எழுதிய ‘இயற்கைத் தேர்வின் மூலமாக உயிரினிங்களின் தோற்றம்’ எனும் நூலும் வெளிவந்தது. மார்க்சின் வரலாற்றுப் பொருள் முதல்வாதக் கோட்பாட்டுக்கு டார்வினின் நூல் அரண்சேர்ப்பதாக அமைந்தது.

**1867 செப்டம்பர் 14 அன்று மார்க்சின் பேருழைப்பால் உருவாக்கப்பட்ட ‘மூலதனம்’ நூலின் முதல் பகுதி வெளியிடப்பட்டது. முதலாளிய உற்பத்தி முறையில் மூலதனத்தை உருவாக்குவதிலும் பெருக்குவதிலும் அச்சாணியாகச் செயல்படும் ‘உபரி மதிப்பை’ ஆய்ந்தறிந்து கூறியதே மார்க்சின் இரண்டாவது மாபெரும் பங்களிப்பாகும்.**

**அய்ரோப்பிய நாடுகளின் பொருளாதார நிலைமைகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு மூலதனத்தின் முதல் பாகத்தை மார்க்சு எழுதினார். தன் சிந்தனையை மேலும் விரிவுபடுத்துவதற்காக அமெரிக்காவின், இரஷ்யாவின் பொருளாதாரம் குறித்த எண்ணற்ற நூல்களைப் படித்தார். விரிவான குறிப்புகளை எழுதினார். ஆனால் இவற்றை நூல் வடிவில் எழுதுவதற்குள் 1883 மார்ச்சு 14 அன்று அவர் மறைந்தார். ‘மனிதகுலத்தின் ஒரு தலை குறைந்தது. ஆனால் நம் தலைமுறையின் மிகச்சிறந்த தலை அது’ என்று எங்கெல்சு கூறினார்.**

மூலதனத்தின் இரண்டாம் பாகம் என்று எழுத மார்க்சு திட்டமிட்டிருந்ததை, எங்கெல்சு இரு பகுதிகளாகப் பிரித்து இரண்டாம் பாகம், மூன்றாம் பாகம் என்று வெளியிட்டார். இரண்டாம் பாகம் 1885ஆம் ஆண்டிலும், மூன்றாம் பாகம் 1894ஆம் ஆண்டிலும் வெளியிடப்பட்டன. உண்மையில் இரண்டாம், மூன்றாம் பாகங்களை மார்க்சும் எங்கெல்சும் இணைந்து எழுதினார்கள் என்றே கருத வேண்டும்.

வெவ்வேறு நாடுகளில் நிலவும் சமூகச் சூழல்களுக்கு ஏற்பவே மார்க்சியத்தைக் கட்டமைக்க வேண்டும் என்பதை மார்க்சியத்தின் மூலவர்களான மார்க்சும் எங்கெல்சும் வலியுறுத்தியுள்ளனர். இலெனினும் மாவோவும் இக்கருத்துக்கு மேலும் செழுமை சேர்த்துள்ளனர். இந்தியாவின் சமூக உற்பத்தியிலும் உறவிலும் சாதி அமைப்பு திட்டவட்டமான முறையில் செயல் படுகிறது என்பதைக் கருத்தில் கொண்டு, இன்றைய ஏகாதிபத்தியச் சூழலில் மார்க்சியத்தை மறுகட்டமைப்புச் செய்ய வேண்டிய வரலாற்றுக் கடமை நம்முன் உள்ளது.

# மார்க்சியம் - பெரியாரியம் - அம்பேத்கரியம் என்பது ஏன்?

உழைக்கும் வெகுமக்களைப் பிறவியில் தாழ்ந்தவர்களாக - இழிந்தவர்களாகக் கருதியதும் அப்படியே நடத்துவதும் இந்துத மதம் ஒன்றே.

பிறவியால் பிராமணன் உயர்ந்தவன்; சூத்திரன் தாழ்ந்தவன் என்பது இந்துமதம் மட்டுமே. சூத்திரர்களுக்குக் கீழே பஞ்சமர்கள் இருக்கிறார்கள் என்பதும் இந்து மதமே.

**இந்த ஏற்பாடு இன்றும் இந்துச் சட்டத்தில் கெட்டியாக இருக்கிறது; இந்திய அரசமைப்புச் சட்டத்திலும் உறுதிப்பட இருக்கிறது.**

**இதைக் கண்டுங்காணாமல் இருப்பவர்கள் அதிகம் பேர்.**

மெத்தப் படித்தவர்களும், அரசியல் தலைவர்களும், பெருஞ்செல்வந்தர்களும், பேராசிரியர்களும், வழக்குரைஞர்களும், மருத்துவர்களும், வணிகர்களும், தொழிற்சாலை அதிபர்களும் இதுபற்றிக் கவலைப்படுவதில்லை என்பதுடன், இவற்றைப் படித்துப் பார்ப்பதும் இல்லை; கரிசனத்தோடு சிந்திப்பதும் இல்லை.

சித்தார்த்தர் என்கிற கவுதம புத்தர், (கி.மு.563-483) தொல் பழங்காலத்தில், கி.மு.500இல், அறிவுபூர்வமாகப், பிறவியில் உயர்வு-தாழ்வு இருப்பதைக் கண்டித்தார். கி.பி.500 முதல் சித்தர்கள் கண்டித்தனர்.

புத்தர், திருவள்ளுவர், சித்தர்களுக்குப்பின் இதைப் பற்றித் தமிழகத்தில் முதலில் கவலைப்பட்டவர் வடலூர் இராமலிங்க அடிகள். அவர் 1865இல் கவலைப்பட்டார். உடனே அவர் பின்வருமாறு பாடினார்.

''வேதாகமங்களென்று வீண்வாதம் ஆடுகின்றீர்
வேதாகமத்தின் விளைவறியீர்
சூதாகச் சொன்னவலால்
உண்மை வெளிதோன்ற உரைத்தலிலை
என்ன பயனோ இவை''

மேலும்,

''சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே
சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகீர்...
.......................''

என்றும் கூறி இடித்துரைத்தார்.

இவர் சூத்திரராகப் பிறந்தவர்; நடராசப் பெருமானைத் துதித்தவர். ஆனாலும் பிறவியில் கீழ்ச்சாதிக்காரர்.

அதனால்தான் மேலே கண்டவாறு பாடினார்.

தமிழகத்தில் தோன்றியவர்களுள் அடுத்து அத்திப்பாக்கம் அ. வேங்கடாசல நாயகர் 1872இல் பிறவி பேதத்தைக் கண்டித்தார்.

பண்டித அயோத்திதாசர், கி.பி.1907இல் பிறவி பேதத்தைக் கண்டனம் செய்தார். பெரியார் ஈ.வெ.ரா. 21.12.1922இல் கண்டனம் செய்தார்.

**இந்தியாவில் பிறந்த இவர்கள் தங்கள் தங்களை இழித்துப் பேசியதால் பிறவி சாதி இழிவைக் கண்டித்தனர்.**

ஆனால் செருமனியில் பிறந்த காரல்மார்க்ஸ், முதன் முதலாக 10.5.1853இல் பிறவி சாதி அமைப்பைக் கண்டனம் செய்து பின்வருமாறு எழுதினார்.

மானவ தர்மதர்ம சாத்திரத்தில் X-ஆம் அத்தியாயத்தில் 62-ஆம் சுலோகத்தில், ''இந்தியாவில் உள்ள இழிசாதி மக்கள், எந்த எதிர்பார்ப்பும் இன்றி, ஒரு சாகப் போகிற புரோகிதனையோ அல்லது பசுமாட்டையோ காப்பாற்றுவதற்காக தத்தம் உயிரை விட்டால், மோட்சத்தை அடையலாம் என நம்பு கிறார்கள்'' (Compare with the proceeding utarance of Manava Dharma, Chapter X, Sec.62. "Desertion of life, without reward, for the sake of preserving a priest or a cow... may cause the beatitude of those base born tribes")

என, 10.5.1853இல் எழுதினார்.

இந்தியாவில் அன்றும் இன்றும் உழைக்கும் மக்கள் கீழ்ச்சாதிக்காரர்களே. இதுபற்றி மார்க்சு ''மூலதனம்'' இரண்டாம் தொகுதியில் மேலேகண்ட இச்செய்தியைப் பதிவு செய்துள்ளார்.

**இச்செய்தியைத் தமிழ்மக்களின்- இளைஞர்களின்-மாணவர்களின் பார்வைக்குக் கொண்டு வந்தது மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியே.**

பெரியார் ஈ.வெ.ரா. தமிழகத்தில் 1927 முதல் பொது மேடைகளில் சமதர்மம் பற்றிப் பேசினார். சமதர்மம் என்பது உழைக்கும் வகுப்பு மக்களுக்கும் பெண்களுக்கும் முழு விடுதலை அளிப்பது என்பதையும் அவர் அறிந்திருந்தார்.

அவர் மனுநீதி குறித்து எப்போது கவலைப்பட்டார்? 1922இல் கவலைப்பட்டார். எதற்காக? எதனால்?

1922இல் நாடார்கள் தீண்டப்படாதவர்களாக நடத்தப் பட்டார்கள். இதுபற்றி அருப்புக்கோட்டை நாடார் வாலிபர்கள் 31.10.1922இல் ஈ.வெ.ரா.விடம் முறையிட்டார்கள். ''காங்கிரசுக் கட்சி அத்தீண்டாமையை ஒழிக்கப் பாடுபடுமா?'' என்று அவர்கள் கேட்டனர். ''நான் பாடுபடுவேன்'' என, 31.10.1922இல் ஈ.வெ.ரா. வாக்குக் கொடுத்தார்.

அவ்வாக்கை நிறைவேற்ற வேண்டி, 21.12.1922 இல் கோவையை அடுத்த திருப்பூரில் வாசுதேவ அய்யர் தலைமையில் நடந்த மாநாட்டில், மேற்படி தீண்டாமை ஒழிப்புத் தீர்மானத்தை ஈ.வெ.ரா. முன் மொழிந்தார்.

மாநாட்டுத் தலைவர் வாசுதேவ அய்யர், "இது, மதச்சம்பந்தப்பட்ட தீர்மானம். காங்கிரசு அரசியல் கட்சி - இதை அனுமதிக்க முடியாது" எனக் கூறித் தள்ளுபடி செய்துவிட்டார். அங்கிருந்த சி. இராசகோபாலாச்சாரியார், எஸ். சீனிவாச அய்யர் ஆகியோரும் அத்தீர்மானத்தை எதிர்த்தனர். ஈ.வெ.ரா. தீர்மானம் தோற்றுப் போயிற்று.

அதனால் சினங்கொண்ட ஈ.வெ.ரா. 21.12.1922 இரவு அங்கேயே நடந்த காங்கிரஸ் கூட்டத்தில், "நால் வருணத்தையும் தீண்டாமையையும் காப்பாற்றும் இராமாயணத்தையும் மனுநீதியையும் எரிக்க வேண்டும்" என்று முதன்முதலாக அடித்துக் கூறினார்.

**தீண்டாமையும் நால்வருணமும் உழைக்கும் வெகுமக்களைக் கூறுபோடுகின்றன; ஒன்று சேராமல் தடுக்கின்றன; சமுதாய விடுதலை வரத் தடைகளாக உள்ளன.**

**சமுதாய விடுதலை, அரசியல் விடுதலை, பொருளாதார, பண்பாட்டு விடுதலை இவை ஒருசேர வந்தால்தான் மானிட விடுதலை-மானிட சமத்துவம் வந்து சேரும். இவற்றுள் ஒன்று குறைந்தாலும் மானிட சமத்துவம் வராது.**

**இந்திய சமுதாயத்துக்கு - இந்த மண்ணுக்கு ஏற்ற தீர்வு இது; வேலைத் திட்டம் அல்லது வியூகம் இது. இதை எவர் -எக்கட்சி புறந்தள்ளினாலும் அது குறைபாடே; தவறே.**

இத்துடன் மட்டுமா?

மேதை டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் பல்துறை அறிஞர்; பௌத்தம் ஆய்ந்தவர்; மார்க்சியம் கற்றவர்; வேதங்களை, ஸ்மிருதிகளை வடமொழியில் கற்றவர்.

மகத் குளத்தில் உள்ள குடிநீரை எந்த மனிதனும் அள்ளிக் குடித்துத் தாகம் தணிக்கலாம். தீண்டப்படாதோரும் அள்ளிக் குடிக்கலாம். குடத்தில் முகந்து போகலாம் என்கிற உரிமையை அவ்வூர் நகராட்சி வழங்கியிருந்தது.

அந்த நிலையிலும் நூற்றுக்கணக்கான மக்களுடன் படிக்கட்டில் நின்று நீரை அள்ளிக் குடித்ததைப் பொறுக்காமல் சாதி இந்துக்கள் கலகம் விளைவித்தனர்.

**அதைக் கண்டனம் செய்யும் வகையில் அம்பேத்கர் அங்கேயே மனுநீதியை எரித்தார்.**

இவையெல்லாம் 20ஆம் நூற்றாண்டில் நடந்தவை.

இவற்றை நிலைநாட்டும் இந்திய அரசமைப்புச் சட்டமும், இந்துச் சட்டமும் பாதுகாக்கப்படுகிற வரையில் - தமிழ்மொழி எப்படித் தழைக்கும்? இவையும் இராமாயணமும் பாரதமும் பள்ளிப் பாடங்களிலும், ஊர் விழாவிலும், வீடுகளிலும் படிக்கப்படும் வரையில் சூத்திரப் பட்டம் எப்படி ஒழியும்? தமிழ்த் தேசியம் எப்படி மலரும்? திராவிட இன உணர்வு எப்படி ஓங்கும்?

இவை பற்றி ஒவ்வொரு மார்க்சியத் தோழரும், பெரியாரிய, அம்பேத்கரியத் தோழரும் மனங்கொண்டு சிந்தியுங்கள் எனப் பணிவன்புடன் வேண்டுகிறேன்.

**- வே. ஆனைமுத்து**

## தமிழை அழிக்க இந்தியைத் திணிக்கும் பார்ப்பனிய மோடி அரசைக் கண்டித்து இந்தி அழிப்பு-தமிழ் மீட்புப் போராட்டம்



தமிழை அழிக்க இந்தியைத் திணிக்கும் பார்ப்பனிய மோடி அரசைக் கண்டித்து இந்தி அழிப்பு தமிழ் மீட்புப் போராட்டம் தி.பி.2048 மேழம் 29 (12.5.2017) வெள்ளி காலை 10 மணியளவில், சென்னை, கோயம்பேடு மேம்பாலம் அருகில், தமிழ்வழிக் கல்வி இயக்கத் தோழர் அ.சி. சின்னப்பத் தமிழர் தலைமையில் நடைபெற்றது.

புலவர் இர.அரங்கநாடன், புலவர் சிலம்பூர்க்கிழன், புலவர் சங்கைத்தமிழர், ஆசிரியர் ந.க. தமிழாண்மை, ஆசிரியர் சவரிமுத்து, புலவர் தமிழ்த்தென்றல், தோழர்கள் தமிழ்ச்சிற்பி, அழகுஒளி, மணிசேகரன், செந்தமிழ்வேந்தன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இராணிப்பேட்டை கண்ணன் தொடக்கவுரை ஆற்றினார்.

மா.பெ.பொ.க. துணை பொதுச் செயலாளர் தோழர் சி. பெரியசாமி, திராவிடர் விடுதலைக் கழகம் தபசி குமரன், புரட்சிகர இளைஞர் முன்னணி குமரன், தமிழ்த் தேச மக்கள் கட்சி தமிழ்நேயன், தமிழகத் தொழிலாளர் முன்னணி க.இரா. தமிழரசன், தமிழர் எழுச்சி இயக்கம் ப. வேலுமணி, தமிழர் விடுதலைக் கழகம் சவ். சுந்தரமூர்த்தி, தமிழ்த் தேசக்குடியரசு இயக்கம் சிவ. செந்தமிழ்வாணன், தந்தை பெரியார் திராவிடர் கழகம் கரு. அண்ணாமலை, தலைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகம் நந்தன் மற்றும் பல தமிழறிஞர்கள், புலவர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், தமிழ் உணர்வாளர்கள் கலந்து கொண்டனர்.

# தன்னுரிமைத் தமிழகம் அமைப்பதே "சிந்தனையாளன்" இதழின் குறிக்கோள்! தமிழ்ப் பெரியோர்களே! தாய்மார்களே! 100 நாள்களில் 10,000 பேர் உறுப்பினராகுங்கள்

வே.ஆனைமுத்து ஆகிய நான் 21.6.2017 புதன் அன்று, 93ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறேன். 95ஆம் அகவை வரை வாழ்ந்து, தந்தை பெரியாரின் விரிவான வரலாற்றைத் தமிழகத்துக்குத் தர ஆசைப்படுகிறேன்.

1973இல் நான் தமிழக அரசிடம் ரூபா 19000 கடன் பெற்று அச்சிடும் பொறிகளை வாங்கினேன். தந்தை பெரியாரிடம் ரூபா 10,000/- எழுத்துமுறியின் பேரில் (புரோநோட்டின் பேரில்) கடனாகப் பெற்று, அச்செழுத்துக்களை வாங்கினேன்.

17.8.1973இல் தந்தை பெரியார் அவர்களை அழைத்து திருச்சியில், "பாவேந்தர் அச்சகம்" திறப்பு விழா நடத்தினேன்.

தந்தை பெரியார் மறைவுக்குப்பின், 17.8.1974இல் "சிந்தனையாளன்" கிழமை இதழைச் சொந்தமாகத் தொடங்கினேன்.

போதிய வரவேற்பு இல்லாததால், 1000 படிகள் மட்டுமே கிழமைதோறும் அச்சிட்டு, 9.10.1982 முடிய கிழமை இதழாகவும், பிறை இதழாகவும் திருச்சியிலிருந்து என் சொந்தப் பொறுப்பில் வெளியிட்டேன். பெரும் இழப்புக்கு ஆளானேன். என் குழந்தைகள் வஞ்சனை இன்றி உழைத்தனர்.

8.8.1976இல் "பெரியார் சம உரிமைக் கழகம்" என்ற தனி அமைப்பு தொடங்கப்பட்டது.

"பெரியார் அச்சிடுவோர் - வெளியிடுவோர் குழுமம்" ஒன்றை உருவாக்கிப் பங்குகள் சேர்த்து, அவர்களுக்கு என் அச்சகத்தை விற்றேன். அரசுக் கடன்களையும் பெரியார் கடன்களையும் அடைத்துவிட்டு, சென்னை, திருவல்லிக்கேணிக்கு அச்சகத்தை மாற்றி, நானே அச்சக மேலாண்மை இயக்குநராக இருந்து, அச்சகத்தை நடத்தினேன்.

பேராவல் காரணமாக, குழுமத்தின் கிழமை இதழாக, 17.9.1983 முதல் "சிந்தனையாளன்" ஏட்டை, ஆறு மாத காலம் - சுவடி 7, ஏடு 42 வரை நடத்தினோம்.

முன்கூட்டியே உறுப்பினர்களைப் போதிய அளவில் சேர்க்காமல், கிழமைக்கு 5000 படிகள் அச்சிட்டு சென்னைக்கு 3000 படிகளும், வெளி மாவட்டங்களுக்கு 1000 படிகளும் விற்பனையாளர்களுக்கு அனுப்பினோம். உறுப்பினர்கள் 1000 பேர்கள் மட்டுமே. எனவே 6 திங்களில் 40,000 ரூபா கைப்பொறுப்பு ஆயிற்று.

இழுபறியாக அச்சகத்தை நடத்திக் கொண்டு, 1987 முதல் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் மாத இதழாக நடத்துகிறோம்.

சிந்தனையாளன் இதுவரையில் செய்துள்ள சாதனைகள் மனங்கொண்டு பாருங்கள்!

"சிந்தனையாளன்" இதழை வளர்த்தெடுக்க முன் வாருங்கள்! எனப் பணிவுடன் வேண்டுகிறேன்.

நம் சிந்தனையாளன் இதழ்தான் :

* பிற்படுத்தப்பட்டோருக்கு இந்திய மத்திய அரசில் இட ஒதுக்கீடு கோரி, முதன்முதலாக 1975இல் எழுதியது.
* வடமாநிலங்களில், 1978 முதல் 2000 வரை மேற்கொண்ட இடஒதுக்கீடு பயணச் செய்தியைத் தமிழகத்தில் பரப்பியது; வகுப்புவாரி உரிமை நிலைபெற இன்னும் தொடர்ந்து எழுதி வருகிறது.
* இந்திய மக்கள் தொகையில் 85 விழுக்காடு மக்களைக் கொண்ட பெருங்கூட்டமாக இருக்கிற ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களை ஒன்றிணைத்து, இந்திய ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்கிற அரசியல் இலக்கை வென்றெடுத்திட, மார்க்சிய - பெரியாரிய - அம்பேத்கரிய நெறியில் நின்று, இந்தியாவில் உண்மையான கூட்டாட்சி மலரப் பாடுபடுகிற மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் செயல்பாடுகளைத் தமிழக மக்களிடம் கொண்டு செல்கிறது.
* "மார்க்சியம் - பெரியாரியம் - அம்பேத்கரியம் என்பது ஏன்" என்பதைத் தமிழகத்தில் பரப்புரை செய்தது; செய்து வருகிறது.
* பெரியார் ஈ.வெ.ரா. - நாகம்மை கல்வி, ஆராய்ச்சி அறக் கட்டளைப் பணிகளைத் தமிழக மக்களுக்குத் துலாம்பரமாக விளக்கி வருகிறது.

**இத்தகைய மாபெரும் சாதனைகளைப் புரிந்த "சிந்தனையாளன்" திங்கள் இதழ், வரும் 1-7-2017 அன்று 41ஆம் ஆண்டைத் தொடங்குகிறது.**

**மா.பெ.பொ.க. தோழர்களும், ஆதரவாளர்களும் - தமிழ்ப் பெருமக்களையும் தாய்மார்களையும் நாடி நேரில், 1.6.2017 முதல் உறுப்பினர் சேர்க்கைக்கு அணுகுவார்கள்.**

**தமிழ்ப் பெரியோர்களும் தாய்மார்களும் தாங்கள் தாங்கள் பெரிய மனம் வைத்து, அவரவர் வசதிக்கேற்ற வகையில், மன மகிழ்ச்சியுடன் "சிந்தனையாளன்" உறுப்பினராகி உதவிடுங்கள் எனப் பணிவன்புடன் அனைவரையும் வேண்டிக் கொள்கிறேன்.**

நல்லுதவியை நாடும்,

21.5.2017 **வே. ஆனைமுத்து**

# மதுக்கடைகளுக்கு எதிராகத் தொடரும் பெண்களின் வீரஞ்செறிந்த போராட்டங்கள்

- சி. பெரியசாமி

இருளும், ஒளியும், இன்பமும், துன்பமும் என்ற எதிர் எதிர் நிலைகள் தனிமனித, சமுதாய மற்றும் அரசியல் நிலைகளிலும் எப்போதும் உள்ளன. நன்மை செய்ய ஒரு சிலரும், தீமை செய்ய பலரும் உள்ளனர். இந்தத் தூயவர்களைத் தூக்கிப்பிடித்துப் பாராட்டிப் புகழ மிக மிகப் பலர் உள்ளனர்.

முன்னாள் முதல்வர்களான ஓமந்தூர் இராமசாமி ரெட்டியும், காமராசரும் ஆட்சி செய்த நாட்டில்தான் கருணாநிதியும், செயலலிதாவும் ஆட்சி செய்தனர். ஒளியும் இருளும்.

இந்த நாட்டில் ஒரே ஒரு மணிநேரம்கூட நான் சர்வாதிகாரியாக இருக்க வாய்ப்பு கிடைத்தாலும், நான் நாட்டில் உள்ள மதுக்கடைகள் அனைத்தையும் ஒரே ஒரு ரூபாய் கூட நட்டஈடு கொடுக்காமல் மூடிவிடுவேன் என்றும், மது தரும் மரம், செடி, கொடிகளையும் வெட்டி வீழ்த்திவிடுவேன் என்றும் காந்தியடிகள் கூறியுள்ளார்.

வெகுமக்கள் நன்மைக்கும் வளர்ச்சிக்கும் விரோத மாகச் செயல்பட்ட இராசாசிகூட கொட்டும் மழையிலும் முதல்வர் கருணாநிதி வீட்டிற்கே சென்று - கருணா நிதியைச் சந்தித்து-மதுக்கடைகளைத் திறக்க வேண்டா மென வேண்டினார். அதற்கு, ‘‘அரசின் திட்டச் செலவுக் குப் பணமில்லை’’ என கருணாநிதி கூறியதற்கும், பணம் வருவதற்கு விற்பனை வரிப் போட்டுப் பணம் திரட்ட முடியுமென்று வழிமுறைகளையும் இராசாசி கூறியுள்ளார். அரசுக்கு வருவாய் வந்தால் என்ன, வரா விட்டால் என்ன - கருணாநிதிக்கும் கட்சிக்காரனுக்கும் சொந்தமாகச் சாராய ஆலைகள், கடைகள், விற்பனை மூலம் வரும் கோடிக்கணக்கான ரூபாய், விற்பனை வரி மூலம் தனக்குச் சொந்தமாக வராது என்பதுகூட கருணாநிதிக்குத் தெரியாதா என்ன?

‘‘வாழும் வள்ளுவர்’’ கருணாநிதிதான் 1971இல் தமிழ்நாட்டில் சாராயக் கடையை முதலில் திறந்து விட்டவர். தன்னை ஆட்சிக் கட்டிலில் அமர்த்திய சமு தாயத்தின் அடித்தள மக்கள் சாராயத்தால் சின்னா பின்னமாகச் சீரழிவர் என்பதை நன்கு அறிந்தே கருணாநிதி சாராயக்கடைகளைத் திறந்தார். அவற்றை மேலும் வளர்த்த பெருமை எம்.ஜி.ஆர். புரட்சிக்கே உண்டு. அவற்றை எல்லையிலா அளவுக்கு நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்த்த மாபெரும் சாதனை புரட்சித் தலைவரின் புரட்சித் தலைவியையே சாரும்!



இந்த மூன்று பெரும் தீயசக்திகளும், கட்சித் தொண்டர்களை, சட்டமன்ற உறுப்பினர்களை, பாராளு மன்ற உறுப்பினர்களைத் தலையாட்டும் பொம்மை களாக நடத்தியதில் நமக்கு அதிக வருத்தமில்லை. ஆனால், இந்தத் தீய சக்திகளை முதல்வர் என்ற உயர்ந்த இடத்திற்கு அனுப்பிய மக்களையும் அடிமைகள்போல நினைத்து நடத்தி தங்களின் சுயநலம், பணம், பணம் குவித்தல் ஒன்றையே கருத்தில் கொண்டு ஆட்சி நடத்தி யதை இந்த நாடு மட்டுமல்ல, உலகமே அதிர்ந்து வியந்தது!

இந்தக் காலகட்டத்தில்தான் டாஸ்மாக் ஒழிய பாடல் பாடிய ‘‘மக்கள் அதிகாரம்’’ கோவன் தேசப் பாதுகாப்புச் சட்டத்தில் கொடுங்கோல் அரசி செயலலிதாவால் கைது செய்யப்பட்டார். இதில் என்ன வெங்காய தேசப் பாது காப்புக்குப் பாழ் இருக்கிறது என்று கோவனை நீதி மன்றம் விடுதலை செய்தது! செயலலிதாவின் திடீர் மறைவு இன்றுவரை திரைக்கதை போல முடிவிலா மர்மமாகவே உள்ளது. அவர் மறைவும் ‘‘உண்மை யான’’ புரட்சியே. அவர் மறைவும், உயர் நீதிமன்ற உச்சநீதிமன்றங்களின் தீர்ப்புகளும் மக்கள் மூச்சு விடவும், தைரியத்தை வளர்த்துக்கொள்ளவும் ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளன.

இந்த நல்ல சூழ்நிலையை மற்ற யாரும் - எந்த அமைப்பும் பயன்படுத்திக் கொள்ளவில்லை. நீருபூத்த நெருப்பாக இருந்தத் தமிழினத் தாய்மார்கள் தன்னெ முச்சியாக வீறுகொண்டெழுந்து சாதி, மத, கட்சிக் கட்டுப் பாடு பாராமல், சுய விளம்பரம் தேடாமல், காக்கிச் சட்டை களின் மிரட்டல்களுக்குப் பயப்படாமல், குண்டாந்தடி களின் அடிகளுக்கும் அஞ்சாமல் போராடிப் போராடி வெற்றி மேல் வெற்றி குவிக்கும் தமிழினப் பெண்

களுக்கு, வீராங்கனைகளுக்கு எங்கள் அன்பான செவ் வணக்கங்களையும், வாழ்த்துக்களையும் குவிக்கிறோம்.

உங்களின் இந்த வீர வெற்றிப் பயணம் ஊர், வட்டம் கடந்து மாவட்டம், மாநிலம் என்ற அளவு வரை யாவது தொடரட்டும்.

தமிழ்நாட்டிலேயே அரியலூர் மாவட்டத்தில் உள்ள செந்துறை வட்டத்தில் இருந்த மொத்த டாஸ்மாக் கடைகள் 8. மதுவின் கொடுமைகளை நன்குப் பட்டறிந்த செந்துறை வட்டப் பெண்கள் பலரும் ஒன்றுசேர்ந்து டாஸ்மாக் கடைகளை அடித்துநொறுக்கி 7 கடைகளை மூடச் செய்துள்ளனர். இறுதியாகப் பொன்பரப்பிக் குடிக் காட்டில் குடியிருப்புப் பகுதியில், போக்குவரத்துச் சாலையில் மூடப்பட்டிருந்த டாஸ்மாக் கடையைத் திறக்க வந்த அதிகாரிகளைத் தடுத்து நிறுத்தி மறியில் செய்து அந்தக் கடையையும் திறக்காமல் மூடச்செய் துள்ளனர். அரியலூர் மாவட்டம், செந்துறை வட்டத் தில் இருந்த மொத்த டாஸ்மாக் கடைகளையும் தொய்வில்லாத வீரப்போராட்டத்தின் மூலம் மூடச் செய்த மாவீர வீராங்கனைகளுக்கு மக்கள் மறு மலர்ச்சி மன்றமும், மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடை மைக் கட்சியும் நெஞ்சார்ந்த செவ்வணக்கங்களையும், வாழ்த்துக்களையும் குவிக்கின்றன.

தமிழகத்திற்கு மட்டுமல்லாது, இந்தியாவுக்கே முன்னோடியாக உள்ள இந்த மாபெரும் மக்கள் சக்திப் போராட்டத்தை அனைத்துப் பகுதிப் பெண்களும், மார்க்சிய, பெரியாரிய, அம்பேத்கரிய, காந்திய மற்றும் ஒடுக்கப்பட்டோர் விடுதலைகோரும் அனைவரும் சாதி, மத, கட்சிப் பாகுபாடு பாராமல் ஒன்றாகப் போராட அன்புடன் வேண்டுகிறோம்.

தன்னெழுச்சியான இந்தப் பெண்ணிகளின் போராட் டத்தையும் நீதிமன்றங்களின் தீர்ப்புகளையும் கருத்தில் கொண்டு உடனடியாகத் தமிழகத்தில் உள்ள அனைத்து டாஸ்மாக் கடைகளையும் மூடிடத் தமிழக அரசு ஆணை பிறப்பிக்க வேண்டுகிறேன்.

# திருக்கோவிலூர் தமிழ்ச் சங்கம் சார்பில் தமிழ் வளர்த்த சான்றோர் அய்ம்பெரும் விழா



விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் தமிழ்ச் சங்கத் தலைவர் சிங்கார. உதியன், சிறப்புத் தலைவர் மா. கோமுகி மணியன், மாவட்டத் தலைவர் துரை. இராசமாணிக் கம், மாவட்டச் செயலாளர் இரா. துரை முருகன், மா.பெ.பெ.க. மாவட்டச் செய லாளர் ஆ.கு. ஆறுமுகம், தமிழ்ச் சங்கத் துணைத் தலைவர் பா. கார்த்திகேயன், ம.ரா. குமாரசாமி, பேரன் தணிகை. கலை மணி, அரகண்டநல்லூர் ஆ. குணசேகரன் ஆகியோரின் முயற்சியில் திருக்கோவி லூரில் காரி-பாரி உடையார் திருமண மண்டபத்தில் 2.5.2017 செவ்வாய் மாலை 5 மணிக்கு தமிழ் வளர்த்தச் சான்றோர்கள் அய்ம்பெரும் விழா சிறப்புற நடைபெற்றது. கவிமாமணி சிங்கார. உதியன் தலைமையேற்றார். பலர் முன்னிலை ஏற்றனர்.

அய்ம்பெரும் தமிழ் வளர்த்தச் சான்றோர்கள் தவத்திரு. ஞானியார் அடிகள், தந்தை பெரியார், மனம்பூண்டி ம.ரா. குமாரசாமி, தமிழ்த் தென்றல் திரு.வி.க., பாவேந்தர் பாரதிதாசன் ஆகியோரின் படங்களை மா.பெ.பொ.க. பொதுச் செயலாளர் வே. ஆனைமுத்து திறந்து வைத்து உரையாற்றினார்.

தவத்திரு. ஞானியாரடிகளைப் பற்றி திருவண்ணாமலை ஆர்.பி. அண்ணாதுரை, தந்தை பெரியாரைப் பற்றி கள்ளக்குறிச்சி புலவர் பெ. செயராமன், மனம்பூண்டி ம.ரா. குமாரசாமியைப் பற்றி திருக்கோவிலூர் பேச்சருவி ஜெ. விமலா, தமிழ்த்தென்றல் திரு.வி.க. பற்றி சங்கராபுரம் ஆ. இலெட்சுமிபதி, பாவேந்தர் பாரதிதாசனார் பற்றி விழுப்புரம் புலவர் சுந்தர அருணகிரி, மா.பெ.பொ.க. துணைப் பொதுச் செயலாளர் சி. பெரியசாமி ஆகியோர் சிறப்புரையாற்றினர். சிறப்பு அழைப்பாளர்களாக தியாகதுருகம் கவிஞர் சீத்தா, மு. கலியபெருமாள், ஆர்.வி. நல்லதம்பி ஆகியோரும் மற்றும் பலரும் பங்கேற்றனர். மண்டபம் நிறையும் அளவிற்கு மக்கள் ஆர்வமாகக் கூடியிருந்தனர். இறுதியில் சென்னக்குனம் ஆ.கு. ஆறுமுகம் நன்றி நவின்றார்.

# மக்கள் நலனுக்குக் கேடுதரும் பி.டி. கடுகை நுழையவிடாமல் விரட்டியடிப்போம்

- க. முகிலன்




மரபணு மாற்றப்பட்ட பயிர்களுக்கான ஒப்புதல் அளிக்கும் குழு (Genetic Engineering Appraisal Committee - GEAC) 11.5.2017 அன்று மரபணு மாற்றப்பட்ட கடுகிற்கு ஒப்புதல் அளித்திருப்பதாக அறிவித்துள்ளது. நடுவண் அரசின் சுற்றுச்சூழல் அமைச்சகத்தின்கீழ் இக்குழு இயங்குகிறது. அமைச்சகத்தின் ஒப்புதல் கிடைத்துவிட்டதாகவும், சுற்றுச்சூழல் அமைச்சரின் ஒப்புதல் கிடைத்ததும் மரபணு மாற்றப்பட்ட கடுகு உழவர்கள் பயிரிடுவதற்காக விற்பனையில் கிடைக்கும் என்றும் இக்குழு தெரிவித்துள்ளது. அந்நிலையில் இந்தியாவில் மரபணு மாற்றப்பட்ட முதலாவது உணவுப் பயிராக கடுகு இருக்கும்.

மரபணு மாற்றப்பட்ட பயிர்களுக்கான ஒப்புதல் வழங்கும் குழுவின் தலைவர் அமிதா பிரசாத், "மரபணு மாற்றப்பட்ட கடுகு பயிரை வயல்களில் பயிரிடுவதற்காக அனுமதிக்குமுன், மனித உயிருக்குப் பாதுகாப்பானதுதான் என்பதை உறுதிசெய்துள்ளோம். இந்தியா போன்ற நாட்டின் உணவுத் தேவைகளை ஈடுசெய்ய மரபணு மாற்றப்பட்ட பயிர்கள் இன்றியமையாதவைகளாக இருக்கின்றன. இந்தக் கடுகு 30 விழுக்காடு கூடுதல் விளைச்சல் தரவல்லது" என்று கூறியிருக்கிறார்.

கடுகு இந்திய உணவில் தவறாமல் இடம்பெறும் பொருளாகும். வடஇந்தியாவில் சமையல் எண்ணெய்யாகப் பயன்படுத்தப்படுகிறது. இந்தியா தற்போது தன் சமையல் எண்ணெயின் தேவையில் 50 விழுக்காட்டை ஆண்டுதோறும் இறக்குமதி செய்கிறது. இறக்குமதி செய்யப்படும் எண்ணெய்யில் 90 விழுக்காடு பாமாயில் எனப்படும் செம்பனை எண்ணெய் ஆகும். எனவே மரபணு மாற்றப்பட்ட கடுகைப் பயிரிடுவதின் மூலம் அதிக விளைச்சல் பெறுவதுடன் வெளிநாடுகளிலிருந்து சமையல் எண்ணெய் இறக்குமதி செய்யப்படுவதைக் குறைக்கலாம்; அந்நியச் செலாவணியும் குறையும் என்று மரபணு மாற்றப்பட்ட கடுகின் ஆதரவாளர்கள் கூறுகின்றனர். கடுகின் விளைச்சலை உயர்த்திட இதுதவிர வேறு வழி இல்லையா?

உலக அளவில் ஒரு எக்டரில் கடுகு பயிரில் அதிக விளைச்சல் பெறும் முதல் 5 நாடுகளான செருமனி, பிரிட்டன், பிரான்சு, செக்குடியரசு, போலந்து ஆகிய நாடுகளில் மரபணு மாற்றப்பட்ட கடுகு பயிரிடப்படுவதில்லை.

**I மரபணு மாற்றப்பட்ட கடுகு பயிரிடப்படாத நாடுகளில் கடுகு உற்பத்தி - கிலோ/எக்டர்**

1. செருமனி ......................... 3786
2. பிரிட்டன் .......................... 3477
3. பிரான்சு ........................... 3370
4. செக் குடியரசு .................... 3157
5. போலந்து ......................... 2708
6. உக்ரைன் ........................ 2106
7. ருமேனியா ...................... 2067
8. சீனா ............................... 1871
9. **இந்தியா ....................... 1196**

**II மரபணு மாற்றப்பட்ட கடுகு பயிரிடப்படும் நாடுகளில் கடுகு உற்பத்தி - கிலோ/எக்டர்**

1. கனடா ............................ 1953
2. அமெரிக்கா (U.S.A.) ........... 1780
3. ஆஸ்திரேலியா.................. 1277

(புள்ளிவிவர ஆதாரம் : உலக உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு - FAO)

மேலே உள்ள புள்ளிவிவரம் மரபணு மாற்றப்பட்ட கடுகைப் பயிரிடாத நாடுகளில்தான் உற்பத்தித்திறன் கிட்டத்தட்ட இரண்டு மடங்கு அதிகமாக இருக்கிறது என்கிற உண்மையை உணர்த்துகிறது. மேலும் இப்பிரிவில் இந்தியாவின் உற்பத்தி எக்டருக்கு 1196 கிலோவாக இருப்பதை செருமனி, பிரிட்டன், பிரான்சு முதலான நாடுகளில் பின்பற்றப்படும் வேளாண் முறைகளைக் கடைப்பிடித்து உற்பத்தியைப் பெருக்காமல், மரபணு மாற்றப்பட்ட கடுகுதான் உற்பத்தியை உயர்த்துவதற்கான ஒரே வழியாக இந்தியா தேர்ந்தெடுத்தது ஏன்? மரபணு மாற்றறப்பட்ட கடுகைப் பயிரிடும் நாடுகளின் விளைச்சல் குறைவாக உள்ளபோதிலும், இந்த வழிமுறையைத் தேர்வு செய்வதற்கான காரணம் அமெரிக்காவின் பன்னாட்டு நிறுவனங்கள் தரும் அழுத்தமே ஆகும்.

2002ஆம் ஆண்டில் பன்னாட்டு நிறுவனமான பேயர் (Bayer) உருவாக்கிய மரபணு மாற்றப்பட்ட கடுகை நடுவண் அரசின் ஒப்புதல் வழங்கும் குழு (GEAC) தள்ளுபடி செய்தது. 2010ஆம் ஆண்டில் மன்மோகன் சிங் ஆட்சிக் காலத்தில் பன்னாட்டு நிறுவனமான மான்சாண்டோ உருவாக்கிய மரபணு மாற்றப்படட கத்தரிக்கு இக்குழு ஒப்புதல் வழங்கியது. இந்தியாவில் நிலவும் பல்வேறுபட்ட தட்பவெப்பச் சூழல், மண்வளம் ஆகியவற்றுக்கு ஏற்ப 2200 வகையான கத்தரிக்காய்கள் பயிரிடப்படுகின்றன. மரபணு மாற்றப்பட்ட (பி.டி.) பருத்தி வந்தபின், நாட்டு வகைப் பருத்திகள் அழிந்ததுபோல், பி.டி கத்தரியால் நாட்டு இரக கத்தரிகளும் அழிந்துவிடுமோ என்ற அச்சத்தால் உழவர்கள் பி.டி. கத்தரிக்குக் கடும் எதிர்ப் பைத் தெரிவித்தனர். சமூக ஆர்வலர்களும் கடுமை யாக எதிர்த்தனர். அப்போது சுற்றுச்சூழல் துறை அமைச்சராக இருந்த ஜெயராம் ரமேஷ் இந்தியாவின் பல பகுதிகளில் உழவர்கள் கருத்தறியும் கூட்டங்கள் நடத்தினார். இறுதியில் பி.டி. கத்தரி கைவிடப்பட்டது. இப்போது பி.டி. கடுகு வந்துள்ளது.

பி.டி. பருத்தி, பி.டி. கத்தரி, பி.டி. கடுகு என்ப வற்றில் உள்ள "பி.டி." (Bt) என்பது என்ன? மண்ணில் பேசிலஸ் துரிஞ்சியன்சிஸ் (Bacillus thuringiensis) எனும் பாக்டீரியா வாழ்கிறது. அவற்றில் உள்ள ஜீனைப் (gene) பிரித்தெடுத்து பருத்திச் செடியுடன் ஆய்வுக்கூடத் தில் இணைக்கின்றனர். இதுவே மரபணுப் பொறியி யல் (Genetic Engineering) எனப்படுகிறது. இந்த பாக்டீரியாவின் ஆங்கிலப் பெயரின் சொற்களில் உள்ள முதல் எழுத்துகளான 'B', 't' ஆகியவற்றை எடுத் தாண்டு பி.டி. (Bt) என்ற முன்னொட்டு சேர்க்கப்பட்டது.

பேசிலஸ் துரிஞ்சியன்சிஸ் பாக்டீரியாவிலிருந்து எடுக்கப்பட்ட புரதப் பொருளான ஜீன் சேர்க்கப்பட்ட பருத்திப் பயிரில் உண்டாகும் காய்களைப் புழுக்கள் சேதப்படுத்துவதில்லை என்று கூறப்பட்டது. அதாவது பி.டி. ஜீன் இருப்பதால் அதன் வேதிப்பொருள் காரண மாக காய்ப்புழுக்கள் அதை உண்ணாமல் விலகிச் செல்கின்றன. சாதாரண இரக பருத்திப் பயிரில் பருத் திக் காய்களுக்குள் புழுக்கள் நுழைந்து தின்பதால் பருத்தி உற்பத்தி குறைவதுடன், அதன் தரமும் குறைகிறது. எனவே பி.டி. பருத்தியைப் பயிரிட்டால் பூச்சி மருந்து தெளிக்க வேண்டியதில்லை; பருத்திக் காய்களைப் புழுக்கள் தாக்குவதில்லை; அதனால் தரமான பருத்தியும், அதிக விளைச்சலும் கிடைக்கிறது; ஆகவே உழவர்கள் அதிக இலாபம் பெறுவார்கள் என்று பரப்புரை செய்யப்பட்டு, மான் சாண்டோ நிறு வனத்தின் பி.டி. பருத்தியை உழவர்கள் பயிரிட நடுவண் அரசு அனுமதித்தது.

பி.டி. பருத்தி அறிமுகமான சில ஆண்டுகளில் அதிக விளைச்சல் கிடைத்தது. காய்ப்புழுவின் தாக்குத லும் குறைவாக இருந்தது. அதனால் பருத்தி பயிரிடப் பட்ட மொத்த பரப்பில் பி.டி. பருத்தி 95 விழுக்காடு இடத்தைக் கைப்பற்றிக் கொண்டது. ஆனால் உழவர் களின் விதை உரிமை முற்றிலுமாகப் பறிக்கப்பட்டது. ஒவ்வொரு முறையும் மான்சாண்டோ நிறுவனத்திட மிருந்து அதிக விலையில் பி.டி. பருத்தி விதைகளை உழவர்கள் வாங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். ஆனால் அடுத்தடுத்த ஆண்டுகளில் பி.டி. பருத்தியிலும் காய்ப்புழுவின் தாக்குதல் ஏற்பட்டது. உழவர்கள் பல தடவைகள் பூச்சி மருந்து தெளிக்கும் நிலைக்குத் தள்ளப் பட்டனர். விளைச்சல் குறைந்தது. பி.டி. பருத்தியின் இலைகளைத் தின்ற கால்நடைகள் மாண்டன.

இதுகுறித்து 1990களில் நடுவண் அரசின் ஜவுளித் துறையின் செயலாளராக இருந்த டி.எஸ்.ஆர். சுப்பிரமணியன் 25.5.2017 அன்று "தி இந்து" - ஆங்கில நாளேட்டில் எழுதியுள்ள கட்டுரையில், "பூச்சி மருந்து தெளிப்பது தவிர்க்கப்படுவதால், செலவு குறை வதுடன் உற்பத்தி அதிகமாகும் என்கிற கூற்றை நானும் நம்பி பி.டி. பருத்திக்கு அனுமதி அளிக்கப்பட்டது. ஆனால் எதிர்பார்த்த பயன்கள் பொய்யாகிவிட்டன என்பதை இப்போது உணருகிறேன். கூடுதலாக நீர்ப்பாசனம், உரங்கள் அளித்தபோதிலும் எதிர்பார்த்தவாறு அதிக விளைச்சல் கிடைக்கவில்லை. இந்தியாவைவிட ஒரு ஏக்கரில் அதிக பருத்தி மகசூல் எடுக்கும் பெரும்பாலான நாடுகள் பி.டி. பருத்தியைப் பயன்படுத்துவதில்லை. பி.டி. பருத்தி குறித்து பல உண்மைகள் நமக்கு மறைக் கப்பட்டன. எதிர்காலத்தில் இதனால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்த உண்மை விவரங்களை அறிய நேர்ந்திருந்தால், பி.டி. பருத்தி இந்தியாவுக்குள் நுழைந் திருக்காது" என்று எழுதியுள்ளார்.

பி.டி. பருத்திக்கே இந்த நிலையெனில், நாம் அன்றாட உணவில் பயன்படுத்தும் கடுகு, பி.டி. கடுகாக மாறுவது குறித்து இன்னும் பல மடங்கு விழிப்புடன் இருக்க வேண்டும்.

பி.டி. பருத்தி, பி.டி. கத்தரி ஆகியவை காய்ப்புழுவின் தாக்குதலைத் தவிர்க்கும் ஆற்றல் பெற்றவை என்று கூறப்பட்டது. ஆனால் பி.டி. கடுகிலோ, கொடிய நச்சுத் தன்மையைக் கொண்ட களைக்கொல்லி மருந்துகளை வயலில் தெளிக்க வேண்டியது கட்டாயமாகும். களைக் கொல்லி மருந்துகளின் (Herbicides) கொடிய நஞ்சு மனிதர்களையும், சுற்றுச்சூழலையும் கடுமையாகப் பாதிக்கும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

களைகளை வளரவிடாமல் செய்வதன் மூலம் அதிக விளைச்சல் பெறுவதே பி.டி. கடுகின் குறிக்கோள். களைக்கொல்லி மருந்துகளைத் தெளித்தாலும் அதன் நச்சுத்தன்மையைத் தாங்கும் (herbicide tolerant) வல்லமை உடைய பி.டி. ஜீன்களைக் கொண்டவை பி.டி. கடுகு என்று கூறப்படுகிறது.

கிளைபாஸ்பேட் (Glyphosphate) எனும் வேதிப் பொருளை அடிப்படையாகக் கொண்டே களைக்கொல்லி மருந்து தயாரிக்கப்படுகிறது. இந்த கிளைபாஸ்பேட் வேதிப்பொருள் சிறுநீரக பாதிப்பு, நீரிழிவு நோய், மறதி நோய், புற்றுநோய் ஆகியவற்றை அதிகரிக்கும் என்று அமெரிக்காவில் பி.டி. பயிர்கள் குறித்து கடந்த இருபது ஆண்டுகளில் மேற்கொண்ட ஆய்வில் தெரிவிக்கப்பட் டுள்ளது. உலக சுகாதார நிறுவனம் (WHO) "கிளை பாஸ்பேட்" மனிதர்களிடம் புற்றுநோயை உண்டாக்கும் என்று அறிவித்துள்ளது. அதனால்தான் கிளைபாஸ்பேட் வேதிப்பொருளை அடிப்படையாகக் கொண்ட களைக் கொல்லி மருந்துகளைக் கட்டாயம் பயன்படுத்த வேண்டும் என்ற நிலையில் உள்ள பி.டி. கடுகை இந்தியாவில் அனுமதிக்கக் கூடாது என்று மருத்துவ வல்லுநர்களும், சமூக செயற்பாட்டாளர்களும், உழவர் களும் எதிர்க்கின்றனர்.

அமெரிக்காவில் 20 வகையான களைகள் கிளைபாஸ் பேட்டை அடிப்படையாகக் கொண்ட களைக்கொல்லி மருந்துகளால் கட்டுப்படுத்தப்படுகின்றன. தொடர்ந்து இக்களைகளைக் கட்டுப்படுத்த 16 ஆண்டுகளில் இம் மருந்தை பத்து மடங்கு அதிகமாகத் தெளிக்க வேண்டும். அதனால் அமெரிக்காவின் பன்னாட்டு நிறுவனங்கள், களைக்கொல்லி மருந்துகளை உலகம் முழுவதும் விற்று, கொள்ளை இலாபம் ஈட்ட, களைக்கொல்லி சார்ந்த பி.டி. விதைகளைப் பயிரிடுமாறு பலவழிகளைக் கை யாண்டு வருகின்றன.

அண்மையில் உலகின் பெரும் பன்னாட்டு நிறு வனங்களான மான்சாண்டேவும் பேயரும் (Bayer), டோவ் (Dow)ம், டுபாண்ட்டும் (Dupont), சைஜென் டாவும் சைனிஸ்செம்பும் இணைந்தன. இந்நிறுவனங் களிடம் உலகின் பூச்சிமருந்து விற்பனையில் 65 விழுக்காடும், விதை விற்பனையில் 61 விழுக்காடும் உள்ளன. இவைதான் உலகின் விதை - பூச்சிமருந்து சந்தையை ஆட்டிப்படைக்கின்றன. அமெரிக்காவின் புகழ்பெற்ற அயலுறவுத் துறை அமைச்சராக இருந்த ஹென்றி கிஸ்ஸிங்கர், "கச்சா எண்ணெயை நமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிட்டால், தேசங்களை நமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து விடலாம்; உணவுப் பொருள்களை நமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்டால், உலகில் வாழும் மக்களை நமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிடலாம்" என்று ஒருமுறை கூறியதைப் பன்னாட்டு நிறுவனங்களின் விதை-பூச்சி மருந்து ஆதிக்கத்துடன் இணைத்து எண்ணிப் பாருங்கள்.

பா.ச.க. 2014 நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கையில், "மரபணு மாற்றப்பட்ட பயிர்கள், அறிவியல் ஆராய்ச்சி அடிப்படையில், நீண்டகாலப் போக்கில் மண், உற்பத்தி, நுகர்வோரின் உடல்நலன் ஆகியவற்றில் எத்தகைய கேடான விளைவையும் ஏற்படுத்தாது என்பதை உறுதி செய்த பிறகே அனுமதிக்கப்படும்" என்று கூறியிருந்தது.

பன்னாட்டு நிறுவனத்தின் பி.டி. பயிராக இருப்பின் எதிர்ப்பு ஏற்படும் என்பதால் 'சுதேசி' பி.டி. கடுகைக் கொண்டுவர உள்ளது. DMH-11 எனப்படும் பி.டி. கடுகு தில்லிப் பல்கலைக்கழகத்தில் முன்னாள் துணைவேந்தர் தீபக் பென்தால் தலைமையில் நடுவண் அரசின் நிதி ஒதுக்கீட்டுத் திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டுள்ளது. 'தேசியம்', 'தேசபக்தி' என்கிற பெயர்களால் எதிர்ப்பு களை பா.ச.க.வின் மோடி அரசு ஒடுக்கி வருவதுபோல் 'சுதேசி' பி.டி. கடுகு என்ற பெயரால் எதிர்ப்புகளை அடக்கிவிடலாம் என்று நினைக்கக்கூடும். சுதேசி பி.டி. கடுகானாலும் பன்னாட்டு நிறுவனத்தின் பி.டி. கடு கானாலும் அதனால் ஏற்படக்கூடிய கேடுகளில் மாற்றம் இல்லை. சுதேசி பி.டி. கடுகான - DMH-11 என்பதற் கும் கிளைபாஸ்பேட்டை அடிப்படையாகக் கொண்ட களைக்கொல்லி மருந்தைக் கட்டாயம் தெளிக்க வேண் டும். எப்போதும் களைக்கொல்லி மருந்து பன்னாட்டு நிறுவனங்களின் கட்டுப்பாட்டில்தான் இருக்கும். மேலும் சுதேசி பி.டி. கடுகு பயிரிட அனுமதிக்கப்படும் போது, "அரசு-தனியார் கூட்டு" என்ற பெயரில் இந்த விதை தயாரிப்பு உரிமை தனியார் நிறுவனத்திடம் தரப்படும்.

சமையல் எண்ணெய்யின் இறக்குமதியைக் குறைக்க, கடுகின் விளைச்சலைப் பெருக்க என்பன போன்ற போலியான முழக்கங்கள் மூலம் பி.டி. கடுகைப் பயிரிட அனுமதிப்பது எவ்வளவு அடாவடித்தனமானது என் பதை மேலே தரப்பட்டுள்ள விவரங்கள் மூலம் தெளிவு படுத்தி உள்ளோம்.

பி.டி. கடுகு கொடிய நச்சுப் பொருள்களைக் கொண்டது. நுகர்வோரான 125 கோடி மக்களின் உடல்நலனுக்குப் பலவகையிலும் ஊறுவிளைவிப்பது ஆகும். உழவர் களின் விதை உரிமையைப் பறிக்கிறது. ஒவ்வொரு முறையும் அதிக விலையில் கடுகு விதையையும், களைக்கொல்லி மருந்தையும் தனியாரிடம் உழவர்கள் வாங்க வேண்டும். எனவே இது தனியார் மயக் கொள்ளைக்கு துணைபோவதாகும். நச்சுத்தன்மை மிக்க களைக்கொல்லி, சூழலை மாசுபடுத்தும். பல உயிர்களுக்கும் நஞ்சாக அமையும்.

உலகில் உள்ள 190 நாடுகளில் 17 நாடுகளில் மட்டும் உலகில் உள்ள தாவர, விலங்கு உயிரினங் களில் 70 விழுக்காடு உள்ளன. இந்த 17 நாடுகளில் இந்தியா முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளது. இந்தியாவில் இரண்டு இலட்சம் நெல் இரகங்கள் இருந்தன. பசுமைப் புரட்சி என்ற பெயரால் இவற்றில் பெரும்பகுதி அழிந்துவிட்டன. உயிர்ப்பன்மயத்துக்கும், விதைப்பன்மயத்துக்கும் முதல் எதிரியாக உள்ள பி.டி. கடுகு போன்றவற்றை முளையிலேயே கிள்ளி எறிதல் போல், நுழையவிடாமல் தடுத்திட வேண்டியதும் அதற்கான போராட்டங்களை முன்னெடுப்பதும் நமது கடமையாகும்.

**கட்டுரைத் தொடர்-50**

# திராவிடர் இயக்கங்கள்; தமிழ்த் தேசியத்திற்குத் தடைக்கல்லா? படிக்கல்லா?

- வாலாசா வல்லவன்

LDITபெரும் இந்தி எதிர்ப்புப் போரில் வீர மரண மடைந்த மற்றொருவர் தாலமுத்து ஆவார். கும்ப கோணத்தைச் சேர்ந்த அவர் சிறைச் சாலையிலேயே 12.3.1939இல் வீர மரணம் அடைந்தார். அவருடைய இறுதி ஊர்வலத்தை விடுதலை ஏடு படம்பிடித்துக் காட்டியுள்ளது.

இந்தி எதிர்ப்பில் ஈடுபட்டு, சிறையில் இருந்த குடந்தை தோழர் தாலமுத்து நாடாரின், பிரேத ஊர்வலம் 13-3-1939 மாலை 5 மணிக்கு ஜெனரல் ஆஸ்பத் திரியிலிருந்து புறப்பட்டது. அலங்கரித்த பாடையில் தோழர் நாடார் கிடத்தப்பட்டிருந்தார். ஏராளமான மலர் மாலைகள் போடப்பட்டன. தொடக்கத்தில் சர்வாதிகாரி எஸ். சம்பந்தமும் மற்றும் மூவரும் பாடையைத் தூக்கி வந்தனர். தோழர் நாடாரின் வயதான பெற்றோர் களும், இளம் மனைவியும் சவத்தின்மீது விழுந்து புரண்டு அரற்றிய காட்சி கல்மனதையும் கரைத்து விட்டது. வந்திருந்த பல்லாயிரக்கணக்கான தாய்மார் களும், தோழர்களும் கண்ணீர்விட்டனர். 10000 பேர்கட்கு மேற்பட்ட மக்கள் கொண்ட மாபெரும் கறுப்புக் கொடிகளுடன் கூடிய பிரேத ஊர்வலம் தங்கசாலை வழியாக மெதுவாகப் புறப்பட்டு வந்தது. கறுப்புச் சட்டையணிந்த சிலர் முன்னே பாண்டு வாத்தியம் முழங்கிச் சென்றனர்.

ஊர்வலத்தின் இரண்டு பக்கங்களிலும் பல நூற்றுக் கணக்கான போலீஸ்களும், சார்ஜண்டுகளும், இன்ஸ் பெக்டர்களும், பந்தோபஸ்து செய்து வந்தனர். டிப்டி கமிஷனரும் வந்திருந்தார்.

**ஊர்வலம்**

ஊர்வலம் தங்கசாலை இந்து தியாலாஜிக்கல் பள்ளியின் முன் வந்ததும் மக்கள் அனைவரும் பள்ளியின் முன் நின்று, ‘இந்தி ஒழிக’, ‘காங்கிரஸ் ஆட்சி ஒழிக’, ‘தமிழ் வாழ்க’ என அரை மணிநேரம் கூச்சல் போட்டனர். தலைவர்கள் எவ்வளவு சொல்லி யும் மக்கள் கேட்கவில்லை. போலீசார் வேண்டுதலும் பயன்படவில்லை. இறுதியில் தலைவர் மிகவும் கேட்டுக்கொண்டு ஊர்வலத்தை அழைத்து வந்தனர்.

வழிநெடுகத் தோழர் நாடாரின் சவத்தின்மீது ஏராளமான மாலைகள் போடப்பட்டன. ஊர்வலம் தங்கசாலை சுமைதாங்கி வந்ததும், இருட்டிவிட்ட மையால் பின்னர் ஏராளமான காந்த விளக்குகளுடன் ஊர்வலம் சென்றது. வழிநெடுக ஒவ்வொரு வீட்டின் மெத்தையிலிருந்தும் ஆண்களும் பெண்களும் வருந்திக் கண்ணீர் சொரிந்தனர்.



இரவு 7.30 மணிக்குப் பிரேத ஊர்வலம் மூலக்கொத்தளம் சுடு காட்டிற்கு வந்து சேர்ந்தது. இந்திக்கு முதற்பலியான தோழர் இல. நடராஜன் சமாதியின் அருகி லேயே தோழர் நாடாருக்கும் குழிவெட்டப்பட்டிருந்தது. தோழர் தாலமுத்து நாடாரைப் புதைப் பதற்கு முன்பு அவர் உடலின் எதிரிலேயே ஒரு இரங்கற் கூட்டம் நடைபெற்றது. பெரியார் பெல்லாரி சிறையில் இருந்ததால் இந்த ஊர்வலத்தில் கலந்து கொள்ள இயல வில்லை.

**இரங்கற் கூட்டம்**

கூட்டத்திற்குத் தோழர் சி. பாசுதேவ், பி.ஏ., பி.எல்., எம்.சி. அவர்களைத் தலைமை வகிக்குமாறு தோழர் என்.வி. நடராஜன் கேட்டுக் கொண்டார். அக்காலை அவர் பேசியதாவது :

“இன்று இராயபுரத்தில் நடத்த வேண்டிய கூட்டத்தை இந்த ஈமக்காட்டில் நடத்துகிறோம். ஆச்சாரியார் ஆட்சி யில் தமிழர்கள் உயிருடன் வாழ்வது சந்தேகமாக இருக்கின்றது. அன்று ஒரு நடராஜனைச் சவக்குழியில் கிடத்தினோம். இன்று தோழர் தால முத்துவிற்குக் குழிவெட்டியுள்ளோம். இன்று தமிழர்கட்காக வெட்டப் படும் இதே குழிகள், வருங்காலத் தமிழர் ஆட்சியில் பார்ப்பனியத்திற்கும் வெட்டப்படும் என எச்சரிக்கின் றோம். இக்குழி காங்கிரசிற்கு வெட்டப்படும் குழியாகும். இன்றைய ஆட்சியின் கொடுமையால் தமிழர்கள் மாள வேண்டுமானால், வருங்கால ஆட்சியில் இதேபோலப் பார்ப்பனர்களும் மாளவேண்டியதே நியாயம். நமக்கு மனக்கொதிப்பு இருக்கின்றது. அதற்காக நாம் பலாத் காரத்திலிறங்க வேண்டாம். தமிழுக்காக ஒருவரல்ல, இருவர் உயிரை விட்டனர். இன்னும் இதற்காக ஆயிரக் கணக்கான தமிழர்கள் தங்கள் உயிர்களைவிடத் தயாராயிருக்கின்றனர்.”

தோழர் பாசுதேவ் தலைமை வகித்து ஆங்கிலத் தில் பேசியதைத் தோழர் த.பா. நித்தியானந்தம் மொழி பெயர்த்துக் கூறினார். அது வருமாறு :

“அகிம்சா ஆட்சியின்கீழ் இங்கு துக்கமான நிலையில் கூடியுள்ளோம். தோழர் தாலமுத்து நாடார் தமிழ் நாட்டிற்கு 2ஆவது பலியாக்கப்பட்டார். முன்பு இறந்த நடராஜனும், இவரும் மிகவும் வருந்தத்தக்க நிலை யிலேயே இறந்தனர். இவர் இறந்த சர்ட்டிபிகேட்டை

டாக்டர்களிடமிருந்து பெறவே, கடைசி நிலையில் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப் பட்டிருக்கிறார் போலும். இவர் இறந்த செய்தி வெகுநேரம் கழித்தே குடந்தை யிலுள்ள பெற்றோர்கட்குத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. இன்று வெகுநேரம் நம்மில் யாருக்கும் இச்செய்தி தெரியவில்லை. தோழர் நாடார் சிறையில் மிகவும் கொடுமைப்படுத்தப்பட்டிருக்கிறார். அவர் இரண்டு கைகளிலும் சந்தேகத் திற்கிடமாக 2 கட்டுகள் கட்டப்பட்டிருக் கின்றன. இச்சந்தேகத்தை நீக்க சர்க்கார் என்ன செய்யப் போகிறார்கள்? மாலை யில் நடந்த பெரிய ஊர்வலம் நமது கட்சியின் வளர்ச்சியையே எடுத்துக் காட்டுகின்றது.



இந்த நிலையில் திரிபுரச் செய்திகள் உங்கட்குத் தெரியும். தோழர் காந்தி அகிம்சையைப் பூஜித்துக் கொண்டே தோழர் சுபாஷைக் கொலை செய்கிறார்! ‘ஈரத்துணியைப் போட்டுக் கழுத்தையறுப்பதெ’ன்பது இதுதான் போலும். நாளை காலை சுபாஷ் காலமானார் என்னும் செய்தி வந்தால் அதைக்கேட்டு படேல் கும்பல் வெற்றிக் கொண்டாட்டம் நடத்தும். அக்கும்பல்களில் ஒருவரான தோழர் ஆச்சாரியார் ஆட்சியில் இத்தகைய மரணத்தைத் தவிர வேறு எதை எதிர்பார்க்கலாம்?

**மூவர்ணக் கொடியின் தத்துவம் எங்கே?**

காங்கிரஸ் ஆட்சியில் இத்தகைய மரணங்கள் நிகழும் கொடுமையினால், மூவர்ணக் கொடி அகிம்சையை அடிப்படையாகக் கொண்டதல்ல என்று விளங்கிவிட்டது. அக்கொடியை இங்குள்ள பதினாயிரக்கணக்கான மக்களும் வெறுக்கின்றனர். இங்குள்ள போலீஸ் அதி காரிகள் கொடியின்மீது நமக்குள்ள வெறுப்பை உணர்ந்து கொள்வார்கள். உணர்ந்தால் நாளை செவ்வாயன்று கார்ப்பொரேஷனில் அக்கொடியைப் பறக்கவிடக் கூடாதென 144 போடட்டும்.

**நாம் ஒற்றுமையாக ஊக்க உணர்ச்சியுடன் வேலை செய்ய வேண்டும். பெரியார் நம்மிடையே இருப்பார். இறந்த இருவருக்கும், ஞாபகச் சின்னம் வைக்கப்படும். நாடாரின் பெற்றோருக்கும், மனைவிக்கும் நமது அனுதாபம். குடந்தை யிலுள்ள அவர்களின் உறவினர்களைவிட தோழர் தாலமுத்து நாடாரின் மீது மிகவும் அன்பு கொண்ட 10000-க்கணக்கானவர் முன்பு இன்று தோழர் நாடார் வைக்கப்படுகின்றார்.’’**

தோழர் கே.சி.சுப்பிரமணியம் செட்டியார் (பாரிஸ்டர்) பேசுகையில், பெற்றோர்கட்கு அனுதாபம் தெரிவித்து தஞ்சை ஜில்லாவாசியான தோழர் நாடார் தனது உயிரைக் கொடுத்ததை நினைக்க உண்மையிலேயே தஞ்சை ஜில்லா வாசியானதான் பெரிதும் பெருமிதம் அடைவதாகக் கூறினார்.

தோழர் சாமி அருணகிரிநாதர் பேசு கையில், பார்ப்பனிய ஆட்சி ஒழியும் வரை தமிழர்கள் முன்னேற முடியாதெனத் தெரிவித்தார்.

**மனம் கலங்குகிறது**

தோழர் சி.என். அண்ணாதுரை பேசியதாவது: ‘‘முன்பு தோழர் நடராஜன் அடக்கமான காலத்து, மீண்டும் இத் தகைய சம்பவம் தமிழர்கட்கு ஏற்படா தென நினைத்தேன். ஆனால், நாடார் திலகம் தோழர் தாலமுத்து இறந்ததைக் காண மனம் கலங்குகிறது. வழியில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் வருத்தம் தெரிவித்தனர். வடக்கே நருமதை ஆற்றங்கரையில் (திரிபுரியில்) தோழர் ஆச்சாரியார் ஆனந்த வெறியிலிருக்கும்போது இங்கு நாம் துக்கசா கரத்தில் இருக்கின்றோம். நமது உயிர் நம்மிடமில்லை. தமிழர் ஆட்சி இல்லாவிட்டால் என்ன தீமை வந்து விடும் என்கிற காங்கிரஸ் தமிழர்கள், இதைக் கவனிக்க வும். என்னைப் பொறுத்தவரை தோழர்கள் நடராஜன், தாலமுத்து மரணத்தை எனது அண்ணன், தம்பி இறந்தனர் எனவே கருதுகிறேன். முன்பு நான் சாக் கோட்டை மாநாட்டில் பேசும்போது நாடார் சகோதரர் களை தமிழர் அறப்போருக்கு வருமாறு வருந்தியழைத் தேன். அக்காலத்திலும் நீங்கள் அனுப்ப வேண்டும். ஆனால் அவர்களைத் திருப்பிக் கொடுப்பதாக உறுதி கூற முடியாதெனத் தெரிவித்தேன். அதேபோல அங்கிருந்து தோழர்கள் வந்தனர். தாலமுத்து இறந்தார். முன்பு இறந்த நடராஜன் மணமாகாதவர். ஆனால் தாலமுத்து மணமானவர். குடும்பத்தை ஒழுங்காக நடத்த இருந்த சமயத்தில் தாலமுத்து இறந்துவிட்டார். இன்று தாய், தந்தை, மனைவிக்குப் பிரேதமாகக் காட்சியளிக்கிறார். இச்சமயத்து ஆச்சாரியார் மார்தட்டி, கண்ணாடியைத் துடைத்துப் பேசுவார். ஏன்? தமிழன் ஆச்சாரியார் காலின் கீழிருக்கின்றான். அவர் நினைத்தால் பல தாலமுத்துக்கள் மயானம் வரமுடியும். ஏன்? ஆச்சாரி யார் நினைத்தால் நீங்களும் நானும் இங்கு (மயானம்) வரவேண்டியதுதான். மிகவும் வெட்கரமான நிலையில் தமிழர்கள் இருக்கிறோம். எதைச் செய்து, எதைச் சொல்லித் தமிழன் முன்னேறுவது - விடுதலை பெறுவது என்று தெரியவில்லை. 2 மணிகளை இழந்தோம். தமிழராட்சி ஏற்படும்போது இவ்விரு வீரர்களை அடிப் படையாகக் கொண்டே கட்டப்படும். இவர் மாண்டார். நாம் கண்ணீர் விட்டோம். இதைவிட்டு வெளியில் சென்றவுடன் நம் வேலையைப் பார்க்கச் சென்றுவிடக் கூடாது. வேண்டிய செய்ய வேண்டும். நாளை - ஆச்சாரி யார், யாரோ நாடார், யார் பேச்சைக் கேட்டுக் கொண்டோ

வந்தார்; மறியல் செய்தார்; இறந்தார் என்றுதான் சொல்லப் போகின்றார். காங்கிரசின் 3 ஆண்டு சத்யாக்கிரக காலத்து எந்தத் தொண்டனாவது இறந்தானா? எந்த ராட்சத சர்க்காராவது இக்கொடுமையைச் செய்ததா? அன்று சத்தியமூர்த்திக்கு சிறையில் உடல்நலமில்லை யெனக் கரடியாகக் கத்தினர். பாஷியம் அய்யங்காரைப் பற்றிப் பார்லிமெண்ட் வரை கேள்வி கேட்டனர். தோழர் தாலமுத்து இறந்தது நீண்ட நேரம் வரை யாருக்கும் தெரியாது.

**எங்கள் நோக்கம்**

இந்நிலையில், திரிபுரியில், எனது மாகாணத்தில் 62000 பேர் இந்தி படிக்கின்றனர் என்று பெருமை பேசுகிறார். ஆனால் 900 பேர் சிறை செய்யப்பட்டனர் என்றாவது ஆயிரக்கணக்கானவர் கூட்டத்தில் எனது ஆட்சியை வெறுக்கின்றனர் என்றாவது கூறினாரா? இனி இந்தி படிக்கும் மாணவர்-இருவர் உடலைத் தாண்டிக் கொண்டுதான் படிக்கச் செல்ல வேண்டும். தமிழன் உயிர் தமிழன் கையிலிருக்க வேண்டு மென்பதே எங்கள் நோக்கம். நம்மில் மாறுபட்ட தமிழரைத் திருப்ப வேண்டும்.

**வருங்காலத்தில் பெரியாரை மத்தியில் வைத்து இறந்த 2 மணிகளையும் பக்கத்தில் வைத்து உருவம் எழுப்ப வேண்டும், ஏன்? பெரியார் வளரும் காலத்து, இந்த இரண்டு சமூகங்களும் அதாவது நாடார், ஆதித்திராவிடர் சமூகங்கள் தான் உதவி செய்து வந்திருக்கிறது.**

அடுத்த வாரம் குடந்தை செல்லப்போகின்றேன். எனது நாடார் சகோதரர்கட்கு என்ன பதில் கூறுவதென்று தெரியவில்லை. தமிழர்கள் ஒற்றுமையாகச் சேர்ந்து தமிழராட்சியை ஏற்படுத்த முயற்சி செய்யுங்கள். இறந்த நாடார் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த அனுதாபம்.”

முஸ்லிம்கள் சார்பில் தோழர் அப்துல் அக்கீம் சாகிப் அனுதாபம் தெரிவித்தார்.

தோழர் வி.பி.எஸ். மணியர் அனைவரும் ஒற்று மையுடன் பாடுபட வேண்டினார்.

சர்வாதிகாரி எஸ். சம்பந்தம் பேசுகையில், இருவர் பலியானதைக் கண்டும் தமிழர்கட்கு சிறையைத் தவிர வெளியில் வேலையில்லை எனத் தெரிவித்தார்.

**தோழர் எஸ். நடேச முதலியார் பேசுகையில், தென்னாப்பிரிக்கா சத்யாக்கிரகம் நாகப்பன், வள்ளியம்மை மரணத்தால் வெற்றியடைந்தது. நமதியக்கம் 2 மணிகளின் இறப்பால் வெற்றிய டையப் போகின்றதென்றார்.**

தோழர் எம். தாமோதரம் நாயுடு இறுதியில் அனுதாபம் கூறினார்.

பின்னர் ஈமக்கடன்கள் முடிவுற்று இரவு 10 மணிக்கு முடிவுற்றது.

(“விடுதலை” 15-3-1939)

- **தொடரும்**

## வாழ்க்கை ஒப்பந்த விழாக்கள்



### ம. ஓவியா - ஆ. மெரினோ (எ) அன்பு

அரியலூர் மாவட்டம், செந்துறை வட்டம், பொன் பரப்பிக் குடிக்காடு, புலவர் பூ. பொய்யாமொழி - மங்கையர்க்கரசி அவர்களின் பெயர்த்தியும், பொ. மன்னர்மன்னன் - தமிழரசி இணையரின் மகள் ம. ஓவியாவிற்கும், கடலூர் மாவட்டம், கடலூர் வட்டம், சொரகல்பட்டு, குழந்தைராஜ்-மார்கிரேட் அவர்களின் பெயரனும், ஆல்பர்ட் மனோகரன் - அம்சத்தொணி இணையரின் மகன் ஆ. மெலினோ (எ) அன்புவிற்கும் வாழ்க்கை துணை ஒப்பந்த விழா 29.5.2017 திங்கள் கிழமை காலை 9 மணிக்கு இ.கோரியம்பட்டி தங்கவேலு திருமண மண்டபத்தில் வே. ஆனைமுத்து அவர்களின் தலைமையில் சிறப்புடன் நடைபெற்றது. புலவர் பூ.பொய்யாமொழி வரவேற்புரை ஆற்றினார். பல அறிஞர்கள் வாழ்த்துரை வழங்கினர். மணமக்கள் சிந்தனையாளன் புரவலர் கட்டணம் ரூ.5000 வழங்கினர்.

### எழில்பாரதி - மகேசுவரசர்மா

பாவலர் அறிவுமதி - மணிமேகலை இணையரின் மகள் எழில்பாரதிக்கும், இரா.தேவநாதன்-விசயகுமாரி இணையரின் மகன் மகேசுவரசர்மாவிற்கும் வாழ்க்கை ஒப்பந்த விழா 29.5.2017 காலை 6 மணிக்கு புதுவை பாகூர் விசயவர்த்தினி மகாலில் சிறப்புடன் நடைபெற்றது.

### சண்முகராசன் - சானகி

சென்னை, வேளச்சேரி என். லோகநாதன் - சித்ரா இணையரின் மகன் சண்முகராசனுக்கும், சென்னை, ஒக்கியம்பேட்டை, இராமச்சந்திரன்-கெஜ லட்சமி இணையரின் மகள் சானகிக்கும் வாழ்க்கை ஒப்பந்த விழா 18.5.2017 வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மேடவாக்கம் ஜெ.எஸ். கிராண்ட் பேலஸ் திருமணக் கூடத்தில் சிறப்புடன் நடைபெற்றது.

### பா.ஜெயபிரகாஷ் - சி.கற்பகம்

அரியலூர் மாவட்டம் உடையார்பாளையம் மருதூர் பாரி-மகேஸ்வரி இணையரின் மகன் பா.ஜெயபிரகாஷ்க் கும், சிவக்குமார் - தமிழரசி இணையரின் மகள் கற்பகத் திற்கும் 28-5-17 ஞாயிறு காலை 7 மணிக்கு மருதூர் மணமகன் இல்லத்தில் வே.ஆனைமுத்து தலைமை யில் நடைபெற்றது. கலியமூர்த்தி, துரை.சித்தார்த்தன், சி.பெரியசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். சிந்தனையாளன் புரவலர் கட்டணமாக மணமகன் ரூ.5000 வழங்கினர்.


# எளிமையின் உதாரணங்கள்!



நிருபென் சக்கரவர்த்தி



தசரத் தேவ்



மாணிக் சர்க்கார்

1988 மே மாதம், திரிபுராவில் 10 ஆண்டுகளாக ஆட்சியிலிருந்த இடது முன்னணி அரசு தேர்தலில் தோல்வியடைந்தது. முதல்வர் நிருபென் சக்ரவர்த்தி பதவியை விட்டு விலகி, முதல்வர் இல்லத்திலிருந்து ஒரு சிறிய டிரங்க் பெட்டியை எடுத்துக்கொண்டு, ரிக்ஷா வில் ஏறி மார்க்சிஸ்ட் கட்சி அலுவலகத்துக்குச் சென்று தங்கினார். இது தொடர்பாகச் சிறிய அளவில் செய்திகள் வெளியாகின. மறுநாள் தினமணி நாளிதழ் "இப்படியும் ஒரு முதல்வர்!" என்று எழுதியதைத் தொடர்ந்து, எண் ணற்ற வாசகர்கள் தங்கள் வியப்பை, வேட்கை யை வெளிப்படுத்தியிருந்தனர். 1991இல் மக்களவைத் தேர்தல் பிரச்சாரத்துக்கு அவர் தமிழகம் வந்திருந்த போது அவருக்குக் கிடைத்த வரவேற்பு அலாதியானது.

1993இல் மீண்டும் இடது முன்னணி தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தபோது, ஆதிவாசிகளின் ஆதர்சன நாயகனான தசரத் தேவ் முதல்வரானார். நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டிருந்த அவர், சென்னை இராயபுரத்தில் இருந்த மருத்துவர் விஸ்வநாதனிடம் சிகிச்சை பெற்றுவந்தார். அப்போது அரசு விருந்தினர் மாளிகையில் தங்காமல், மேற்குவங்க அரசு சென்னை யில் சிகிச்சைக்காக வரும் நோயாளிகளுக்கென ஏற்படுத்தி யிருந்த இளைஞர் விடுதியின் ஓர் அறையில் தான் தங்குவார், அவரது தனி மருத்துவர் டாக்டர் பட்டாச்சார்யா மற்றொரு அறையில் தங்குவார். 1998 இல் அவர் இறக்கும் வரை இப்படித்தான் நடந்தது.

**தசரத் தேவ் மறைவைத் தொடர்ந்து, 1998இல் முதல்வராகப் பொறுப்பேற்ற மாணிக் சர்க்கார், தொடர்ந்து நான்காவது முறையாகப் பதவியில் நீடிக்கிறார். வட கிழக்கு மாநிலங்களிலும், ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திலும் அமலாக்கப்பட்டு வந்த இராணுவப் படைப் பிரிவுகளுக் கான சிறப்பு அதிகாரங்கள் சட்டம் (AFSPA) 2015 மே மாதத்தில் திரிபுரா மாநிலத்திலிருந்து முற்றிலுமாக விலக்கிக் கொள்ளப்பட்டது. இதைச் சாதித்தவர் மாணிக் சர்க்கார்.**

அவருக்கு இந்த ஆண்டுக்கான காயிதே மில்லத் விருது வழங்கப்படுகிறது. மணிப்பூர் இராணுவப் படைப் பிரிவுகளுக்கான சிறப்பு அதிகாரங்கள் சட்டத்தை எதிர்த்து, கடந்த 16 ஆண்டுகளுக்கும் மேலாகப் போராடி வரும் மக்கள் உரிமைகளுக்கான போராளி இரோம் ஷர்மிளா, கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்வியாளராகச் செயல்பட்டுவரும் முகம்மது இஸ்மாயில் ஆகியோருக்கும் இந்த விருது இன்று (மார்ச் 30) சென்னையில் நடை பெறும் விழாவில் வழங்கப்படுகிறது. இரோம் ஷர்மிளா, தற்போது கேரள மாநிலத்தில் சிகிச்சை பெற்றுவருவ தால், பாலக்காடு நகரில் தனியாக ஒரு விழாவில் இந்த விருதை அவருக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**திரிபுரா மாநிலத்தின் மூன்று முதல்வர்களும் எளிமையின் இருப்பிடமாக, நேர்மையின் உறைவிட மாக இருப்பதற்கு அந்த மாநிலம் சார்ந்த கலாச்சாரம் தான் காரணமா அல்லது அவர்கள் சார்ந்திருக்கும் இடதுசாரித் தத்துவம் காரணமா என்ற கேள்வி எனக்குள் எழுந்தது. சமூக மாற்றத்துக்காகப் போராடிய இ.எம்.எஸ்., ஏ.கே. கோபாலன், இ.கே. நாயனார், அச்சுதானந்தன் என கேரளாவிலும், ஜோதிபாசு, புத்ததேவ் பட்டாச்சார்யா என மேற்கு வங்கத்திலும், ப. ஜீவானந்தம், பி. ராமமூர்த்தி, ஏ. நல்லசிவன் எனத் தமிழகத்திலும் எளிமையின், நேர்மையின் உருவங் களை உருவாக்கிய இடதுசாரித் தத்துவத்தின் வழி நிற்பதால்தான், இத்தகைய குணமாற்றத்தை-பண்பு மாற்றத்தை மாணிக் சர்க்கார் போன்ற தலைவர் களிடம் நம்மால் காண முடிகிறது என்பதை என்னால் அனுபவரீதியாக உணர முடிந்தது. இத்தகையோரின் இருப்பும் நடப்புமே நமக்குள் எதிர்காலம் குறித்த நம்பிக்கையை விதைக் கிறது. இன்றையத் தேவை இத்தகு மனிதர்கள்தான்!**

- **வீ.பா. கணேசன்,** எழுத்தாளர்
தொடர்புக்கு : wbganesan@gmail.com

("தி இந்து", 30.3.2017)

# மா.பெ.பொ.க.
# பொதுக்குழுக் கூட்ட அழைப்பு

## அம்பத்தூரில் 2-7-2017 ஞாயிறு காலை 10 மணிக்கு

அன்புள்ள தோழரீர், வணக்கம்.

நாம் 5-3-2017 பொதுக்குழுவில் திட்டமிட்டபடி, "**டாக்டர் அம்பேத்கர் - பாவேந்தர் 127ஆம் பிறந்த நாள் விழா**"க் கூட்டங்களை, 18-4-2017 முதல் 3-5-2017 முடிய, பல ஊர்களில் நடத்தி சிறப்பாகக் கொண்டாடினோம்.

எல்லா மாவட்டச் செயலாளர்களும், புதுவை மாநிலச் செயலாளரும் கட்சித் தோழர்களும், தோழமை அமைப்பினரும் ஆர்வத்துடன் கூட்டங் களுக்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

நானும் துணைப் பொதுச் செயலாளர் தோழர் சி. பெரியசாமியும் எல்லா ஊர்க்கூட்டங்களிலும் பங்கேற்றோம். மிக வெற்றியாக எல்லாக் கூட்டங்களும் முடிந்தன.

இனி நாம் களப்பணிகளுக்கு ஆயத்தம் ஆகவேண்டும்.

1. **"சிந்தனையாளன்" இதழ், சூலை 1இல், 4ஆம் ஆண்டில் வெளிவருகிறது. 2017ஆம் ஆண்டில் சூன் 1 முதல் சூலை, ஆகத்து, செப்டம்பர் 10 வரை யில் உள்ள 100 நாள்களில் நாம் 10,000 (பத்தாயிரம்) புதிய உறுப்பினர் களை சந்தாதாரர்களைச் சேர்க்க வேண்டும்.**
2. **"சிந்தனையாளன்" இதழ் வளர்ச்சித் திட்டத்தை நிறைவேற்றிட ஒரு குழு வையும், மா.பெ.பொ.கட்சி பரப்புரைத் திட்டத்தை நிறைவேற்றிட ஒரு குழுவையும் அமர்த்த வேண்டும்.**
3. **பெரியார் நாகம்மை அறக்கட்டளை சார்பில், "சுயமரியாதை வாழ்வியல் பட்டயப் பயிற்சி" வகுப்பு நடத்தப்பட, பெரிய அளவில் பொருள் திரட்டப்பட வேண்டும். இதற்கு ஒரு குழுவை அமைக்க வேண்டும்.**
4. **மற்றும் உறுப்பினர்கள் முன்மொழியும் பொருள் பற்றி ஆய்தல்.**

**இது, நம் இயக்க வரலாற்றில் மிக முதன்மையான பொதுக்குழுக் கூட்டம் ஆகும்.**

ஆதலின், இந்த அழைப்பைப் படிக்கும் கட்சித் தோழர் ஒவ்வொருவரும், தவறாமல் இப்பொதுக்குழுக் கூட்டத்துக்கு வருகை தந்து, திட்டங்களைத் தீட்டித்தருமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.

சென்னை
**1.6.2017**

**வே. ஆனைமுத்து**
பொதுச் செயலாளர், மா.பெ.பொ.க. &
தலைவர், பெரியார்-நாகம்மை அறக்கட்டளை

# எல்லா மதமும் மூர்க்கப் பிரச்சாரமே

ஈ.வெ.ரா.

சங்கராச்சாரி மதம் பவுத்த மடங்களில் நெருப்பு வைத்ததும், சைவ மதம் சமணர்களைக் கழுவேற்றினதும், வைணவ மதம் புத்த விக்கிரகங்களை உடைத்து உருக்கினதுமான காரியங்கள் எல்லாம் நினைத்துப் பார்ப்போமானால், அந்தக் காலத்தில் மகமதியர்கள் செய்ததாகச் சொல்லப்படுபவைகள் எதற்கும் இக்காரியங்கள் இளைத்ததல்ல என்று தோன்றும். ஆனாலும், மகமதிய மதம் வாள்கொண்டு பிரச்சாரம் செய்யப்பட்டதா இல்லையா என்பதில் இன்னமும் தகராறு இருக்கின்றது. மகமதியர்கள் அதை ஒப்புக்கொள்வதில்லை. மற்றபடி அதைத் தங்கள் எதிரிகளால் தங்கள்மீது கற்பிக்கப்பட்ட ஓர் பழி என்று சொல்லுகின்றார்கள்.

**ஆனால் சமணர்களைச் சைவர்கள் கழுவேற்றியதை சைவர்களே ஒப்புக்கொண்டு தங்களாலேயே எழுதி வைத்து புண்ணிய சரித்திரமாக இன்றும் பிரச்சாரம் செய்வதுடன், அதன் பெருமையைக் காட்டிக் கொள்ள வருஷந்தோறும் பல ஆயிரம் ரூபாய்கள் செலவில் பல இடங்களில் உற்சவங்கள் நடத்திக் காட்டப்படுகின்றன. அக்கோயில்களில் இன்றும் கழுவேற்றிய காட்சிகள் சித்திர ரூபமாய் எழுதி வைக்கப்பட்டிருக்கின்றன.**

அதுபோலவே வைணவர்களும் புத்த மத விக்கிரகத்தை அழித்ததற்கு ஆதாரமாய், ஸ்ரீரங்கம் கோயில் இருப்பதுடன், அவ்விக்கிரகத்தைத் திருடி உடைத்த திருமங்கையாழ்வாரின் சரித்திரத்தில் இதையொரு பெருமையாகவும் எழுதிப் புண்ணிய சரித்திரமாகப் பாவித்துத் தினமும் படிக்கப்பட்டும் வருகின்றன. இவைகள் ஒருபுறமிருக்க, இன்றைய தினமும் எனக்கு வரும் சில கடிதங்களையும், என்னைப் பற்றிப் பேசும் பல பேச்சுகளையும் பார்த்தாலும் எனது கொள்கைகளை எதிர்த்துப் பிரச்சாரம் செய்யும் சைவ வைணவர்களின் வார்த்தைகளைப் பார்த்தாலும் அவைகளும் மகமதியர் செய்ததாய்ச் சொல்லப்படும் வாள்பிரச்சாரத்திற்குச் சிறிதும் இளைத்ததல்லவென்றே தோன்றும்.

கிறிஸ்துநாதர் ஏன் சிலுவையில் அறையப்பட்டார்? சாக்ரடீஸ் ஏன் விஷமருந்தச் செய்யப்பட்டார்? மகமது நபி ஏன் மலைக் குகைக்குள் ஒளியப்பட்டார்? என்பவைகளை எல்லாம் கவனித்தால், ஆரம்பகாலம் தொட்டே உலகத்தில் சிறப்பாக நமது நாட்டில் மதப் பிரச்சாரங்களின் கதி இப்படித்தான் இருந்து வந்திருக்கின்றன என்பது விளங்கும். இவை தவிர இன்றைய தினமும் இந்து மத தர்மத்தில் இருக்கும் தர்மங்கள் - அதாவது நாஸ்திகர்களை நாக்கறுக்க வேண்டும், கண்ணைக் குத்த வேண்டும். சித்திரவதை செய்ய வேண்டும். நாட்டை விட்டுத் துரத்த வேண்டும் என்பனவெல்லாம் எந்தத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது என்று கேட்கின்றேன்?

மற்றும் இந்து மத சாஸ்திரங்களைப் படித்தால் நாக்கறுக்க வேண்டும்; கேட்டால் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டும்; பார்த்தால் கண்ணைக் குத்த வேண்டும்; மனதில் ஏறிவிட்டால், நெஞ்சைப் பிளக்க வேண்டும் என்பனவெல்லாம் எந்தத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது? என்று கேட்கிறேன்.

**மற்றும் பெரியோர் வாக்கைப்-புராண இதிகாசங்களை எவன் தர்க்க புத்தியால் விவகாரம் பண்ணுகின்றானோ அவன் நாத்திகனாவான். அப்படிப்பட்டவனை அரசன் தண்டிக்க வேண்டும் என்பனவாகியவெல்லாம் எந்தத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது?**

**மற்றும் நந்தன் நெருப்பில் பொசுக்கப்பட்டது போன்ற கதைகள் எந்தத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது?**

**ஆகவே, உலகில் மதப் பிரச்சாரம் என்பதே, மூர்க்கத்தனத்தையும் பலாத்காரத்தையும் கொண்டதேயொழிய, அனுபவத்தில் அன்புமயமான மதம் உலகில் ஒன்றுமே இல்லை என்றே சொல்லுவேன்.**

இந்து வேதத்தை எடுத்துக் கொண்டாலும் அந்தக் காலத்திய வேத மதக்காரர்களுக்கத் தங்கள் எதிர் மார்க்கக்காரர்களை அடிக்கவும், கொல்லவும் செய்வதும், அப்படிச் செய்யச் சக்தி இல்லாவிட்டால் அவர்களைக் கொல்ல வேண்டும்; அழிக்க வேண்டும் என்று தங்களது கடவுள்களைத் தோத்திரம் பண்ணுவதுமான காரியங்கள் நிறையப் பார்க்கலாம்.

**ஆகவே எப்பொழுது மத விஷயத்தில் கையிலானவர்கள் எல்லாம் பலாத்காரத்திலும், கையிலாகாதவர்கள் எல்லாம் கடவுளை வேண்டியும் சாபம் கொடுத்தும்தான் இருக்கிறார்கள். தவிர இந்து மதத்தில் உள்ள தீண்டாமையும், பெண் அடிமையும் சிறிதும் மனிதத்தன்மைக்கு ஏற்றதல்ல என்பதை உலகமே சொல்லுகின்றது.**

**(“குடிஅரசு”, 24.8.1930)**

## மே இதழ் திருத்தம்

பெருமதிப்பிற்குரிய அய்யா அவர்களுக்கு, வணக்கம்.

சிந்தனைச்சிற்பி சிங்காரவேலர் கட்டுரையில், “1994ஆம் ஆண்டில் சென்னை மாநிலக் கல்லூரியில் படித்து பி.ஏ. பட்டம் பெற்றதுடன்” என்பதில் **1894** என்று இருந்திடல் வேண்டும். அச்சுப்பிழை என்றாலும், அது கருத்துப்பிழையாக உள்ளது. பிழை திருத்தம் வெளியிடுதல் நலன்பயக்கும் என்று தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

- **மரு.க. சோமாஸ்கந்தன்,** கோயம்புத்தூர்

# கொள்கைக் குன்று ஏ.கோவிந்தசாமி நூற்றாண்டு விழா

நாள் : **15.6.2017, வியாழக்கிழமை** ★ இடம் : **ஆனந்தா திருமண மஹால்,** விழுப்புரம்.



அன்புடையீர் வணக்கம்!

ஏ.கோவிந்தசாமி நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள் காலை 7.00 மணிமுதல் இரவு 10.00 மணிவரை நடைபெற உள்ளன. அனைவரும் வருக! வருக! என வரவேற்கிறோம்.

- **ஏ.ஜி.சம்பத்,** மு.ச.ம.உ.
விழாக்குழுத் தலைவர், ஒருங்கிணைப்பாளர்
மலர்க்குழு, விழாக்குழு

## நிகழ்ச்சி நிரல்

காலை 7 மணிமுதல் மாலை 3 மணிவரை **ஏ.கோவிந்தசாமியின் மகன் ஜி.இளங்கவோன்-டாக்டர் சுமதி இளங்கோவன் புதுவை எ.ஜி.பத்மாவதி மருத்துவமனை** இணைந்து நடத்தும் மாபெரும் **இலவச மருத்துவ முகாம்**

தொடங்கி வைப்பவர் : **என்.நமச்சிவாயம்**
பொதுப்பணித்துறை அமைச்சர், புதுவை

மாலை 3.00 மணிக்கு இசை நிகழ்ச்சி
மாலை 4.00 மணிக்கு நூற்றாண்டு விழா நிகழ்வு தொடக்கம்

வரவேற்பாளர்கள் :
**ஏ.மல்லிகா, எஸ்.செல்வசாந்தி, ஏ.ரேவதி, ஆர்.ராஜேஸ்வரி, ஆர்.சுஜான, எஸ்.இராஜேஸ்வரி, ஐ.லட்சுமிபிரபா, ஜி.ராணி, வி.அனிதா**

வரவேற்புரை :
ஏ.கோவிந்தசாமியின் மகன் **அன்பழகன்**, வழக்குரைஞர்

தொடக்கவுரை : ஏ.கோவிந்தசாமியின் மருமகன் **என்.ஆதிமூலம்,** இ.ஆ.பா. (ஓய்வு)

நிகழ்ச்சி தொகுப்பாளர்
**ஏ.ஜி.சம்பத்,** மு.ச.ம.உ.

மேடையில் சிலைத் திறப்பு :
திண்டிவனம் **கே.ராமமூர்த்தி,** எம்.பி.,

ஏ.கோவிந்தசாமி படத்திறப்பாளர் : **எஸ்.பி.பச்சையப்பன்**

ஏ.ஜி.பத்மாவதி அம்மையார் படத்திறப்பாளர் :
**கோ.அரங்கநாததன்,** வழக்குரைஞர், திருக்கோவிலூர்

நன்றியுரை : **எம்.பாலசுப்பிரமணியம்**

சிறப்பு விருந்தினர் : **எஸ்.இராஜேந்திரன்,** கல்வியாளர்

நூல் ஆசிரியர்கள் :
கலைமாமணி **அ.மறைமலையான், திருமாவேலன்,** விடகன் ஆசிரியர். **பாலி ஸ்ரீரங்கம்** திரைப்பட இயக்குநர் பேரா.**இரா.சீனிவாசன்**

முனைவர் **ஆ.முத்தமிழ்ச்செல்வன், எஸ்.கே.சிவராமன், தெ.வே.சஞ்சீவிராயன், ச.சண்முகநாதன், ஆனை.பன்னீர்செல்வம்**

தமிழ் ஆர்வலர்கள் : டாக்டர் **மகுடமுடி, என்.பண்டரிநாதன், வி.சி.விஜயசங்கர்,** முனைவர் **பி.விஜயராணி,** செந்தலை **ந.கவுதமன்**

தலைமை : முனைவர் **பொன்.கோதண்டராமன்**
மேனாள் துணைவேந்தர்

முன்னிலை :
**முனைவர் தங்கராசு, முருகேசபூபதி, ஜி.மகாதேவன்**

நூல் அறிமுகம் : முனைவர் **எஸ்.எஸ்.மணியன்**

மலர் அறிமுகம் : புலவர் **கு.சீத்தா**

சிறப்புரை : முனைவர் **க.பொன்முடி,**
தி.மு.க.மாவட்டச் செயலாளர்

**ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன்**

நூற்றாண்டு மலர் வெளியிடுபவர் : **வே.ஆனைமுத்து,**
பொதுச் செயலாளர், மா.பெ.பொ.க.

**ஏ.ஜி.சட்டமன்ற உரைகள் வெளியிடுபவர்கள் :**

தொகுதி 1 : **ந.இரங்கசாமி**
புதுவை முன்னாள் முதல்வர்

தொகுதி 2 : **எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
த.மு.க. மாவட்டச் செயலாளர்

தொகுதி 3 : **க.வேங்டபதி** முன்னாள் மத்திய அமைச்சர்

நூல்களைப் பெற்றுக் கொள்வோர் :
**வ.சபாபதி, கோ.சூரியமூர்த்தி, எஸ்.உதயசங்கர், ஏ.தமிழ்ச்செல்வன், எம்.தனசேகரன்,** மாம்பலம் **சந்திரசேகர், கே.தனவேல்,** இ.ஆ.பா.ஓய்வு
**பொன்னுசாமி,** இ.ஆ.பா.ஓய்வு
**ஆர்.விஸ்வநாதன்,** புதுவை முன்னாள் அமைச்சர்
**இள.புகழேந்தி,** மு.ச.ம.உ. மற்றும் பலர்

அனைவரும் வருக.

**எ.ஜி.சம்பத்,** விழாக்குழுத்தலைவர்

# தமிழ்க்கொலை செய்யும் நம் தாளிகைகள்

மா. செங்குட்டுவன்

ஆங்கில இதழ்களையோ, நூல்களையோ பார்த்தால் எழுத்துப் பிழையோ, சொற்பிழையோ காணமுடியாது. அயல்மொழியான ஆங்கிலத்தில் நாம் கடிதமோ, கட்டுரையோ எழுதினால்கூட ஒரு தவறும் நேராமல் பார்த்துக் கொள்கின்றோம். நாம் எழுதியதை வேறொருவர் பார்த்துப் பிழைகளைச் சுட்டிக்காட்டினால் வெட்கித் தலைகுனிகிறோம். ஆனால் நம்மவர்கள் - தமிழையே தாய்மொழியாகக் கொண்டவர்கள் தமிழில் எழுதுவதில் தான் எத்தனை, எத்தனை பிழைகள்? அந்தப் பிழைகளுக்காக நாம் வெட்கப்படுவதில்லையே! ஏன்?

நாம் எழுதுவதுதான் தமிழ் என்ற நினைப்போடு எழுதி விடுகிறோம். அடுத்தவரிடம் காட்டிப் பிழையைத் தெரிந்துகொள்ளவும் வெட்கப்படுகிறோம்.

நம்மவர் எல்லோருமே தமிழைப் பிழையறக் கற்றவர்களாக இருக்க முடியாது. எனவே நாம் எழுதியது சரிதானா என்று தமிழறிஞர்களிடமோ, தமிழைப் பிழையின்றி எழுதக் கூடியவரிடமோ காட்டித் திருத்திக் கொள்வதில் தவறில்லை; அதில் வெட்கப்படுவதற்கு ஒன்றுமில்லை. தமிழில் இன்றைக்கு வெளிவந்து கொண்டிருக்கும் நாளிதழ்களிலும் பிற தாளிகைகளிலும் உள்ள இலக்கணப் பிழைகளைக் காணும்போது நமக்கு வேதனையாக இருக்கிறது. தமிழர்களாகிய நம்மையும் வெட்கப்படச் செய்கின்றது.

குறிப்பாக, ஒற்றுப் பிழையைச் சொல்லலாம். ஒற்றுப் பிழையில்லாமல் வரும் ஏடுகளோ, இதழ்களோ இல்லையென்றே சொல்லிவிடலாம். நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து பேருக்கு மேல் ஒற்றுப் பிழைகளோடுதான் எழுதுகிறார்கள். ஒற்றெழுத்து வரக்கூடாத இடங்களில் ஒற்றெழுத்தைப் போடுகிறார்கள். ஒற்றெழுத்து வர வேண்டிய இடங்களில் ஒற்றெழுத்தே இல்லாமல் எழுதுகிறார்கள். இதற்குக் காரணம் நம்மவர்கள் - நன்கு படித்தவர்கள் கூட எங்கு ஒற்றெழுத்து வரும்; எங்கே வராது என்று தெரிந்து கொள்ளாமலே எழுதி வருகின்றனர்.

ஒற்றெழுத்து என்பது ஒரு கட்டடம் கட்டும் தொழிலாளி, இரண்டு செங்கற்களுக்கிடையே அவற்றை ஒட்டுவதற்காக சுண்ணச்சாந்து அல்லது சிமெண்டு வைத்து ஒட்டுவது போன்றது. சாந்து, சிமெண்ட் இல்லாமல் வெறுங்கல்லை அடுக்கி வீடு கட்டினால் அந்த வீடு நிலைக்குமா? கலகலத்துப் பொலபொல என்று நொறுங்கி விடாதா? தமிழும் அப்படித்தான்.

*எடுத்துக்காட்டு :*

வேலை கொடுத்தார்; அதாவது வேலை செய்வதற்குப் பணியில் அமர்த்தினார் என்று பொருள்படும்.

வேலைக் கொடுத்தார் என்றால் வேல் என்ற ஆயுதத்தைக் கொடுத்தார் என்று பொருள்.

ஆணை பெற்றான் என்றால் கட்டளையிடும் ஆணையைப் பெற்றான் என்று பொருள்.

ஆணைப் பெற்றான் என்றால் ஆண் குழந்தையைப் பெற்றான் என்று பொருள்.

ஒற்று என்னும் ஓர் எழுத்து இருந்தால் என்ன பொருள், இல்லாவிட்டால் என்ன பொருள் என்பதை இதன்மூலம் அறியலாம். ஒற்றெழுத்து என்பது உப்பைப் போன்றது. உணவில் உப்பு மிகுந்தால் கரிக்கும். குறைந்தால் சுவையிருக்காது அல்லவா?

ஆங்கில இதழ்களில் ஆங்கிலத்தை நன்கு அறிந்தவர்களைத்தாம் வேலைக்கு அமர்த்திக் கொள்வார்கள். நம்மவர்களோ கிடைத்த ஆட்களை வைத்துக்கொண்டு இதழ்களை நடத்துகின்றார்கள்.

இதழ் நடத்துபவருக்கே, அதன் ஆசிரியருக்கே பிழையின்றித் தமிழில் எழுதத் தெரிவதில்லை, ஒருநாள் வெளிவரும் தமிழ் நாளிதழ்களை எல்லாம் உட்கார்ந்து படித்துப் பாருங்கள். எத்தனை எத்தனை பிழைகள்! பட்டுக்கோட்டை என்பதைக்கூடப் பட்டுகோட்டை என்று எழுதுகிறார்கள். அவனுக்குக் கொடுத்தான் என்பதை அவனுக்கு கொடுத்தான் என்று எழுதுகிறார்கள். அட்டைக்கத்தி என்பதை அட்டை கத்தி என்ற பெயரில் திரைப்படம் எடுக்கிறார்கள்.

இப்படி எத்தனையோ பிழைகள். இன்றைய நாளிதழ்களில் மட்டுமல்லாது நூல்களிலும் பிழைகள் மலிந்து காணப்படுகின்றன. தொலைக்காட்சியில் எழுதிக் காட்டுவதிலும் அப்படியே! இப்பொழுதெல்லாம் 'புலவர்' என்று பெயருக்கு முன்னால் உள்ள சொல்லை நம்பி, அவர் எழுதுவதெல்லாம் சரிதான், என்று நாம் நம்பி விட முடியவில்லை.

வெளிநாட்டிலிருந்து வந்து தமிழைக் கற்றுத் தமிழுக்கே 'அகராதி' தந்தார் வீரமாமுனிவர். தமிழை ஆராய்ந்து ஒப்பியல் இலக்கணம் எழுதினார் வெளிநாட்டறிஞர் கால்டுவெல். ஆனால் தமிழகத்திலேயே பிறந்து வளர்ந்து தமிழைப் படித்து, தமிழில் பணியாற்றுபவர்கள் சரியாகத் தமிழை எழுதாதற்கு என்ன காரணம்? நம் தாய்மொழி தானே, நம் எல்லோருக்கும் தெரிந்த மொழிதானே, எப்படி எழுதினால் என்ன என்று தாய்மொழியைப் பொருட்படுத்தாமைதான் இதற்குக் காரணம்.

நமது பள்ளிக்கூடங்களிலும் தமிழைப் பிழையற எழுதக் கற்பிப்பதில்லை. தமிழாசிரியர்களிலேயே சில

ருக்கு இலக்கணத் தட்டுப்பாடு உண்டு. நான் படித்த பள்ளியிலேயே ஒரு தமிழாசிரியர் இலக்கணத்தைச் சரியாகக் கற்பிப்பதில்லை. ஒரு மாணவன் எழுந்து இலக்கணத்தில் ஓர் ஐயப்பாட்டைத் தெளிவாக்கச் சொல்லி, வினவினால், ''தேர்வில் இலக்கணத்துக்குப் பத்து மதிப்பெண்கள்தாம் வைத்திருப்பார்கள். அதை விட்டுவிட்டு மற்றவற்றை நன்றாகப் படித்து எழுதினால் போதும்'' என்று சொல்லுவார். இதற்குக் காரணம் அவரே இலக்கணத்தைச் சரியாகக் கற்காது விட்டுவிட்டதுதானே!

இப்படித் தமிழர்களே தாய்மொழியைப் புறக் கணிக்கலாமா?

சில இதழ்களில் ஆங்கிலச் சொற்களை அப்படியே தமிழில் எழுதுகிறார்கள். அதற்குச் சரியான தமிழ்ச் சொல் இருக்கும்போதே அதனைப் புறக்கணித்து விட்டு ஆங்கிலச் சொற்களைப் போடுகிறார்கள்.

சில இதழ்களின் பெயர்களே ஆங்கிலத்தில் உள்ளன. ஜுனியர் விகடன். டாக்டர் விகடன். குமுதம் ரிப்போர்ட்டர் இப்படிப் பல. லாரி ஸ்ட்ரைக், புக்கிங் நிறுத்தம், வாட்ஸ் அப் ட்ரெண்டிங், மிஸ்டர் ப்ராப்ளம், wikiயானந்தா, பஞ்ச், இது Extra பஞ்ச், ப்ளஸ், சன்டே ஸ்போர்ட்ஸ், சன்டே சினிமா, ஹெல்த் ஸ்பெஷல், ஆட்டோ மொபைல் இப்படி எண்ணற்ற ஆங்கிலச் சொற்கள் அதே உச்சரிப்பில் தமிழில் வெளியிடுகிறார்கள். இந்த அவலம் எப்போது நீங்கும்?

இந்த நிலை ஏன்? எண்ணிப் பாருங்கள்.

பள்ளி மாணவர்கள் படிக்கும் இலக்கண நூல்களை யாவது வாங்கிப் படிக்க வேண்டும்.

நன்றி : மீண்டும் கவிக்கொண்டல், மே 2017

## திருவள்ளுவர் அறக்கட்டளை

ஆயிரம் பேர் ஆயிரம் ரூபாய் நன்கொடைத் திட்டம் : திருவள்ளுவர் அறக்கட்டளைக்கு ஒரு கூட்ட அரங்கை பத்து இலட்சம் ரூபாய் செலவில் கன்னியாகுமரி, திருக் குறளூரில் அமைப்பது.

திருவள்ளுவர் அறக்கட்டளையின் ஆட்சிப் பொறுப் பாளர் மா.செ. தமிழ்மணியின் உடனடிப் பணியாக இருந்தது. அதை நிறைவேற்ற ஆயிரம் பேர் - ஆயிரம் ரூபாய் என்கிற திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. விருப்ப முள்ளோர் தங்கள் பெயரைப் பதிவு செய்யக் கேட்டுக் கொள்கிறோம்.

**கைப்பேசி : 9443176764**
வங்கிக் கணக்கு எண்.
**TAMIL MUKILAN**
A/c. No.561137196
Indian Bank, Mamandur (Thiruvannamalai)
IFSC Code : IDIB000M011

## குமரிமுனைத் திருக்குறள் திருவிழா

பதினோராம் ஆண்டு, குமரிமுனைத் திருக்குறள் திருவிழா தி.பி.2048 (வைகாசி) முதல் நாள் 15.5.2017 திங்கள்கிழமை முழுநாள் நிகழ்வாக நடைபெற்றது. விண்சுடர் எழும் காலை ஒண்சுடர் ஏற்றுதல் நிகழ்வைக் கதிர் முத்தையன் தொடங்கி வைத்தார். திருக்குறள் முற்றோதல் முன்னிலை டிமிற்றிலால், ஜோசப் பெர்ணாண்டசு, நெறியாளர்கள் ஏ. நற்றேவன், அ. கண்ணம்மாள், திருவள்ளுவர் சிலைக்கு படகில் புறப்படுதல், மலர்த் தூவி வழிபாடு நிகழ்ச்சிக்கு நெறியாளர்களாக இருந்தனர்.

மாலை 5.30 மணிக்கு நடைபெற்ற பொது அரங் கத்திற்கு தமிழ்முகிலன் தலைமை வகித்தார். சா. இராமன் வரவேற்புரையாற்றினார். குரு ஆறுமுகம் கலை நிகழ்ச்சி களை தொடங்கி வைத்தார். பாராட்டும் பங்களிப்பும் நிகழ்வில் ஆ. நெடுஞ்சேரலாதன் பரிசளிக்க, சி.பூ. மணி பெற்றுக் கொண்டார். திருக்குறள் தமிழ்த் தொண்டர் கரு. பேச்சிமுத்து அவர்களைப் பாராட்டி குமர. தன்னொளியன் பரிசளித்தார். திருக்குறள் திறப்பாடு போட்டிக்கு விமுனாமூர்த்தி தலைமை வகித்தார். புலவர் கி.த. பச்சையப்பன் வாழ்த்துரை வழங்கினார். இரா. பாண்டியராசன் நன்றியுரையாற்றினார்.

## மே தினம் தெருமுனைக் கூட்டம்

இயற்கை வளங்களைக் கொள்ளையடித்து, உரிமை களைப் பறித்து, தமிழ்நாட்டை அடிமைப்படுத்தும் பா.ச.க. மோடி அரசை வீழ்த்துவோம்! என்ற முழக் கத்தோடு அம்பேத்கர் பெரியார் காரல்மார்க்சு சமூக நீதி பேரவை சார்பில் மே தினம் தெருமுனைக் கூட்டம் 20.5.2017 சனிக்கிழமை மாலை 5 மணியளவில் திருமுல்லைவாயில் பேருந்து நிறுத்தத்தில் தோழர் திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்றது.

தோழர் மதிவாணன் வரவேற்புரையாற்றினார். தோழர்கள் ஆவடி நாகராசன், சந்தீப் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தோழர்கள் இராமானுஜம், கி.மு. திராவிடமணி, சந்திரசேகரன், தீக்கதிர் ஜான், நா.க. தமிழ்ச்சிற்பி, துரைகார்த்தி, இரணியன், கார்வேந்தன், அன்பரசு, இராவணன், சிவ. காளிதாஸ், சுந்தரமூர்த்தி, சின்னப்பத் தமிழர், மணிசேகரன், இல. குமார், சுதர்சனன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

தோழர் லெனின் தட்சணாமூர்த்தி சிறப்புரை யாற்றினார். தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம் புரட்சிகரப் பாடல் நிகழ்ச்சி நடத்தியது. தோழர் அமுதன் நன்றியுரை ஆற்றினார்.

# மாமேதை டாக்டர் அம்பேத்கர் – புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் 127ஆவது பிறந்த நாள் விழா கூட்டங்கள்

## வாணியம்பாடி




வேலூர் மாவட்டம், வாணியம்பாடியில் தமிழ்ச் சிந்தனையாளர் மன்றத்தின் சார்பில் அம்பேத்கர், பாவேந்தர் ஆகியோரின் 127ஆம் பிறந்தநாள் விழா 16-4-2017 அன்று மாலை 6 மணிக்கு நகர ம.தி.மு.க. அலுவலகத்தில் மன்றத்தின் தலைவர் புலவர் மு.சுப்ரமணியம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. மன்றத்தின் செயலாளர் நா.மதனகவி வரவேற்புரையுடன் கூட்டம் தொடங்கியது.

மாவட்ட மேநாள் நீதிபதி ஆம்பூர் சம்பத் அவர்கள் தொடக்கவுரையாற்றினார். மா.பெ.பொ.கட்சியின் தொழிலாளர் அணி செயலர் சா.குப்பன் அவர்கள் அம்பேத்கரின் இன்றைய தேவை எனும் தலைப்பில் உரை நிகழ்த்தினார். காட்டுப்பாடி பேராசிரியர் இர.நடசராசன் அவர்கள் பாவேந்தரின் இன்றைய தேவை எனும் தலைப்பில் உரையாற்றினார், இருவரின் உரையாற்றியதில் இருந்து கேள்வி பதில் நிகழ்வு 15 நிமிடம் நடைபெற்றது.

இறுதியாக மன்றத்தின் செயற்குழு உறுப்பினர் புலவர் சகாதேவன் அவர்கள் நன்றி கூறினார்.

செய்தி : கு.ப.தா.மதனகவி

## அரியலூர்



புரட்சியாளர் மேதை அம்பேத்கர், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் ஆகியோரின் 127ஆவது பிறந்த நாள் விழா 30.4.2017, ஞாயிறு மாலை 6.00 மணிக்கு அரியலூர் மாவட்டம், செந்துறை வட்டம், சிறுகடம்பூர், முருகன் கோயில் அருகில் மிகச் சிறப்பாக நடந்தது.

முன்னதாக மா.பெ.பொ.கட்சிக் கொடியைத் தோழர் வே. ஆனைமுத்து அவர்கள் ஏற்றி வைத்தார். அப்போது புரட்சி ஓங்குக! இழிவு நீங்குக! சமதர்மம் வெல்க! எனத் தோழர்கள் முழங்கினர்.

செந்துறை ஒன்றியச் செயலாளர் தோழர் சா. சீனிவாசன் கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றார். கூட்டத்தற்குத் தலைமை தாங்கிய மா.பெ.பொ.க. மாவட்டச் செயலாளர், புலவர் இரா. கலியமூர்த்தி 21.6.2017இல் தனது 93ஆவது வயதில் அடியெடுத்து வைக்க இருக்கும் தோழர் ஆனைமுத்து அவர்களே! என்றதும் மக்கள் கைதட்டி மகிழ்ச்சியை ஆரவாரம் செய்தனர்.

பின்னர் தோழர் கவிஞர் அறிவுமழை இன்னிசை முழங்கி உணர்வுபெறச் செய்தார். நம் கட்சியின் இரு துணைப் பொதுச் செயலாளர்களான தோழர்கள் சி. பெரியசாமி, துரை. சித்தார்த்தன் ஆகியோரது உரைக்குப்பின் பெரம்பலூர் மாவட்டச் செயலாளர் மா. நாராயணசாமி, பா.ம.க. செந்துறை ஒன்றியக்குழு உறுப்பினர் செல்ல. இரவி, கீழமாளிகை புலவர் தமிழ் மறவர் பொன்னம்பலனார் மகன் மருத்துவர் பொன். தனித்தமிழ்க்கொற்றன், வட தமிழ்நாடு மக்கள் இயக்க மாவட்ட அமைப்பாளர் தோழர் யு. நீலமேகம் ஆகியோரது உரைக்குப்பின், மா.பெ.பொ.க. பொதுச் செயலாளர், பெரியாரியல் அறிஞர் வே. ஆனைமுத்து சிறப்புரையாற்றினார். பரணம் தோழர் பரமசிவம், குமிழியம் த.கி. இராமலிங்கம், இரும்புலிக்குறிச்சி சி.பி.ச. அறிவொளி, புலவர் சி.கோ., கு. பாரி (மருதூர்), கீழமாளிகை அய். அறிவுடைநம்பி, மக்கள் நெஞ்சம் ஆசிரியர் தோழர் கலச. இராமலிங்கம் முதலான வெளியூர் தோழர்கள் உள்ளூர் மக்களுடன் கலந்துகொண்டு அய்யாவின் ஆழ்ந்த பேச்சைக் கேட்டனர். இறுதியாக, பொறியாளர் த. சம்பத் அனை வருக்கும் நன்றி கூறலுடன் கூட்டம் இனிதே முடிந்தது.

செய்தி : இரா. கலியமூர்த்தி

## புதுச்சேரி


மேதை அம்பேத்கர், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் ஆகியோரின் 127ஆவது பிறந்த நாளை முன்னிட்டு புதுச்சேரி மாநில மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடை மைக் கட்சியின் சார்பில் 3.5.2017 புதன்கிழமை யன்று புதுச்சேரி தமிழ்ச்சங்கம் அரங்கத்தில் மாலை 6 மணியளவில் ‘இந்துத்துத்துவா எதிர்ப்பில் மேதை அம்பேத்கர், பாவேந்தர் பாரதிதாசன்’ என்ற தலைப்பில் அரங்கக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு புதுச்சேரி மாநில மா.பெ.பொ.க. செயலாளர் தோழர் பொறிஞர் இரா. திருநாவுக்கரசு தலைமையேற்று உரையாற்றினார். மா.பெ.பொ.க. துணைப் பொதுச் செயலாளர் தோழர் பெரியசாமி, பாவேந்தர் குறித்து உரையாற்றினார். அடுத்து, மா.பெ.பொ.க. பொதுச் செயலாளர் தோழர் வே. ஆனைமுத்து சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியின் இறுதியாக முன்னரே அறிவிக்கப்பட்டதுபோல் கூட்டத்தில் பங்கேற்றோரின் பல கேள்விகளுக்கு தோழர் வே. ஆனைமுத்து வரலாற்றுப்பூர்வமான பதில்களை வழங்கினார். கூட்டத்தில் பங்கேற்றோரும் உரையாற்றினர். இறுதியில் புதுச்சேரி மாநில மா.பெ.பொ.க. துணைச் செயலாளர் சீனு. சந்திரசேகரன் நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவடைந்தது.

பின்குறிப்பு : நிகழ்ச்சியில் பங்கேற்றோர், இந்நிகழ்ச்சி சற்று வித்தியாசமாகவும், பயனுள்ளதாகவும் அமைந்தது எனச் சொல்லி நன்றி தெரிவித்து விடைபெற்றுச் சென்றனர்.

செய்தி. **இரா. திருநாவுக்கரசு**
செயலாளர், புதுச்சேரி மாநில மா.பெ.பொ.க.

## சிதம்பரம்



மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் சிதம்பரம் நகரில் காந்தி சிலை அருகில் மேதின விழா பொதுக்கூட்டம் கடலூர் மாவட்டச் செயலாளர் தோழர் பா.மோகன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. விழாவில் பா.ம.க.துணைத் தலைவர் வி.எம்.எஸ்.சந்திரபாண்டியன், ம.தி .மு.க.வெளியீட்டு அணிச் செயலாளர் ஆ. வந்தியத்தேவன், மா.பெ.பொ.க. துணைச் செயலாளர்கள் சி.பெரியசாமி, தி.துரைசித்தார்த்தன்,மா.பெ.பொ.க.மாணவர்-இளைஞரணிச் செயலாளர் ஆ.முத்தமிழ்ச்செல்வன் ஆகியோர் கலந்துக் கொண்டு எழுச்சியுரை ஆற்றினார்கள். நிறைவாக மா.பெ.பொ.க. பொதுச்செயலாளர் தோழர் வே.ஆனைமுத்து சிறப்புரையாற்றினார். சிதம்பரம் நகரச் செயலாளர் இரா. புகழேந்தி வரவேற்புரையும் மோ.புரட்சிதமிழன் நன்றியுரையும் ஆற்றினார். நிகழ்ச்சியில் பெருந்திரளான பொதுமக்கள் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர்.

## திருக்கழுக்குன்றத்தில் முப்பெரும்விழா




பாவேந்தர் பிறந்தநாள்விழா, பல்லவன் குரல் இதழ் இரண்டாமாண்டு விழா மூன்று நூல்கள் வெளியிட்டு விழா 30-4-2017 ஞாயிறு மாலை 6 மணிக்கு ஆனூர் ஜெகதீசன் தலைமையில் திருக்கழுக் குன்றம் பேருந்து நிலையம் அருகில் நடைபெற்றது. புலவர் கி.த.பச்சையப்பன், கே.தயாளன், சீ.வெங்கடேசன், நா.க.தமிழ் சிற்பி, பூ.குமரகுருபரசுவாமி உள்ளிட்ட மற்றும் பலர் உரையாற்றினர்.

தி.ச.குணசேகரன் எழுதிய சாகயம் அல்ல சகாயம் நூலை ஆனூர் ஜெகதீசன் வெளியிட தி.ச.மனோகரன் பெற்றுக் கொண்டார். செஞ்சோலை எழுதிய விழித்த மலர்கள் நூலை தே.தயாளன் வெளியிட பூ.இரவிச் சந்திரன் பெற்றுக் கொண்டார். பூ.இரவிச்சந்திரன் எழுதிய எண்ணத்தில் எழுந்தவை நூலை சீ.வெங்கடேசன் வெளியிட வெ.விசுவநாதன் பெற்றுக் கொண்டார். இரவு 10 மணிக்கு விழா சிறப்புடன் முடிவுற்றது.

## அயோத்தியதாசப் பண்டிதரின் 172ஆவது பிறந்த நாள் விழா

புதுக்கோட்டை அபெகா பண்பாட்டு இயக்கம் சார்பில் 20.5.2017 சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு புதுக்கோட்டை சத்தியமூர்த்தி நகர் மகராஜ் மகாலில் அயோத்தியதாசப் பண்டிதரின் 172ஆவது பிறந்த நாள் விழா மற்றும் ‘‘ஆரிய ஸனாதனம் செய்த ஆஷ் படு கொலை’’ நூல் வெளியீட்டு விழா வழக்கறிஞர் நாகமுத்து தலைமையில் நடைபெற்றது. யாழினி வரவேற்புரை யாற்றினார். முதல் படியை டோரதி கிருஷ்ணமூர்த்தி, ஏ.வி.எம்.நல்லையா, சீனு சின்னப்பா, ராசி பன்னீர்செல்வம் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

ஆதவன் தீட்சண்யா நூலை வெளியிட்டுச் சிறப் புரையாற்றினார். பாரதி கிருஷ்ணகுமார் அயோத்திதாசர் படத்தைத் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றினார். நூலாசிரியர் மருத்துவர் நா.செயராமன் ஏற்புரையாற்றினார். சிதம்பரம் ஈஸ்வரன், கோலச்சி ஆகியோர் எழுச்சிப் பாடல்களைப் பாடினர். அ. மணிமேகலையின் நன்றி யுரையுடன் கூட்டம் முடிவுற்றது.

# இந்தி மட்டுமே இந்திய அரசின் அலுவல் மொழி என்பதை எல்லாத் தமிழரும் எதிர்ப்போம்

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் 17ஆவது பகுதியில் விதி 343 பின் வருமாறு கூறுகிறது. இந்திய அரசின் அலுவல் மொழியாக தேவநாகரி எழுத்து வடிவிலான இந்தி இருக்கும் என்று கூறுகிறது.

இதன் பொருள் இந்திய மத்திய அரசின் கீழ் உள்ள எல்லா அலுவலங்களிலும் அஞ்சல்துறை, தொடர் வண்டித்துறை, தொலைப்பேசித்துறை, சுங்கத்துறை, வருமானவரித்துறை, கப்பல் போக்குவரத்துத்துறை, வானூர்தி போக்குவரத்துத் துறை முதலான துறைகளின் அலுவலங்களில், 1965-முதல் இந்தி அலுவல் மொழியாக இருக்கும் என்பதே ஆகும். இதன்படி தமிழ்நாட்டில் உள்ள மேற்கண்டத்துறைகளைச் சார்ந்த எல்லா அலுவலங்களிலும் இப்போது அலுவல் மொழியாக உள்ள ஆங்கிலம் அகற்றப்பட்டு அந்த இடத்தில் இந்தி அலுவல் மொழியாக அமுல்படுத்தப்படும்.

இதேபோல் இந்தியா முழுவதிலும் எல்லா மாநிலங்களிலும் அவரவர் மாநில தாய்மொழி அலுவல் மொழியாக இருப்பதற்கு மாறாக எல்லா மாநிலங்களிலும் இந்தி மட்டுமே அலுவல் மொழியாக நடப்புக்கு வரும். இது பல்வேறு மொழிகளும் பல்வேறு தேசிய இனங்களும் உள்ள இந்தியத் துணைக் கண்டத்தில் வாழும் எல்லா மக்களுக்கும் உள்ள தாய் மொழி உரிமையைப் பறிப்பதாகும்.

(Official Language) இந்திய அலுவல் மொழிச் சட்டம், என்பது உண்மையில் இந்தியத் தாய்மொழிகளை அலுவல் மொழியாக இருக்காமால் அகற்றிவிட்டு அன்னிய மொழியான ஆங்கிலத்தைத் தொடர்ந்து அலுவல் மொழியாக இருக்க வழி செய்வதாகும். இதை ஆச்சாரியார் எப்போதும் ஆங்கிலமே ஒருபோதும் இந்தி வேண்டாம். Hindi Never English Ever என்கிற முழக்கத்தை முன்நிறுத்தி தமிழர்களையும் திராவிட முன்னேற்றக் கழகத்தினரையும் ஏமாற்றிவிட்டார். மறைமுகமாகப் பார்ப்பன ஆதிக்கம் இந்தியா முழுவதும் நீடிப்பதற்குத் தந்திரமாக ஆச்சாரியார் ஏற்பாடு செய்து விட்டார். தந்தை பெரியார் அவர்களும் அறிவியல் வளர்ச்சி வளர்ந்திருக்கிற மொழியாக ஆங்கிலம் இருப்பதால் எல்லா அறிவியல் கலைகளையும் ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்ப்புச் செய்யுங்கள் என்று சொல்லுவதற்கு மாறாக - பிறழ உணர்தல் என்கிற குறைபாட்டுக்கு ஆளாகி Perverted understanding ஆங்கிலமே படிப்பு மொழியாக, வீட்டுமொழியாக இருக்க வேண்டும் என்று அறிக்கை வெளியிட்டது தவறே ஆகும்.

ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் அவனவன் தாய்மொழியிலேயே எல்லாக் கல்வியையும் கற்க வேண்டும். எல்லா மாநிலங்களிலும் அந்தந்த மாநில மொழியே மய்ய அரசு அலுவலங்களில் அலுவல் மொழியாக இருக்க வேண்டும். இதற்கு ஏற்ற வகையில் அரசியல் சட்டம் 17ஆவது பகுதியின் கீழ் உள்ள விதிகள் 343 - 351 முடிய உள்ள எல்லா விதிகளும் அடியோடு திருத்தப்படவேண்டும். இது எழுதுவதற்கும் சொல்வதற்கும் அச்சம் தரும் நிலைப்பாடே ஆகும். ஆனால் இதுதான் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் தேர்ந்த முடிவாகும்.

இந்திய துணைக்கண்ட அளவில் நேரடி நடவடிக்கை எடுத்து, இந்தி பேசாத மாநில மக்களை ஒன்றாகத் திரட்டினாலோழிய இதற்கு நாம் விரும்புகிற தீர்வு கிடைக்காது என்று மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சித் திடமாக கருதுகிறது.

இந்த நிலைப்பாட்டைப் பற்றி தமிழகம் முழுவதும் உள்ள தமிழ்ப் பெருமக்கள் நடுநிலையில் நின்று ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

மேலே கண்ட கருத்துக்களை விளக்கியும் இந்தித் திணிப்பு, சமஸ்கிருதத்திணிப்பு ஆகியவற்றைக் கண்டனம் செய்தும் 2017 சூன் 12 திங்கட்கிழமை அன்று காலை 10 மணி முதல் 1 மணி வரை சென்னை சேப்பாக்கம் அரசினர் விருந்தினர் மாளிகை அருகில் உள்ள திடலில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் அருள் கூர்ந்து. திராவிடத் தேசிய, தமிழ்த் தேசிய இயக்கத்தினரும் தமிழ்ப் பெருமக்களும் கட்சி வேறுபாடு கருதாமல் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்க வேண்டுகிறோம்.

**வே. ஆனைமுத்து**
பொதுச்செயலாளர்



# இந்திய அரசின் இந்தி, சமர்கிருதத் திணிப்புக்கு எதிரான கண்டன ஆர்ப்பாட்டம்

தலைமை :

**வாலாசா வல்லவன்**

சென்னை மாவட்ட செயலாளர்

**கண்ட உரையாற்றுவோர்**

ம.பெ.பொ.க. தோழர்கள்

**சி.நடராசன்**
காஞ்சி மாவட்டச் செயலாளர்

**மோ.சி.சங்கர்**
வேலூர் மாவட்டச் செயலாளர்

**பொ.சுப்பிரமணி**
திருவண்ணாமலை
மாவட்டச் செயலாளர்

**ஆ.கு.ஆறுமுகம்**
விழுப்புரம் மாவட்டச்
செயலாளர்

**இரா.கலியபெருமாள்**
திருச்சி மாவட்டச் செயலாளர்

**இரா.கலியமூர்த்தி**
அரியலூர் மாவட்டச் செயலாளர்

**நாராயணசாமி**
பெரம்பலூர் மாவட்டச் செயலாளர்

**முத்து. அன்பழகன்**
நாகை மாவட்டச் செயலாளர்

**செ.ஆனையப்பன்**
சேலம் மாவட்டச் செயலாளர்

**இரா.திருநாவுக்கரசு**
புதுவை மாநிலச் செயலாளர்

**சா.குப்பன்,**
தொழிலாளரணிச் செயலாளர்

**கோவி இராமலிங்கம்**
மகளிரணி மாநிலச் செயலாளர்

**சி.பெரியசாமி**
துணைப்பொதுச் செயலாளர்

**துரை சித்தார்த்தன்**
துணைப் பொதுச் செயலாளர்

**தோழமை அமைப்பினர்**

**தபசி குமரன்**
தலைமை நிலையச் செயலாளர்
திராவிடர் விடுதலைக் கழகம்

**கரு. அண்ணாமலை**
வடக்கு மண்டல அமைப்பாளர்,
தந்தை பெரியார் திராவிடர் கழகம்

**சின்னப்பா தமிழர்**
தமிழ் கல்வி இயக்கம்

புலவர் **கி.த.பச்சையப்பன்**
ஒருங்கிணைப்பாளர்
தமிழ் உரிமைக் கூட்டமைப்பு

**காஞ்சி அமுதன்,** செயலாளர்
தமிழ் உரிமைக் கூட்டமைப்பு

**தி.ச.குணசேகரன்**
பாவலர் பாவேந்தர்-
பல்லவன் இலக்கியப் பேரவை

**நிறைவுரை**

**க.முகிலன்**
தலைமைச் செயற்குழு உறுப்பினர், ம.பெ.பொ.க.

**வே.ஆனைமுத்து,**
பொதுச் செயலாளர், மா.பெ.பொ.க.

நன்றியுரை : **ப.வடிவேலு,** தலைமை நிலைய மேலாளர்

**அனைவரும் வருக! ஆதரவு தருக!**

**மார்க்கியச் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி** - சென்னை மாவட்டம்.

தொடர்புக்கு : **வாலாசா வல்லன்**

**அலைபேசி : 7299214554, 9444321902**

# ரீடர்ஸ் டைஜஸ்ட் (READERS DIGEST)
## வெற்றியாக வெளியாவதன் உண்மை!

இன்று, உலகிலேயே மிக அதிக மொழிகளில் வெளியாகி, எல்லா நாட்டு மக்களையும் கவர்ந்துள்ள, 'ரீடர்ஸ் டைஜஸ்ட்' பத்திரிகையை, இந்த விதத்தில் ஆரம்பிக்க வேண்டுமென்று, டேவிட் வேலஸ் என்பவருக்கு, 1922இல் முதன்முதலில் தோன்றியது. எப்படிப்பட்ட விஷயங்களைக் கொடுத்தால், வாசகர்கள் ஆவலோடு படிப்பர் என்பது, அவருக்குத் தெரிந்திருந்தது.

பத்திரிகை துவங்கியதில் இருந்து, 35 ஆண்டுகள் வரைக்கும், விலையில் கூட மாறுதல் செய்யவில்லை. இதனால், வாசகர்களிடம் நன்மதிப்பையும், அபிமானத்தையும் பெறமுடிந்தது. அவரவர்க்கு விருப்ப மான பகுதி, இன்ன இன்ன பக்கத்தில் இருக்கும் என்ற நிச்சயமும், வாசகர்களை வெகுவாகக் கவர்ந்தது, அதன் வாசகர்களிடம் இந்தப் பழக்கம், இன்னமும் மாறவில்லை.

இந்த நவீன அவசர உலகில், எதையும் சாவகாசமாக, விரிவாகப் படித்துக் கொண்டிருக்க, பெரும்பாலான வாசகர்களுக்கு, நேரம் கிடைக்காது என்பதை உணர்ந்த டேவிட் வேலஸ், எவ்வளவு விரிவான கட்டுரையையும், சுருக்கி, சுவை குன்றாது, காரம் குறையாது கொடுக்கத் தூண்டினார். இந்தக் கலைத் திறன் தான் இன்றும், 'டைஜஸ்ட்'க்கு உறுதுணையாக இருப்பதுடன், அவரது வெற்றிக்கும் வித்தாக உள்ளது.

இந்தக் கலையில், தம் உதவியாளர்கள் நன்றாகத் தேர்ச்சி பெறும் வரைக்கும், டேவிட் வேலஸ், தாமும் உடனிருந்து, சுருக்கி, செப்பம் செய்யும் கடினமான பணியைச் செய்து வந்தார். பல அரிய கட்டுரைகளைச் செப்பம் செய்வதால், முழு அளவைவிட, அதிக சுவாரசியமாகவே அமைந்திருக்கின்றன.

கடந்த, 1934 முதல், ஒவ்வொரு இதழிலும், புத்தகச் சுருக்கப் பகுதியை வெளியிடத் துவங்கினார் டேவிட் வேலஸ். இது, வாசகர்களுக்கு மிகவும் பிடித்த பகுதியானது. இப்பகுதியில், உலகப் புகழ்பெற்ற நூல்களெல்லாம் சுருக்கமாக வெளிவரலாயின.

வேறொரு புதிய யோசனையும், வேலசுக்குத் தோன்றியது. சிறந்த கட்டுரைகளை நேரடியாக, தாமே முதலில் வெளியிடாமல், 'டைஜஸ்ட்' சார்பில், பிற பத்திரிகைகளுக்கு அனுப்பி, வெளியிட வைத்தார். பின், அவற்றை தமக்கே உரிய தனித்தன்மையில், சுருக்கிச் செப்பனிட்டு, 'டைஜஸ்ட்'டில் வெளியிடலானார். இன்று, 'ரீடர்ஸ் டைஜஸ்ட்'டில் வெளியாகும் கட்டுரைகளில் பெரும்பகுதி, இப்படித்தான் வெளியாகின்றன.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே, 'டைஜஸ்ட்'டில் வெளிவரும் ஒரு துணுக்கிற்கு, நூறு டாலர் சன்மானம் அளித்தனர். பெரிய கட்டுரைகளுக்கு, 7500 டாலர் வரைக்கும் சன்மானம் கொடுத்தனர்.

வாசகர்களுக்கு, வாழ்க்கையில் பிடிமானமும், நம்பிக்கையும், துணிவும் முன்னேறத் துடிப்பும் ஏற்படத் தூண்டுகிற கட்டுரைகளை தான், 'டைஜஸ்ட்'டில் வெளியிடுவது என்பதில் உறுதியாக இருக்கின்றனர். இதுவே, இதன் வெற்றிக்குக் காரணம்.

நன்றி : காலைக்கதிர்-வாரக்கதிர்-சனவரி, 18, 2015

## பெரியாரின் கரிசனம்

ஈ.வெ.ரா. 25 ஆயிரம் ரூபாயை மடியில் கட்டிக் கொண்டு, கோர்ட்டுக்குப் போய், 'இதோ பணம் இருக்கிறது...' என்று சொன்ன சம்பவம் ஒன்று நடந்தது.

என்.எஸ்.கிருஷ்ணனுக்கு, ஒரு வழக்கில் தண்டனை கொடுத்தனர். அன்று தீர்ப்பு சொன்ன போது, ஐகோர்ட்டில் பெரும் கூட்டம்.

ஜாமினில் எடுப்பதானால், பணம் வேண்டியிருக்கும் என்று யாரோ கூறினர். அதைக் கேள்விப்பட்ட ஈ.வெ.ரா. 25 ஆயிரம் ரூபாயை மடியில் கட்டிக் கொண்டு, கோர்ட்டுக்கு வந்தார்.

'இதோ 25 ஆயிரம்... நான் தருகிறேன்; ஜாமினில் எடுங்கள்...' என்றார். ஆனால், ஜாமினில் எடுக்க முடியவில்லை; தவிர்த்துப் போனார், ஈ.வெ.ரா.

அண்ணாதுரை முதல்வரான பின், அவருக்கு சிகிச்சை அளிக்க அமெரிக்கா செல்ல வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. பெரும் அளவில் பணம் செல வாகும் என்று பேச்சு எழுந்தது. அதெல்லாம் அரசு செலவுதான்.

ஆனாலும், ஈ.வெ.ரா. பெருந்தொகையை எடுத்துக் கொண்டு மருத்துவமனைக்கு வந்து, அமைச்சர்கள் மற்றும் சம்பந்தப்பட்டவர்களிடம் தனித்தனியாக, 'எவ்வளவு செலவானாலும், நான் தருகிறேன்...' என்று மன்றாடிய போது கலங்காத கண்களும் கலங்கின.

ஒருபுறம் பொதுப்பணத்தில், ஒரு காசு கூட தொடாத சிக்கன சிகாமணி; மறுபுறம், உற்றவருக்கு ஓடிவந்து உதவும் மனிதாபிமானம். இவை, ஈ.வெ.ரா. எனும் நாணயத்தின் இரண்டு பக்கங்கள்.

நன்றி : காலைக்கதிர்-வாரக்கதிர்
சனவரி, 18, 2015

# அறிஞர் வே.ஆ. "93"

சிறுத்த உடல் ; பெருத்த
அறிவுக் கடல்!
உரத்தக் குரல் ; அலன்றிடும்
ஆதிக்கரின் உடல்!

எறும்மை போன்று உடயக்கம்!
கரும்பை போன்று பண்பிருக்கும்!
ஓய்வை விரும்பாத ஒப்பற்றவர்!
சாய்ந்து எவரிடமும் பணியாதவர்!

பார்பனியத்திற்கு சம்மட்டி!
சாதியத் திமிருக்கு ஈட்டி!
மானுட விடுதலைக்கு வழிகாட்டி!

மார்க்சியமும்; பெரியாரியமும்;
உயிர் மெய்யவர்!
சமத்துவ சமூகநீதியே;
வாழ்வாய் கொண்டவர்!

மண்டலை அமைக்கத் தூண்டியது;
இவரின் மன்டைதான்!
விகிதாச்சார பங்கீடு கேட்டது;
இவரின் தொண்டைதான்;

பெரியாரின் சிந்தனைகளை தந்தவர்;
கருத்தின் கருவூலமாய் ஆனவர்!
மோசடி இந்திய சட்டத்தை
தோலுரித்தவர்!
சட்டநகல் எரிப்பில் சிறைபட்டவர்!

இந்திய கூட்டாட்ச்சியே
இவரின் இலக்கு !
தன்னுரிமைத் தமிழ்நாடே
இவரின் கணக்கு !

– நா. மதனகவி

## நூல் வெளியீடு



முனைவர் சு.மீனாட்சி சுந்தரத்தின் நெசவு கவிதை நூல் வெளியீடு மற்றும் வேலாயுதம் பேசுகிறேன் நூல் அறிமுக விழா திருவண்ணாமலையில் மே மாதம் 21-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் ஆண்டாள் சிங்காரவேலு மண்டபத்தில் உள்ள குறளகத்தில் நடைபெற்றது. கவிதை நூலை திரு.ப. நடராஜன் அவர்கள் வெளியிட மரு.தெ.வேலாயுதம், திரு.வீ.மதிஅழகன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். திரு.ஏழுமலை, திரு.சி.எஸ்.துரை, பாவலர் வையவன் ,மருஅ.கிருபாகரன் மற்றும் அகம் அ.நாராயணன் ஆகியோர் விழாவில் கலந்து கொண்டனர்.

**"இந்திய அரசியலும் - தமிழ்நாட்டு அரசியலும் : அடிமரத்தை வெட்டத் துப்பின்றி விளாறுகளை வெட்டுவது போதுமா?"**

என்னும் தலைப்பில்

**வே. ஆனைமுத்து** எழுதும் அரசியல் தொடர் கட்டுரை 2017 ஆகத்து முதல் "**சிந்தனையாளன்**" இதழில் வெளிவரும்.

- ஆசிரியர் குழு

## இலவசம் இதற்கு வேண்டும், இதற்கு வேண்டாம்

நம்நாட்டில் மத்திய அரசும் மாநில அரசுகளும் தங்களின் பதவிக்காலத்தை நிரந்தரமாக காப்பாற்றி கொள்ள எதை வேண்டுமானாலும் செய்கின்றனர். பொதுப் பாதிப்புகளை மறக்க புதுப்பிரச்சனைகளைக் கிளப்பி திசை திருப்புகின்றன. கோடி கோடியாக ஊழல் செய்த அரசியல்வாதிகள் முழு தண்டனையைப் பெறவில்லை. பத்திரப்பதிவு ஊழல், முத்திரைத்தாள் ஊழல், பாலில் தண்ணீர் கலப்பட ஊழல், நீர்நிலைகளைக் கட்சிக்காரர்களே ஆக்கிரமித்து அழித்தது, சாதாரண அரசு ஊழியன் முதல் தலைமைச் செயலாளர் வரை லஞ்சம், ஊழல் வறட்சி நிவாரணம், வெள்ள நிவாரணம் கொடுக்காமலே கொடுத்தாகக் கணக்குக் காட்டும் ஊழல் போன்றவை, தூங்கிக் கிடக்கும் மொழிப் பிரச்சனைகளைத் தூசிதட்டிக் கிளப்பிவிட்டாலே அனைத்து ஊழலும் மறைக்கப் படும், போபர்ஸ் ஊழல், நிலக்கரி ஊழல் பெட்ரோல் துறை ஊழல், ஸ்பெக்ட்ரம் ஊழல் போன்றவை, உயர் அதிகாரிகளும், ஆளும் கட்சியினரும் ஊழல் பெருச்சாளிகளாக இருப்பதைக் காட்டுகின்றன.

ஊழல் அரசியல்வாதிகளால் மட்டுமே ஓட்டு வாங்க வாக்காளர்களுக்கு இலவசமாக பணம், பொருள்கள், ஆடு, மாடு போன்றவற்றை கொடுக்கமுடியும். நல்ல அரசால்தான் இலவசமாகச் சமச்சீர் கல்வி, சரியான மருத்துவம், சுத்தமான குடிநீர் கொடுக்க முடியும். கல்வி வியாபாரம் தமிழகத்தில் பெரும்பான்மையான நிறுவனங்கள் அரசியல்வாதிகளின் பினாமி நிறுவனமாகத்தான் உள்ளது. கல்வி வியாபாரம் ஒழிய அனைத்துக் கல்வி நிறுவனங்களையும் அரசே ஏற்று நடத்தவேண்டும்.

குடிநீர் 1 லிட்டர் ரு.10 முதல் ரூ.20 வரை விற்கின்றனர். குடிநீர் சுத்தம் செய்ய 100 லிட்டருக்கு ரூ.20/- மட்டுமே செலவு ஆகிறது. இதை மக்களுக்கு இலவசமாக வழங்கவேண்டும். நல்ல மருத்துவம் அனைத்தும் அரசே இலவசமாகக் கொடுக்க வேண்டும். மக்கள் இப்பொழுதெல்லாம் பல வழிகளில் வரி கட்டுகின்றனர். வருவாயும் போதுமானதாக உள்ளது. ஊழல் செய்யாமல் வரிப் பணத்தைச் செலவு செய்தால் பச்சைத் தமிழன் காமராசர் ஆட்சியைவிட நல்ல பெயர் எடுக்கலாம்.

வேண்டாத வியாபாரம் மது வியாபாரம். இப்பொழுது அனைத்து மக்களும் விரும்பாத மது வியாபாரத்தை மக்கள் மீது வருவாய்க்கு நடத்துகின்றோம் என்று கூறி மதுக் கடைகளை மூடாத அரசு வேண்டவே வேண்டாம். சமச்சீர் கல்வி கொடுக்காத அரசு வேண்டவே வேண்டாம். நல்ல மருத்துவம் கொடுக்காத அரசு வேண்டவே வேண்டாம். நல்ல குடிநீர் வழங்காத அரசு வேண்டவே வேண்டாம். ஊழல் அரசியல்வாதியும் அரசு அதிகாரியும் வேண்டவே வேண்டாம். உழவரைக் காப்பாற்றாத அரசு வேண்டவே வேண்டாம்.

**- உழவர் மகன் ப.வ.**

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி சூன்-2017

| | | |
|---|---|---|
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| **இரா. குப்புசாமி** | கரூர் | 1000/- |
| **க. ஆதிமூலம்** | கீழ்பென்னத்தூர் | 1000/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 500/- |
| **தமிழேந்தி** | அரக்கோணம் | 500/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| **கே. தினகரன்** | பொழிச்சலூர் சென்னை | 500/- |
| **பகுத்தறிவாளன்** | திருப்பத்தூர் | 250/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| பேரா. **ச.பொ.சீனிவாசன்** | மூணாறு | 200/- |
| **மரு. வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| சென்ட்ரிங் **இரா.ப. கோவிந்தன்** | தாம்பரம் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **நா. மதனகவி** | வாணியம்பாடி | 100/- |
| **இ. கபிலன்** | சிதம்பரம் | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **கோ.நக்கீரன்** | சோளிங்கபுரம் | 100/- |
| **க.பிரபாகரன்** | தஞ்சாவூர் | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - சூன்-2017

| | | |
|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் | .... 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அறிவுக்கடல் ராஜ்குமார்** | சிதம்பரம் | .... 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... 100/- |

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர், எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு, அம்பத்தூர், சென்னை - 53.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம்,** சென்னை-53. ☎ : 044-2625 2119